மின்தமிழ் மேடை

"தமிழின் தொன்மையை அறிவோம் அதன் வரலாற்றைக் காப்போம்"

தமிழ் மரபு அறக்கட்டளை (www.tamilheritage.org)

வெளியிடும் காலாண்டு மின்னிதழ்

மின்தமிழ்மேடை - காட்சி: 7

அக்டோபர் - 2016

THF

மின்தமிழ் மேடை

காட்சி: 7

அக்டோபர் - 2016

“தமிழின் தொன்மையை அறிவோம் அதன் வரலாற்றைக் காப்போம்”

முன்அட்டைப் படம்:

தளவானூர் குடைவரைக்கோயிலில் தமிழ் மரபு அறக்கட்டளையின் களப்பணியாளர்கள்

THF

தமிழ் மரபு அறக்கட்டளை

தமிழ் மரபு அறக்கட்டளை வெளியீடு

http://www.tamilheritage.org/

இதழ் தொகுப்பு: தேமொழி

தலையங்கம்: தமிழ் மரபு அறக்கட்டளையின் மொழி சார்ந்த ஆய்வுகள், வரலாற்றுப் பாதுகாப்பு முயற்சிகள்

வணக்கம்.

மொழி சார்ந்த ஆய்வுகள், வரலாற்றுப் பாதுகாப்பு முயற்சிகள் என்பன பன்முகத் தன்மை கொண்ட நடவடிக்கைகளின் வழியாகத்தான் சாத்தியப்படுத்த இயலும். இன்றைய கால சூழலில் வரலாற்று தொன்மங்களைப் பாதுகாக்கத் தொழில்நுட்பம் சார்ந்த சாதனங்களைப் பயன்படுத்துவது என்பது பெருகத் தொடங்கிவிட்டது. இன்று மின்னாக்கம், டிஜிட்டல் பதிவுகள் என்பன முயன்றால் எளிதில் சாதிக்கக்கூடிய சாத்தியக்கூறுகள். இவை துறை சார் அறிஞர்கள் அல்லது வல்லுநர்களுக்கு மட்டுமன்றி சாமானியர்களுக்கும் சாத்தியமே எனும் வளர்ச்சி நிலை வந்துவிட்டதைக் காண்கின்றோம்.

அதற்கு நல்ல உதாரணமாக அமைவது கைத்தொலைபேசி சாதனமே. வயது வேறுபாடு, பொருளாதார நிலை வேறுபாடு என்ற எல்லைகளைக் கடந்து கைத்தொலைபேசி பயன்பாடு என்பது பொதுமக்கள் மத்தியில் பெருகிவிட்டது. இக்கைத்தொலைப்பேசியைக் கொண்டு புகைப்படங்களும் விழியப்பதிவுகளும், ஒலிப்பதிவுகளும் எடுத்து அவற்றைத் தம்மைச் சார்ந்தோரிடையே பகிர்ந்து கொள்வது என்பது இன்று வழக்கமாகிவிட்ட நிலை என்பது கண்கூடு. இது தொழில்நுட்பப் புரட்சி ஊடகத்துறையில் ஏற்பட்டிருக்கும் ஒரு மாபெரும் மாற்றம். இதனைக்காணும் போது வரலாற்றுப்பாதுகாப்பு தொடர்பான முயற்சிகளில் தம்மளவில் ஈடுபட விரும்பும் எல்லோருமே தங்களால் பங்களிக்க முடியும் என்ற நிலை வந்துள்ளது. வரலாற்று ஆர்வலர்கள், தங்கள் கைத்தொலைபேசியைக் கொண்டே புராதன சின்னங்களைக்காணும் போது அவற்றைப் புகைப்படம் எடுத்தல், அவற்றை விழியப் பதிவாக்கி யூடியூப் பக்கத்தில் வலையேற்றுதல் என்பன போன்ற வகையில் தகவல் சேகரித்து தமிழ் மரபு அறக்கட்டளையின் செயல்பாடுகளுக்குத் தம்மால் இயன்ற வகையில் பங்களிக்கலாம்.

வரலாற்றுப் பாதுகாப்பு எனும் ரீதியில், தமிழ் மரபு அறக்கட்டளை எனும் இந்த நிறுவனம் கடந்த சில மாதங்களில் சீரிய சில முயற்சிகளை முன்னெடுத்துச் செயலாற்றி வருகின்றோம். அதில் குறிப்பிடத்தக்கனவாக இருப்பவை இரண்டு.

முதலாவதாக, தமிழ் மரபு அறக்கட்டளையின் வரலாற்று, ஆவண பாதுகாப்பு மின்னாக்கத்திட்டத்தின் தொடர் நடவடிக்கைகளில் ஒன்றாக கூகிள் நிறுவனத்தின் கூகிள் கலாச்சார மையத்துடன் (Google Cultural Institute) தமிழ் மரபு அறக்கட்டளை புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டிருக்கின்றோம். இது நமது முயற்சிகளில் மேலும் ஒரு மைல்கல். இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி தமிழ் மரபு அறக்கட்டளையின் தேர்ந்தெடுக்கப்பட டிஜிட்டல் ஆவணங்கள் கூகிள் கலாச்சார மையத்தில் தனிப்பகுதியில் வெளியிடப்பட்டு , இணைய வாசிப்பாளர்களை அணுகும் வகையில் எல்லா ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படும் இதன் வழி விரிவான ஆய்வுக்கூடங்களையும் ஆய்வாளர்களையும் தமிழ் மரபு அறக்கட்டளையின் மின் சேகரங்கள் சென்றடையும் வாய்ப்பு அமைந்துள்ளது.

அடுத்ததாக, டென்மார்க்கின் கோப்பன்ஹாகன் அரச நூலகத்தில் கடந்த மே மாதம் நான் நேரில் சென்று மின்னாக்கம் செய்து வந்த ஓலைச்சுவடி மின் பதிவுகளை வாசித்து அதனைப் பதிப்பிக்கும் முயற்சியைத் தொடங்கியுள்ளோம். ஃபெட்னா 2016 நிகழ்வில் நான் கலந்து கொண்ட போது அறிமுகமான தன்னார்வலர்கள் சிலரது ஒத்துழைப்பினால் இந்த முயற்சி சீரிய வகையில் தற்சமயம் முன்னெடுக்கப்படுகின்றது.

ஊர்க்கூடித்தேர் இழுத்தால் தானே மாற்றத்தைக் காண முடியும். அப்படி ஒரு மாற்றத்திற்கு நாமே முன்னுதாரணமாக இருப்போமே. இணைந்து செயலாற்ற வாருங்கள்!

என்றும் அன்புடன்
முனைவர் சுபாஷிணி
[தமிழ் மரபு அறக்கட்டளை]

***

இந்த இதழில் ..... தமிழின் தொன்மையை அறிவோம் அதன் வரலாற்றைக் காப்போம் .....

(மின்தமிழ்மேடை வலைத்தளத்தில் ஜூலை 16, 2016 முதல் அக்டோபர் 15, 2016 வரை பதிவான படைப்புகளின் தொகுப்பு)

எண்	பதிவு	பக்கம்
	தலையங்கம் - முனைவர் சுபாஷிணி தமிழ் மரபு அறக்கட்டளையின் மொழி சார்ந்த ஆய்வுகள், வரலாற்றுப் பாதுகாப்பு முயற்சிகள்	ii
1	கூகுள் (Google) கலாச்சார மையத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது! - முனைவர் சுபாஷிணி	1
2	இறைவன் - இராம.கி.	2
3	தெற்கிலந்தைக் குளம் மாரியம்மன் கோயில் - இலந்தையார்	11
4	கழுந்திரட்டு - வழிபாடு - முனைவர் வே. கட்டளை கைலாசம்	15
5	மருங்கூர் - சங்ககாலக் கடற்கரைப்பட்டினம் - சொ. சாந்தலிங்கம்	20
6	மண்ணின் கீழ் அடியில் சென்ற கீழடி - சிங்கநெஞ்சம் சம்பந்தம்	24
7	கயவாகு காலம்காட்டி முறைமை - எனது கருதுகோள் - முகுந்தன்	31
8	கருப்பும் கறுப்பும்! - நூ.த.லோக சுந்தரம்	41
9	கோண்ட்வானா - சிங்கநெஞ்சம் சம்பந்தம்	45
10	விளக்குத் தூண் மதுரை பழம் புகைப் படம் ஓர் ஆய்வு - நூ.த.லோக சுந்தரம்	49
11	உதகை வாழ் தோடர் இன மக்கள் - பிரிட்டிஷ் லைப்ரரி படங்கள் - தேமொழி	52
12	சாத்தனூர் கல்மரம் - சிங்கநெஞ்சம் சம்பந்தம்	61
13	சேரிகளின் தோற்றம் - அம்பேத்கரின் கருத்துக்கள் விரிவான தளத்தில்... - கௌதம சன்னா	67
14	கச்சத்தீவு - ஒரு மீள்பார்வை - மூன்று ஆங்கில நூல்கள் மூலம் - கே.ஆர்.ஏ. நரசய்யா	76
15	ஐரோப்பாவில் அச்சான முதல் தமிழ் ஆவணம் - சிங்கநெஞ்சம் சம்பந்தம்	80
16	காந்தியார் கண்ணில் தொட்டு ஒற்றிக்கொண்ட தமிழ் மண் - பேராசிரியர் நாகராசன்	83
17	மறைமலை அடிகள் - மாயோன் .டி. எஸ்.	85
18	ஆஜ்மீர் தேக்ஸாக்கள் - சிங்கநெஞ்சம் சம்பந்தம்	87
19	கபாலியும் மலேசியர்களும் - நிர்மலா ராகவன்	91
20	ஒற்றுமை காண்போம் ..... அதில் வெற்றியும் காண்போம் .... - தேமொழி	95
21	ஆகஸ்டு பதினைந்தே வருக வருக! - ருத்ரா இ.பரமசிவன்	104
22	பெரியவா - ருத்ரா இ.பரமசிவன்	105
23	ஒரு தரிசனம் - ருத்ரா இ.பரமசிவன்	107
24	தேடிக்கொண்டிருக்கிறேன் - ருத்ரா இ.பரமசிவன்	108
25	மதம் - ருத்ரா இ.பரமசிவன்	110
26	என்னை உரித்துக்கொண்டு ... - ருத்ரா இ.பரமசிவன்	110
27	உன்னோடு நானிருந்த பொழுதுகள் - காசுமி	111
28	தமிழ் மரபு அறக்கட்டளையின் வெளியீடுகள்	112

1. கூகுள் (Google) கலாச்சார மையத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது!

தமிழ் மரபு அறக்கட்டளை - கூகுள்(Google) கலாச்சார மையத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது!

தமிழ் மரபு அறக்கட்டளை நண்பர்களுக்கு வணக்கம்.

தமிழ் மரபு அறக்கட்டளையின் வரலாற்று, ஆவண பாதுகாப்பு மின்னாக்கத்திட்டத்தின் தொடர் நடவடிக்கைகளில் ஒன்றாக இன்று கூகுள் நிறுவனத்தில் கூகுள் கலாச்சார மையத்துடன் (Google Cultural Institute) தமிழ் மரபு அறக்கட்டளை புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட்டிருக்கின்றோம் என்ற நற்செய்தியை மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி தமிழ் மரபு அறக்கட்டளையின் தேர்ந்தெடுக்கப்பட டிஜிட்டல் ஆவணங்கள் கூகுள் கலாச்சார மையத்தில் தனிப்பகுதியில் வெளியிடப்படும். இவை கூகுள் நிறுவனத்தால், இணைய வாசிப்பாளர்களை அணுகும் வகையில் எல்லா ஏற்பாடுகளையும் கூகுள் நிறுவனமே பொறுப்பெடுத்துக் கொள்ளும்.

இதற்காக ஒரு பிரத்தியேகக் குழுவை நாம் அமைக்கின்றோம். இந்தச் செயற்பாடு தொடர்பான தொடர் நடவடிக்கைகளை அவ்வப்போது பகிர்ந்து கொள்கின்றேன்.

கூகுள் நிறுவனத்தார் தமிழ் மரபு அறக்கட்டளையின் பணிகள் மீது கொண்டிருக்கும் நம்பிக்கையும் ஆர்வமும் மகிழ்ச்சியளிக்கின்றது.

இது தமிழ் மரபு அறக்கட்டளையின் பயணத்தில் ஒரு முக்கிய மைல்கல். நமது பணிகளை இனிதே தொடர்வோம்!

என்றும் அன்புடன்
முனைவர் சுபாஷிணி
[தமிழ் மரபு அறக்கட்டளை]

***

2. இறைவன்

– இராம.கி

தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - பெயரியலின் 640 ஆம் நூற்பா "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்று புகலும். அதே தொல்காப்பியர் 641 ஆம் நூற்பாவில்,

"பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
சொல்லின் ஆகும் என்மனார் புலவர்"

என்று சொல்லுக்குத் தொடர்பாய்ப் பொருண்மை, சொன்மைப் பின்புலங்களைக் காட்டுவார். காட்டாக, "வந்தார்கள்" - வருதற் பொருண்மை. "வந்தது" என்ற இறந்த காலக் குறிப்பும், பலர்பாற் குறிப்பும் சொன்மை வகைக்குள் அடங்கும். கள் என்னும் பன்மை "வந்தவர் மதிப்புள்ளவர்" என்றுணர்த்தும். எந்தச் சொல்லோடும் பொருண்மை, சொன்மை ஆகியவற்றை பொருத்தினாற்றான் சொல்லின் முழுப் பொருளும் விளங்கும். சிலபோது வெளிப்படாது போதலும் உண்டு. "போயும் போயும் இவனைக் காளைன்னு சொன்னாங்களே?" என்னும் போது "தெரிபு நிலை வேறு, குறிப்பு நிலை வேறு."

"தெரிபு வேறு நிலையலும் குறிப்பின் தோன்றலும்
இருபாற் றென்ப பொருண்மை நிலையே"

என்றும் 642 ஆம் நூற்பாவில் தொல்காப்பியர் குறிப்பிடுவார். தமிழின் பன்னூறாண்டுப் புழக்கத்திற் சொல்லின் பொருண்மை எப்பொழுதும் ஒரே மாதிரி இருந்ததில்லை. அது சங்க காலத்தில் ஒன்றாகவும், சமயகாலத்தில் இன்னொன்றாகவும் இருந்திருக்கிறது. பேரரசுச் சோழர் காலத்திலும், அண்மையிலும், அது இன்னும் மாறியிருக்கிறது. மாறாதும் இருக்கிறது. மாறிய சொல்லான "இறைவன்" என்பதை இக்கட்டுரையிற் பார்ப்போம்.

"பின்னை நின்று என்னே பிறவி பெறுவது?
முன்னை நன்றாக முயல்தவம் செய்திலீர்;
என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே"

என்று திருமந்திரம் பாடிய காரணஞ் சொல்லுவார் திருமூலர் (திருமந்திரம், வரலாறு 63 ஆம் பாடல்). பொதுவாய்த் திருமந்திரத்தில் இறைவன், இறையவன் என்ற சொற்கள் ஏராளமாய் ஆட்சிகொள்ளும். "இறைவனுக்கு" இற்றைக் காலத்தில் கடவுள் (திருமால், சிவன், நான்முகன், அல்லா இன்னும் வெவ்வேறு பெயர்கள்) என்ற

பொருளையே கொள்ளுகிறோம். இன்னொரு பொருளான தலைவன் (அரசன், கணவன், மூத்தோன், தமையன், குரு), அகரமுதலிகளில் பதிவாக மட்டுமேயிருக்கிறது. அன்றாடப் புழக்கிலில்லை. அந்தப் பொருளில் தலைவன் என்பதையே இப்பொழுது ஆளுகிறோம்.

ஆழ்ந்து பார்த்தால் கடவுள் என்ற பொருண்மை சங்க கால முடிவிற் தொடங்கி [காண்க: “நுதல் விழி நாட்டத்து இறையோன் கோயிலும்” - என்னும் சிலப்பதிகாரம் ஊர்காண் காதை 7ஆம் வரி - சிவனைக் குறிக்கும் குறிப்பு. நுதல்விழி நாட்டத்துத் தலைவன் என்றாலும் பொருள் சிவனையே குறிக்கிறது.], சமய காலத்திற்றான் பரவலாகப் புழக்கத்திற்கு வந்திருக்கிறது. சங்க காலத்தில் “தலைவன்” என்பதே பெரிதும் விரவியிருந்தது. சங்கம் மருவிய காலத்திலும் தலைவனைக் குறித்தது தொடர்ந்திருக்கிறது. காலவோட்டத்தில் தலைவன் பொருளாட்சி நீண்டு, கடவுட் பொருண்மை ஏற்பட்டிருக்கிறது. [கோயில்/கோவில் என்பதன் பொருண்மையிலும் இதுபோற் குழப்பம் உண்டு - அரசன் வீடா, தெய்வ இருப்பிடமா? இதே போலப் பகவன் (lord) என்ற சொல்லும் தலைவனையே முதலிற் குறித்திருக்கிறது. “அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றேயுலகு” என்ற குறளில் பகவன் என்ற சொல் தெய்வத்தைக் குறிப்பதாய் ஆய்வாளர் சொல்வதில்லை. அதைச் சற்று கீழே பார்ப்போம்.]

சிலம்பில் கடவுட் பொருண்மை கொஞ்சங் கொஞ்சமாய் விரிகிறது. பார்க்க வழக்குரை காதை 36-40

வெற்றி வேல் தடக்கைக் கொற்றவை, அல்லள்;
அறுவர்க்கு இளைய நங்கை, இறைவனை
ஆடல் கண்டருளிய அணங்கு, சூர் உடைக்
கானகம் உகந்த காளி, தாருகன்
பேர் உரம் கிழித்த பெண்ணும், அல்லள்;

இன்னொரு சான்று பார்க்க: அழற்படு காதை 86-87 [வேங்கடசாமி நாட்டார் அழற்படு காதையின் பல அடிகள் இடைச்செருகல் என்று ஐயுறுவார்.]

கிழவன் என்போன் கிளர் ஒளிச் சென்னியின்
இளம் பிறை சூடிய இறையவன் வடிவின் ஓர்

மொத்தமாய் எல்லாம் வல்ல பரம்பொருட் பொருண்மை கிட்டத்தட்ட கி.மு.75 க்கு அருகில் இறைவன் என்ற சொல்லிற்கு வந்தது போலும். [சிலம்பின் காலம் கி.மு.75 க்கு அருகில் என்று என் முந்தைய ஆய்வில் உறுதி செய்தேன். பார்க்க: சிலம்பின் காலம் என்ற தொடர். சிலம்பிற்கு 25 ஆண்டுகள் கழித்து கி.மு.50 இல் பெரும்பாலும் கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதி காலத்தில் பரிபாடல் தொகுக்கப்

பட்டிருக்கலாம். பார்க்க: http://valavu.blogspot.com/2010/06/2.html. கலித்தொகையும் சிலம்பையொட்டியோ, சிலம்பிற்குப் பின்னோ தொகுக்கப் பட்டிருக்கலாம்.]

கி.மு.75 -ற்கு முந்தைய சங்கப் பாடல்களில் தலைவன் (lord) என்ற பொருளே பெரிதும் பயின்று வந்திருக்கிறது. இப்பொருள் நீட்சி கடவுள், பகவன் என்ற சொற்களிலும் இருக்கின்றன. கடவுள் என்ற சொல்லும் முதலிற் தலைவனையே குறித்தது. பின்னாற்றான் எல்லாம் வல்ல பரம்பொருளைக் குறித்தது. பகவன்(> பகவான்) என்ற சொல்லும் வடபுலங்களில் பெரிதும் ஆளப்பட்ட சொல்; இதுவும் சமயத் தலைவனையே குறித்தது. ஆங்கிலத்தில் great lord என்று சொல்கிறார்களே, அதுவும் பகவனும் ஒரே பொருள். புத்தரைப் பகவான் என்றே அவரைப் பின்பற்றியோர் அழைப்பர். மகாவீரரும் இப்படி அழைக்கப் பட்டார். இந்தக் காலத்தில் வடபுலத்தில் ஏராளமான சாமியார்களைப் பகவான் என்றே அழைப்பர். தென்புலத்தில் அப்படி அழைப்பது மிகக் குறைவு. எல்லாம் வல்ல பரம்பொருள் மட்டுமே பகவன் என்று தெற்கே நாம் எண்ணிக் கொள்வோம். இதே போலப்

“பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்”

என்ற குறளில் இறைவன் என்ற சொல் “எல்லாம் வல்ல பரம்பொருளைக் குறித்ததா?” என்றால், “அல்ல, சமயத் தலைவனைக் (தீர்த்தங்கரரைக்) குறித்தது” என்று சொல்ல வேண்டியிருக்கிறது. திருக்குறளை ஆய்ந்தறிந்தோர், அதைச் சமண நூல் என்றே சொல்லுவர். (இது ஆசீவகம், செயினம், புத்தம் என்றவற்றில் ஏதொன்றாகவோ, அல்லது அவற்றின் கலவையாகவோ இருக்கலாம். அந்த உரையாடலுக்குள் நான் போகவில்லை. ஆசீவகம் என்று சொல்லப் புகுவதை பல செயினரும் மறுப்பர். அதே நேரம் ஆசீவகம் என்று ஆய்வதில் புதிய பார்வைகள் நமக்குத் தோன்றுவதையும் மறுக்க முடியவில்லை.) சமணம் என்று ஏற்கத்தயங்குவோர் குறளைச் சிவநெறி நூல், எந்த மதமுஞ் சாராத பொதுநூல், தமிழர் நூல் என்றெல்லாஞ் சொல்லுவர். [திருக்குறளின் கருத்தைத் தம்வயப்படுத்தி ஒவ்வொருவருஞ் சொந்தங் கொண்டாடுவதே அதன் சிறப்பு போலும்.]

ஆசீவகம், செயினம், புத்தம் என்னும் இம்மூன்று நெறிகளும் “எல்லாம் வல்ல பரம்பொருள் உண்டு” என்பதை நம்பாத அல்லது அக்கேள்வி பற்றிக் கவலா மதங்கள். அதேபொழுது “ஆன்மாக்களுக்குத் தனியே இருப்புண்டு” என்று நம்புபவை. (ஆன்மாவை முற்றிலும் மறுத்தது உலகாய்தமும், அதன் வழிவந்த சாருவாகமும், தொடக்க காலச் சாங்கியமுமே. பிற்காலச் சாங்கியம் ஆன்மாவை ஏற்றுக் கொண்டது.) “ஊழ், வினைப்பயன், தவம் என்பதைப் பொறுத்து ஒவ்வொரு ஆன்மாவும் இவ்வுலகில் வெவ்வேறு உடம்போடு மீண்டும் மீண்டும் பிறந்து உழல்கிறது. பிறப்பும், அது தொடர்ந்த மாந்த வாழ்வும் துன்பமானதே. (இன்னாதம்ம இவ்வுலகம். இனிய காண்க அதன் இயல்புணர்ந்தோரே! - ஆழ்ந்த ஆசீவகப் பாடல். புறநானூற்றிற் பல பாடல்கள் ஆசீவகத் தோற்றம் காட்டுகின்றன. அதை இன்னொரு நாள் சொல்லுவேன்.

) மீண்டும் பிறவாமை என்பதே வீடுபேறு" என்று அடிப்படைக் கருத்தை இம்மூன்று நெறிகளும் மிக்குயர்ந்த உண்மையாய் உரைக்கும். நாளாவட்டத்தில் "மீண்டும் பிறவாத வீடுபேறு" என்ற கருத்தியல், எல்லாம் வல்ல பரம்பொருளை நம்பும் மதங்களுக்கும் உகந்த கருத்தாய் ஆகிவிட்டது.

எல்லாம் வல்ல பரம்பொருளின் மேல் நம்பிக்கை கொண்டிருந்த மதங்களைப் பல்வேறு ஏரணக் கேள்விகள் (logical questions) போட்டு, கிடுக்கி (criticise), மேலே சொன்ன சமண நெறிகள் தாக்க, அதன் விளைவால் நம்பா மதங்களின் மெய்யறிவியற் தெரியனங்கள் (>தெரிசனங்கள்), கொள்கைகளைத் தங்களுக்குத் தகுந்தாற்போல் நம்பும் மதங்கள் கொஞ்சங் கொஞ்சமாய்த் தன்மையம் ஆக்கிக் கொண்டன. இன்றைக்கு இந்தியச் சூழ்நிலையில் நம்பும் மதங்களில் நாம் பார்க்கும் மெய்யியற் கோட்பாடுகள் பலவும் எதிர்ப் பக்கத்தில் எழுந்து இன்னொரு பக்கம் செரிக்கப் பட்டவை தாம். தொடக்கத்தில் இருந்தவையல்ல. வேதாந்தத்தின் உச்சமாய்ச் சொல்லப்படும் உபநிடதங்களின் பார்வை கூட இந்த ஊடாட்டங்களில் உருவான எதிர்வினைப் பார்வை தான்.

காட்டாக, வினைப்பயனை (karma) ஏற்காது, வினை மறுத்து (அகிரியா வாதம் பேசி) ஊழ் (pre-ordination), சூழ்நிலை (environment), இயல்பு (inherent quality), அணுவியம் (atomic nature of the bodies) என்பவற்றையே ஆழ்ந்துரைக்கும் ஆசீவகம் மொத்தம் 84 இலக்கத்திற்கு வெவ்வேறு வகையான உயிரிகள் (பிறப்புக்கள்) இம் மன்பதையில் உண்டென்று பேசும். ஊழைக் காட்டிலும் வினைப்பயனை அழுத்திப் பேசும் செயினம் (தற்செயல், அணுவியம் போன்றவற்றை செயினம் முழுவதும் மறுப்பதில்லை.) 84 இலக்கம் பிறப்புக்கள் என்பதை மேலோட்டமாய்ச் சொன்னாலும், ஓர் ஆன்மா புகுந்து செல்லும் பிறப்புக்களின் எண்ணிக்கையை, வினைப்பயனை, "கொல்லாமை, வாய்மை, கள்ளாமை, அவாவின்மை" ஆகிய நாலு யாமங்களாலும், இடைவிடா அணு வதையாலும் (அண்ணுதல் = நெருங்குதல்; அணு = நெருங்கிய; வதை = வதம்>வரதம்) குறைக்கமுடியும் என்று புகலும். வினைப்பயனை ஏற்கும் புத்த நெறியோ 84 இலக்கம் பிறப்புக்கள் என்பதற்கு அவ்வளவு முகன்மை தராது. நம்பா மதங்களின் இம்முடிபைச் (84 இலக்கம் பிறப்புகளை) சிவநெறியை அழுத்திச் சொல்ல வந்த திருமூலர் கூட ஏற்றுக் கொள்ளுகிறார் (திருமந்திரம், சருவ சிருட்டி, 218 ஆம் பாடல்) என்பது திருமந்திரம் படித்தாற் புரியும்.

நம்பா மதங்களின் 84 இலக்கம் பிறப்புக்கள் பற்றிய செய்தி நம்பும் சிவநெறிக்குள் (திருமந்திரத்துள்) எப்படி வந்தது? புரியவில்லை. [இந்திய மெய்யியலில் "84 இலக்கம் பிறப்புக்களுக்கு ஏன் இப்படி முகன்மை எழுந்தது?" என்பது சற்று வியப்பாகவே இருக்கிறது. இப்படித்தாம் சாங்கியக் கொள்கைகள் நம்பா மதத்தில் எழுந்து, முடிவில் நம்பும் மதங்களின் ஊடே உலவத் தொடங்கின. பொதுவாய் இந்திய மெய்யியற் கோட்பாடுகள் பலவற்றிற்கும் இருபுறத் தன்மையுண்டு. ஆழ்ந்து ஆய்ந்தோரே அவற்றின் தொடக்கத்தை அறியமுடியும்.]

“கடவுள் வாழ்த்து” என்ற சொற்கட்டுக் கூடச் சங்க காலத்திற் கிடையாது. சங்க நூல்களில் வரும் கடவுள் வாழ்த்துகள் அவற்றின் தொகுப்புக் காலத்திலோ, அதற்குப் பின்னாலோ, பின்னொட்டாய்ச் சேர்த்தவை என்றே ஆய்ந்தோர் சொல்லுகிறார்கள்.

சரி, இறைவன் என்ற சொல்லிற்குத் திரும்ப வருவோம். இறை என்ற சொல்லின் நீட்சியே இறைவன் என்பதாகும். கடவுள்(திருமால், சிவன், நான்முகன்), தலைவன் (அரசன், கணவன், மூத்தோன், உயர்ந்தோர், தமையன், கணவன், குரு) என்ற பொருட்பாடுகள் இறைவன் என்ற சொல்லுக்கு இருப்பது போற் இறை என்ற சொல்லிற்கும் இருக்கின்றன. பரம்பொருள், தலைவன் தவிர, “உயரம், தலை, தலைமை, நடுவுநிலைமை, கடமை, முன்மை” என்ற தலைமைப் பண்பையொட்டிய இரண்டாம் வழிப் பொருள்கள் இறை என்ற சொல்லிற்கு மேலுஞ் சொல்லப்படுகின்றன. “இறை என்ற சொல் தலைவனுக்கெப்படி ஏற்பட்டது?” என்று தெரிந்தால், “இரண்டாம் வழிப் பொருள்கள் எப்படியேற்பட்டன?” என்பது விளங்கிப் போகும்.

அகரமுதலியில் மேலேயுள்ள பொருட்களை ஒதுக்கிப் பார்த்தால், இறைக்கு இன்னுஞ் சில பொருட்களைச் சொல்லுவர். அவற்றில் முகன்மையானவை: “வீட்டின் கூரையிறப்பு, சாதல், தங்கல், இருக்கை” ஆகியவையாகும். இவையெல்லாம் “இழிதல், சரிதல், இறங்குதல்” வினைகளை உணர்த்தும் பெயர்ச்சொற்கள்.

“உடலுறுப்பின் மூட்டுவாய், கை” என்பன இறுதல் (=முடிதல்) வினையோடு தொடர்புடையன. [சிலம்பு கானல் வரி 29 ஆம் பாடலில் இந்தப் பொருளில் இறை என்ற சொல் பயிலும்.] விறலிறையளவு என்பது ஒவ்வொரு விரலின் இறுதிக் கணுவளவைக் குறிக்கும். இறுதிக் கணு சிறுத்ததால் சிறுமைப் பொருளும் இறைக்கு உண்டு.

இறுதலின் பிறவினையான இறுத்தலில் இருந்து “விடை” என்ற பொருள் பிறக்கும்.

அரசன் தன் படையினர் வழி இறுக்கை(force)க் காட்டி அதிகாரஞ் செலுத்தி மக்களிடம் பெறுவது இறை எனப்படும். சுங்கம் (customs tax), உல்கு (excise duty) போன்ற அரசிறைகளின் அடிப்படை வினைச்சொல் இறுக்குதலே. இறுக்கிப் பெறுவது இறை. இறுக்கைக் காட்டி மக்கள் உடன்பாட்டைப் பெறாத எவ்வரசும் வரலாற்றிற் கிடையாது.

“இறையின் ஒருபொருளாய் மாமரம் அகரமுதலிகளிற் குறிப்பிடப்படுவது ஏன்?” என்று எனக்குப் புரியவில்லை. எனவே தவிர்க்கிறேன்.

முடிவில் ஏதோடும் ஒட்டாது தனித்து நிற்கும் ஒரு பொருள் இறகு (feather) என்பதாகும். [இறகும் (feather) சிறகும் (wing) ஒன்றிற்கொன்று தொடர்புடைய ஆனால் புழக்கத்தில் சற்று வேறுபட்டவை.]

அரசன் என்றுவொருவன் உருவாவதற்கு முன், குடித்தலைவன், குழுத்தலைவன், இனத்தலைவன் என்று யாரோவொருவன் இருந்ததை மாந்தவியல் புகலும். அவனன்றி எந்தக் கூட்டமும் இயங்காது. குடிமக்கள் கூட்டத்தை வழிநடத்துபவன் இந்தத் தலைவனே. கூட்டத்தின் இடையே இந்தத் தலைவனை அடையாளம் காட்டவேண்டுமே? அதற்கு வழியென்ன? இவரெல்லாம் தம் தலையிற் கட்டிக் கொண்ட பாகைகளில் (இலை, தழை, தோல் இப்படி ஏதோவொன்றாற் தலையிற் கட்டப்பட்டவை இந்தப் பாகைகள்.) பறவை இறகுகளைச் சூடிக் கொள்வது பழக்கமாய் இருந்தது. ஒரு கூட்டத்தைத் தொலைவில் இருந்து பார்க்கும் போது இறகு செருகியவன்(ர்) தலைவன்(ர்) என்று எல்லோரும் பழக்கத்தில் அறிந்து கொள்ளுவர். இது ஏதோ அமெரிக்கத் திரைப் படங்களில் செவ்விந்தியர் இறகு சூடிக் கொள்ளும் காட்சி மட்டுமல்ல. கணக்கற்ற பழங்குடிகள் இது போன்ற பழக்கங்களை வைத்திருந்தார்கள்.

இன்றைக்கும் செட்டிநாட்டுப் பக்கம் மாப்பிள்ளை அழைப்பில் பார்த்தால் மாப்பிள்ளையின் தலைப்பாகையில் இறகு குத்திக் கொண்டிருப்பது தெரியும். தலைப்பாகையிற் சூடும் நெற்றிச்சூடிகையின் வடிவமும் ஒரு பறவையிறகு போலவே அமையும். மீனாட்சி கல்யாணத்தில் சொக்கநாதருக்கு அணிவிக்கும் பாகையைக் கூர்ந்து கவனித்திருக்கிறீர்களா? நாட்டுப் புறங்களில் நடக்கும் கூத்தில் கதைநாயகன் சூடிக்கொள்ளும் தலைப்பாகையையும் பாருங்கள். ஏன் அரச மகுடத்தின் மேலே செருகும் இறகை இங்கு நினையுங்கள். இறகில்லாத தலைவன் உண்டா?முத்து மாலைகளையும், மணி மாலைகளையும் அணிந்து கொண்டு இடுப்பில் ஒரு சிறுதுணியைக் குறுக்கே கட்டிய சுந்தர பாண்டியனை மார்க்கோ போலோ தன் பயணக் கதையில் [The travels of Marco Polo by Aldo Ricci, Rupa& Co; 2002, pp 292- 326] விவரிப்பான். பாண்டியன் தன் மகுடத்தில் இறகு அணியாது இருந்தானோ? தெரியவில்லை. பணங்கொண்டவனையும் மன்னனையும் எப்படி வேறுபடுத்திக் காட்டுவது?

[இறகு குத்திக் கொள்ளாத கூட்டத் தலைவர்கள் கொம்பு விலங்குகளின் மண்டையோட்டை தலையிற் கவிழ்த்து மாட்டிக் கொண்டிருந்தார்கள். சிந்து சமவெளி முத்திரையொன்றில் கொம்பு கவிழ்த்த தலைவன் ஒருவன் தாமரை ஆசனம் போட்டு உட்கார்ந்திருப்பான். “இவன் என்ன கொம்பனோ?” என்று தமிழிற் சொலவடையுண்டே, நினைவிற்கு வருகிறதா? கொம்பன் என்றாற் தலைவன் என்றே பொருளும் இயற்கையாய் எழுந்தது.]

இறகு அல்லது இறையைத் தன் தலைமுடியிற் செருகிய தலைவன் இறைவன் எனப்பட்டான். தலைவனின் (lord) நீட்சியாய் எல்லாம் வல்ல பரம்பொருளும் இறைவன் (Great Lord) என்று அழைக்கப் பட்டான்.

இனி “இறகு என்ற சொல் முதலா? சிறகு என்ற சொல் முதலா?” என்று கேட்டால், “முட்டை முதலா? கோழி முதலா?” என்று திருப்பிக் கேட்கவேண்டியிருக்கிறது. பின்னால் வரும் எளிதான விளக்கங்களைக் கருதிச் சிறகு என்பதையே முதலாக

நாம் கருதுகிறோம். [சிறகு என்பது சிறை என்றும், இறகு என்பது இறை என்றும் செந்தமிழ் வழக்கிற் சுருக்கப்படும்.] சிறகு என்ற சகர முதற் சொல் திராவிட மொழிகளின் இலக்கிய மொழியான தமிழிலும், அதன் நெருங்கிய கிளைமொழியான மலையாளத்திலும் மட்டுமே இருக்கின்றன. மற்ற மொழிகளில் இறகும் அதன் திரிவுகளுமே இருக்கின்றன. ம. சிறகு; க. எறகெ, எக்கி, எறங்கெ, றக்கெ, றெக்கெ; தெ.எறக, ரெக்க; து. எதிங்கெ, றெங்கெ; பட. றக்கெ; குட. றெக்கெ, தெறகெ; கோத. ரெக்; துட. தெர்க்ய்; கோண்.ரெக; நா. றெப்ப, ரெக்க; கொலா. றெப்பா; பர். ரெக்க.

இறகுக் கை - இறகால் ஆன கை - இறக்கை ஆனது. [இங்கே இந்தக்கால விதப்பான பயன்பாட்டைச் சொல்ல வேண்டும். சிறகு என்ற சொல் wing என்பதற்கும், இறகு என்ற சொல் feather என்ற உறுப்பிற்கும் இந்தக் காலத்திற் பயன்படுத்துகிறோம்.] இறகின் தொகுதி, குறிப்பாக வாலிறகின் தொகுதி நெல்லின் கதிர்த் தொகுதிபோல் இருந்ததால் குரல் (feather, plumage, கொத்து, திரள்) எனப்பட்டது; குரல் சற்று நீண்டு கூரலும் (கொத்து) ஆகும். குட்டைத் தொகுதி கூழையும் ஆனது (மயிற் தோகை, வால்), சதம் (அதம் = தொகுதி), சதனம் (அதித்தல், மிகுதியாதல், அதனம் = தொகுதி) என எல்லாமே தொகுதிப் பொருள் உள்ளவை.

சிறகு, சிறை, என்ற சொற்கள் சகரம் முன்னெழுந்து இலக்கியத்தில் இறகையும் குறித்தன. தூவி என்ற சொல் (மறுவில் தூவி சிறுகருங் காக்கை ஐங்குறு 139; தூவல், சொக்கின் தூவலும் தேவா. 216, 4, தூர்வு>தூவு = வேரைப் போன்றது) இறகைக் குறிப்பது. தோகை (தொகுதி) என்பதை மயிலை வைத்து நாமறிவோம்.

பக்கம், பத்ரம் என்ற சொற்கள் பறத்தல் வினையையொட்டி எழுந்தவை. பறத்தல் வினையின் சொற்பிறப்பை இங்கு அறிந்தால் பக்கம், பத்ரம் என்ற சொற்கள் விளங்கிப் போகும். பறத்தலின் சுருக்கமாய் இறகிற்குப் பறை என்ற சொல்லும் உண்டு. [பறக்கை “துணைபறை நிவக்கும் புள்ளின மான” மலைபடு.55. இறகு “பைங்காற் கொக்கின் மென்பறைத் தொழுதி” நெடுநல் 15 பல்பறைத் தொழுதி - குறுந் 175],

பிஞ்சம் என்ற சொல் பாலியிலும் வடமொழியிலும் பயிலும். தமிழோடும் தொடர்புண்டு. (மயிற் தோகை; க. பிஞ்சிய, பிஞ்சு, பின்செ, பெஞ்செ, பெஞ்செய, skt pin~ccha, புள்>பிள்>பீள் = இளங்கதிர், (பிள்)>பிள்ஞ்சு,பிஞ்சு],

வாசம் என்ற சொல்லும் இறகைக் குறிக்கும்.

சிறகு/இறகு என்ற சொல்லின் பிறப்பை அறிவதற்கு முன் பறத்தல் வினை பற்றி அறிய வேண்டும்.

பறத்தல் வினையை விலங்காண்டி மாந்தன் அறிந்தது பறவைகளைப் பார்த்தேயாகும். அவ்வினை மாந்தச் செயலால் அறியப் படுவதில்லை. பறவைகளைப் பார்த்தும், அப்படிப் பார்க்கும் போது உடன் அறியும் ஒலிக்குறிப்பாலும் எழுந்த சொல் அது.

[மொழி வளர்ச்சியில் ஒலிக் குறிப்புகளை நாம் குறைத்து மதிப்பிடுகிறோம்.] எந்தப் பொருளும் இடைவிடாது விரைவாய்த் துடிக்கும் போதோ, திரும்பத் திரும்ப விடாது செய்யப் படும் போதோ, டகரம், ரகரம், றகரம், ககரம் வைத்து இரட்டைக் கிளவியாக நாம் சொல்லிக் காட்டும் ஒலிக்குறிப்புகளை இங்கு எண்ணிப் பாருங்கள்.

“படபட” என்று துடித்தது; ”பரபர” என்று விரைந்தான்; ”பறபற” என்று இறைந்தது; ”பக்பக்” என்று அடித்துக் கொண்டது. எல்லாமே விரைவைக் குறிக்கும் ஒலிக் குறிப்புச் சொற்கள். பற-த்தல் என்ற தமிழ் வினை இத்தகைய ஒலிக்குறிப்பிற் தோன்றிய சொல்தான். படபடத்தலில் எழுந்த சொல் பட்டம். வானத்தில் நாம் அனுப்பிக் கயிறு கொண்டு கட்டுப் படுத்துகிறோமே, அந்த விளையாட்டுப் பொருள். வடமொழியில் அது பத்தம்>பத்ரமாகிப் பறவையையும் குறிக்கும். பக்கு>பக்கம் என்ற சொல் தமிழில் சிறகைக் குறிக்கும்; பின் பக்கு>பக்கி என்றாகிப் பாலி மொழியில் பறவையைக் குறிக்கும். [நமக்குப் பறவை பெரிதும் பயன்படும் சொல்லென்றால் பக்கி பாலிமொழியிற் பெரிதும் பயன்படுஞ் சொல்.] பக்கி என்ற சொல் பக்ஷி ஆகி வடமொழியில் பறவையைக் குறிக்கும். தமிழில் அதை மீண்டும் கடன் வாங்கி பட்சி என்போம். எல்லாம் ஒலிக்குறிப்பால் எழுந்தவை. பக்கு (= சிறகு) என்ற சொல் அதிரொலி பெற்றுத் திரிந்து பகவான் என்ற பாலி மொழிச் சொல்லை உருவாக்கும். அதைத் தமிழிற் கடன் வாங்கி பகவன் என்று சொல்லுவோம்.

சிலுக்கும் ஒலியும் பறபறத்தலை, படபடக்கும் அசைவைக் குறிப்பதுதான். சிலுகு>சிறகு என்றாகி பறக்கும்/அசைக்கும் உறுப்பைக் குறிக்கும். எந்தச் சிறகும் விரித்துச் சுருக்கி, அசைக்கப் படவேண்டும். இந்த மூன்றையும் செய்யும் போது எழும் சிலுக்கு ஒலியை வைத்தே உறுப்பிற்குப் பெயரிட்டிருக்கிறார்கள். ”சரேர்” என்று விரைந்தான் என்ற விரைவுக் குறிப்பு சிறகுக்கு நெருக்கமானது. மேலை மொழிகளிலும் flug என்னும் ஒலிக்குறிப்புத் தான் fly என்பதற்குக் காரணமாய் இருந்திருக்கிறது.

fly (v.1)
"to soar through air," O.E. fleogan "to fly" (class II strong verb; past tense fleag, pp. flogen), from W.Gmc. *fleuganan (cf. O.S., O.H.G. fliogan, O.N. flügja, O.Fris. fliaga, M.Du. vlieghen, Du. vliegen, Ger. fliegen), from PIE *pleu- "flowing, floating" (see pluvial). Notion of "flapping as a wing does" led to noun sense of "tent flap" (1810), which yielded (1844) "covering for buttons that close up a garment." The noun sense of "a flight, flying" is from mid-15c. Baseball fly ball attested by 1866. Slang phrase fly off the handle "lose one's cool" dates from 1825. To do something on the fly is 1856, apparently from baseball.

wing (n.)
late 12c., wenge, from O.N. vængr "wing of a bird, aisle, etc." (cf. Dan., Swed. vinge "wing"), of unknown origin, perhaps from a P.Gmc. *we-ingjaz and ult. from PIE base *we- "blow" (cf. O.E. wawan "to blow;" see wind (n.)). Replaced O.E. feðra (pl.) "wings" (see feather). The meaning "either of two divisions of a political party, army, etc." is first recorded c.1400; theatrical sense is from 1790. Verbal phrase wing it (1885) is from theatrical slang sense of an actor learning his lines in the wings before going onstage, or else not learning them at all and being fed by a prompter in the wings. The verb to wing "shoot a bird in the wing" is from 1802. The slang sense of to earn (one's) wings is 1940s, from the wing-shaped badges awarded to air cadets on graduation. To be under (someone's) wing

"protected by (someone)" is recorded from early 13c. Phrase on a wing and a prayer is title of a 1943 song about landing a damaged aircraft.

தமிழுக்கும் பாலிக்கும் இடையிருந்த ஊடாட்டம் கூர்ந்து கவனிக்கப் படவேண்டியது.

இராம.கி.
poo@giasmd01.vsnl.net.in
http://valavu.blogspot.com

***

3. தெற்கிலந்தைக் குளம் மாரியம்மன் கோயில்

– இலந்தையார்



தலையிலே பாம்பு அணிந்திருப்பவள் கருமாரி, மாரியம்மன்தான். பாம்பின் உருவில் பாரினைக்காக்கவே சாம்பல் தருகின்றாள் தாய் என்று சொல்லுவதுண்டு. இதோ எங்களூர் மாரியம்மன் பற்றி ஒரு கவிதை.

தெற்கிலந்தைக் குளம் மாரியம்மன் கோயில்

எங்களது சிற்றூரில் உறையும் தேவி
எழிலார்ந்த மாரியம்மன் கோயில் பற்றி
உங்களுக்குச் சொல்லுகின்றேன், முகமும் ஒன்றாய்
ஓருருவாய் ஒப்பற்ற அழகு சேரச்
சிங்கமதன் மேலமர்ந்து திகழும் காட்சி
செப்புதற்கு முடியாது, அம்மன் கண்கள்
பொங்குகிற கருணையினை என்ன சொல்ல?

புத்தழகுக் கருங்கல்லின் புனிதம் தேவி!

பூசாரி பண்டாரம் அலங்கா ரத்தில்
புன்னகைக்கும் தேவியவள் அமரும் கோயில்
ஆசார வாசலிலே புகுந்து விட்டால்
அங்கங்கே பரிவார தேவ தைகள்
வீசாத வெட்டரிவாள், சலங்கை, தண்டு,
விளங்குகிற பலிபீடம், பிரம்பு, யாவும்
தாசாதி தாசர்களாய் ஊரார் எல்லாம்
தரிசிக்க வைத்திருக்கும் உபச்சாரங்கள்.

இடப்பக்கப் பீடத்தில் சுடலை மாடன்,
இன்னுமங்கே காந்தாரி, வீற்றி ருக்கத்
தொடக்கத்தில் கணபதியும் உட்பக்கத்தில்
தொங்குகிற நாக்குடைய நாயின் மேலே
எடுப்புடனே பைரவரும் கோயில் கொள்ள
இடையினிலே பலிபீடம் அமைந்திருக்க
அடுத்துள்ள வெளியினிலே வேம்பு நிற்க
அமைந்துள்ள கோயிலொரு அழகுக் கொள்ளை!

வருடத்திற் கிரண்டு முறை கொடைநடக்கும்
மண்விட்டு வெளியூரில் வாழ்வோர் கூட
கருத்துடனே அங்குவந்து கலந்து கொள்வார்
கண்கொள்ளாக் காட்சியது, முதல்நாள் மாலை
நிருத்தங்கள் செய்கின்ற கணியான் ஆட்டம்
நிகழ்த்தியபின் மாரியம்மன் சரிதை சொல்வார்
சரித்திரத்தில் அம்மனது பிறப்புச் சொல்லும்
சமயத்தில் மருளாடி துள்ளிப் பாய்வார்

சாமிவந்து பாய்கிறவர் மேலும் கீழும்
தாவிவந்தே ஆடுவதைப் பார்க்கும் போது
தாமுதலாய்ப் பார்ப்பவர்கள் பயந்துபோவார்
தடியெடுத்தே ஆடுவதும், அரிவாள் தூக்கி
பூமியது அதிரும்வகை துள்ளி வீழ்ந்து
புரளுவதும் , ஓலமிட்டுக் குறிகள் அங்கே
தாமுரைத்தே ஆடுவதும், சத்தம் போட்டே
சாடுவதும் பார்ப்பதற்குத் துணிவு வேண்டும்.

ஆடுபவர் உறவினர்கள் அங்க வஸ்த்ரம்
அவர்களது மார்புக்குக் குறுக்காய்ச் சுற்றிப்

போடுவதும், கணியான்கள் சுற்றிச் சுற்றிப்
புகழ்ந்தபடி பாடுவதும் பக்கம் அங்கே
கூடுவதும், கட்குடித்த சிலபேர் அங்கே
குதிப்பதுவும், மாதரெலாம் குரவை போட்டே
பாடுவதும், நையாண்டி மேளம் பம்பை
பரவசமாய் அடிப்பதுவும் அமர்க்களந்தான்!

இரவெல்லாம் தெருக்கூத்து, வில்லுப் பாட்டு
இளைஞர்களின் சிலம்பாட்டம், உடுக்குப் பாட்டு
கரகாட்டம், ஒயிலாட்டம், உருமி மேளம்
காதுகட்கும் கண்களுக்கும் தீனி போட
மருளாட்டம் நம்முள்ளும் வருமோ என்னும்
வகையினிலே துடிப்புகளை ஏற்படுத்தும்.
இருளோட்டும் அலங்கார விளக்குக் கூட்டம்
எழிலாக அங்கங்கே ஜொலிஜொலிக்கும்

துடுக்கான சாமிகளின் ஆட்ட பாட்டம்
தொடர்ந்துவர மறுநாளில் சுடலை மாடன்
சுடுகாட்டு வேட்டைக்குச் செல்லும் காட்சி
சொப்பனத்திலும் பயத்தை வரவழைக்கும்
எடுப்பான சல்லடங்கள் சலங்கைக் குல்லாய்
இன்னுமங்கே தும்புவார்ச் செருப்புப் போட்டு
நடுச்சாமம் சுடுகாடு சென்று மீளும்
நடப்பதனைக் காணுதற்குத் திரளும் கூட்டம்.

காலையிலே பொங்கல் வைப்பர், அதற்குப் பின்னே
கடாவெட்டு , வெட்டுவதும் ஓர்கலைதான்
மாலையினைப் போட்டிருக்கும் ஆட்டை வெட்ட
மறுநொடியில் அதன் உடலம் துடிதுடித்துக்
காலுதைக்கும் அக்காட்சி காணுகின்ற
கண்களிலும் ரத்தம்வரும், அதற்கும் மேலே
கோலமுடன் அம்மன்முன் படையலிட்டே
கொண்டாடி மகிழ்ந்திருக்கும் அடியார் கூட்டம்.

அதற்குப் பின் சாமிகளின் ஊர்வலங்கள்
அம்மன்மருள் ஆடுபவர் கரகம் வைத்தும்
கொதிக்கின்ற தீச்சட்டி ஏந்தி ,நீறு
கொட்டிவைத்த கப்பரையை கையில் வைத்துக்
குதித்தாடி வருகின்ற ஊர்வ லத்தில்
கூடுகிற சந்திகளில் காவு தந்து

துதிபாடி வீதியினில் செல்லும் காட்சி
தொடர்ந்துமறு கொடைவரைக்கும் நினைவிருக்கும்

ஊரிலுள்ள எல்லைகளிலும் தெய்வங் கட்கு
ஊர்வலத்தில் செல்கையிலே முட்டைக் காவும்
வீரியத்தைக் காட்டுகின்ற சாமி கட்கு
மேல்கொண்டை சேவலினைத் திருகிக் கொய்து
சோரியெனப் பொங்குகிற இரத்தம் மாந்தி
துடிதுடிக்க எறிவதுவும் , அப்பப்பப்பா
யாரிதனை வகுத்தார்கள் தெரியவில்லை
அச்சமதா அவசியமா புரிய வில்லை

இங்கேதான் மாரியம்மன் கோயில் பக்கம்
இளவட்டக் கல்லொன்று கண்ட துண்டு
அங்கேயார் அதைத் தூக்கிப் போடு வாரோ
அவருக்குத் திருமணம்செய் தகுதி கிட்டும்
எங்கேநாம் இருந்தாலும் அற்றை நாளில்
இருந்ததெலாம் எண்ணுகையில் மனம்களிக்கும்
சிங்கத்தின் மேலமரும் மாரி யம்மா
சிறப்பெல்லாம் அளித்திடுக வாழ்க, வாழ்க!

படம் உதவி முனைவர் சுபாஷிணி:
இங்கே காணப்படும் சிலை டென்மார்க் தலைநகர் கோப்பன்ஹாகனில் உள்ள National Museum of Denmark அருங்காட்சியகத்தில் ஆசிய அருங்கலைப்பொருட்கள் சேகரிப்பு உள்ள பகுதியில் இருப்பது. இதற்கு மாரியாத்தாள் எனப்பெயரிடப்பட்டு ஏறக்குறைய 1890ம் ஆண்டில் உருவாக்கப்பட்ட சிற்பம் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. மாரியாத்தாள் காலரா நோயிலிருந்தும் சின்னம்மை நோயிலிருந்தும் மக்களைக் காப்பவள் என்ற குறிப்பும் இங்கே உள்ளது.

இலந்தையார்
Subbaier Ramasami
elandhai@gmail.com

***

4. கழுந்திரட்டு – வழிபாடு

– முனைவர் வே. கட்டளை கைலாசம்

தமிழ்நாட்டில் நாட்டார் தெய்வ வழிபாட்டில் இரண்டு நிலைகளைக் காணமுடிகிறது. ஒன்று, தாமே பூமியில் வந்து பிறந்து அருள்செய்யும் தெய்வங்கள் மற்றது இறந்தவர்கள் தெய்வமாக்கப்படுவது. தற்கொலை,கொலை,விபத்து,வீரமரணம் போன்ற நிலைகளில் இறந்தவர்களுக்குக் கோயில்கட்டி வழிபடுகின்றனர். இத்தெய்வங்கள் நாட்டார் தெய்வங்கள்,கிராம தேவதைகள்,சிறுதெய்வங்கள் எனப் பலவாறு அழைக்கப்படுகின்றன.இவற்றின் வழிபாட்டு முறைகள் தனித்தன்மை வாய்ந்தவை. “கழுந்திரட்டு” அல்லது “கீழுவடி” வழிபாடு என்பது இறந்த ஒரு வீரனின் வழிபாடாகும்.

கழுந்திரட்டு வீரன் கதைகள்: சாத்தான்குளம் பகுதியில் கன ஆய்வு மேற்கொண்டபொழுது கழுந்திரட்டுப் பற்றிய கதைகளை அறியமுடிந்தது. அக்கதைகள் யாவும் கழு ஏற்றப்பட்ட ஒரு வீரனின் வரலாறாக உள்ளன:

1. சாத்தாவி நல்லூரைக் கடம்பராஜா என்பவர் ஆண்டு வந்தார்.அவரது அரசவையில் இருந்த அழகான வீரன் ஒருவன், அரசனின் மகள் மீது காதல் கொண்டான். இளவரசியைக் கற்பழித்தான் என்று அரசனால், கழு ஏற்றப்பட்டான்.கழுவில் நின்ற அவன் தெய்வமாகிவிட்டான்.

2. திருக்களூரில் பிறந்த உடையார் தென்காசி மன்னன் சீவலமார்பனின் நம்பிக்கைக்கு உரிய வீரனாகத் திகழ்ந்தான். மன்னன் அவன்மீது மிகுந்த பற்றுடையவராக இருந்தார். இதனால் பொறாமை கொண்ட அமைச்சர்கள் அரசன் எண்ணெய் தேய்த்து குளிக்கும் நாளன்று அவரது முத்திரை மோதிரத்தை உடையாரின் உடைவாள் உரையில் சூழ்ச்சியாக வைத்துவிட்டனர். உடையார் குற்றம் சாட்டப்பட்டு கழு ஏற்றப்பட்டார். அவர் தெய்வமானார்.

3. டாக்டர். தி.நடராசன் "உடையார் கதை" என்ற வில்லுப்பாடலை பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.
திருநெல்வேலி மாவட்டம் திருக்களூர் என்னும் கிராமத்தில் சங்கரமூர்த்திக் கரையாளர், தன்னப்பெத்தாள் இருவரும் திருமணம் ஆகிப் பலவாண்டு காலம் குழந்தையின்றி இருந்தனர். திருக்களூர் கோவிலுக்குத்
திருவிழா நடத்தி "உடையார்" என்ற மகனைப் பெற்றனர். பூச நட்சத்திரத்தில் பிறந்த அவன் மோதிரம் ஒன்றால் இறப்பான் எனச் சோதிடம் மூலம் அறிந்தனர். பல கலைகளையும் கற்று அழகனாகத் திகழ்ந்த உடையார் மீது நல்லதங்கை என்ற இடைக்குலப்பெண் மோகம் கொண்டாள். உடையாரின் வீரம் தென்காசி ஸ்ரீவல்லபாண்டியனுக்குத் தெரிய வந்தது. மன்னன் உடையாரைக் காண விரும்பினார். உடையாரின் பெற்றோர் அவனைத் தென்காசிக்கு அனுப்ப விரும்பவில்லை. உடையார், பெற்றோர் சொல்லை மீறி தனது துணையாகச் சிறுவன் ஒருவனுடன் தென்காசி சென்றார். அங்கு தாசிகள் தெருவில் தங்கினார். இலைவாணிப் பெண் அனைஞ்சி, செட்டிப் பெண் பூவனைஞ்சி ஆகியோருடன் மகிழ்ந்திருந்தார். அரசனிடம் சென்று தனது எண்ணெய்க் காப்பு சாத்தும் திறனைக் காட்டினார். அரசன் மகிழ்ந்து தன்னுடன் வைத்துக் கொண்டார். அரசனின் மனைவி நீலக்கன்னி உடையார் மீது மோகம் கொண்டாள். அவன் அஞ்சினான். பெண் வேடத்தில் அந்தப்புரத்திற்கு வரச்சொன்னாள். உடையார் பெண் வேடத்தில் சென்று அரசியுடன் மகிழ்ந்திருந்தார்.

உடையாரின் புகழ், பெருமை இவற்றைக் கண்ட அமைச்சர்கள் பொறாமை கொண்டனர். எண்ணெய்க் காப்பு சாத்தும் மறத்தலைவனின் துணையுடன் அரசனின் முத்திரை மோதிரத்தை உடையாரின் உடைவாளின் உறையில் மறைத்து வைத்தனர். அரசன் முத்திரை மோதிரத்தைத் தேடினான். உடையாரின் உடைவாள் உறையிலிருந்து கண்டெடுக்கப்பட்டது. உடையார் அதிர்ச்சி அடைந்தார். தனக்குக் கழு அமைக்க இரும்பு வேண்டினார். அரசன், அரசி, பெற்றோர், ஊரார் கழு ஏற வேண்டாம் எனத் தடுத்தனர். உடையார் கழு அமைத்தார். உடையாருடன் சென்ற சிறுவன்

தானே உடைவாளைப் பாய்ச்சி இறந்தான்.உடையார் கழு ஏறினார். உடையார் ஆறு நாட்கள் கழுவில் இருந்தார். நல்லதங்கை அவருக்கு மோர் ஊற்றினாள். நல்லதங்கையிடம் அரசி நீலக்கன்னிக்குச் செய்தி சொல்லி அனுப்பினார். ஏழாவது நாள் உடையாரின் உயிர் பிரிந்தது. அதே நேரத்தில் அரசியின் உயிரும் பிரிந்தது. இருவரும் ஒன்றாகச் சிவலோகம் அடைந்தனர்.

கழுந்திரட்டுப் பற்றிய இக்கதைகள் யாவும் கழுவில் உள்ளவன் சிறந்த வீரன் என்பதனை உணர்த்துகின்றன. கரையனார் என்பது கோனார் இனத்தின் ஒரு பிரிவாகும். உடையார் கோனார் இனத்தவர் என்று கூறுகின்றனர். இவ்வழிபாடு செய்வோர் பெரும்பாலும் கோனார் இனத்தவர்களே.

கழுவடி:

பழங்காலத்தில் மரண தண்டனை நிறைவேற்ற கழுமரத்தினைப் பயன்படுத்தினர். இக்கழுமரம் கூர்மையான நுனியை உடைய மரம் அல்லது இரும்பால் ஆன தூணாகும். வழுவழுப்பும் கூர்முனையும் கொண்ட தூணின் உச்சியில் தண்டனைக்குரியவரை அமரச் செய்து தண்டனையை நிறைவேற்றுவர். சாத்தான்குளம் பகுதியில் உள்ள கழுவடி தளத்தில் கல்தூண் ஒன்று நடப்பட்டு அதன் கூர்மையான உச்சியில் மனித உருவிலான மரப்பொம்மை வயிற்றில் குத்திய நிலையில் வைக்கப்பட்டுள்ளது. இம்மரப்பொம்மை நீண்ட முடியும் வழமையான உடற்கட்டும் கொண்டு விளங்குகின்றது. கொடைவிழாவின் போது கழுமரத்தைச் செப்பனிட்டு புதிய மரப்பொம்மையை கழுவில் ஏற்றுகின்றனர். உடையார் கோவில் வில்லுப்பாடலை ஆய்வு செய்த ஆய்வாளர் கொடைவிழாவில் கழுவேற்றத்தினைச் சேவல் மூலம் நிறைவேற்றுகின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

சென்னை மாவட்டம் வேளச்சேரி, சூளைமேடு ஆகிய இடங்களில் மதுரை வீரனுக்குக் கழுவடி பூசை நடத்தப்படுகின்றது. அங்கு இரண்டு கம்புகளை நட்டு அதில் கீழிருந்து ஏழு அரிவாள்களைக் குறுக்காகக் கட்டி, மேல்பகுதியில் குறுக்கும் நெடுக்குமாக இரண்டு அரிவாள்களைக் கட்டுவர். மதுரைவீரன் சாமி வந்து ஆடுபவர் ஒவ்வொரு கழுவடியிலும் நின்றும் படுத்தும் ஆடுவர். இதனைக் கழுவடி வழிபாடு எனக் கூறுகின்றனர். பூம்புகார் பல்லவன் ஈசுவரன் கோவில் பட்டினத்தூர் வழிபாட்டில் கழுவேற்றுதல் நிகழ்ச்சி நிகழ்த்தப்படுகின்றது. தஞ்சை, நாகப்பட்டின பகுதி வட்டார மாரியம்மன் கோவில்களில் கழுவடி மேடை அமைக்கப்படுகின்றது என்றும் கூறுகின்றனர்.

சாத்தான்குள வட்டார கழுத்திரட்டு வழிபாடு தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தில் உள்ள கோனார் இனமக்கள் தாம் வழிபாடும் கூவையாடன் பீடத்தின் முன்பு ஒரு கழுந்திரட்டினை அமைத்துள்ளனர். கோயிலுக்கு,வெளிப்புறம் தனியாக ஒரு கழுந்திரட்டினையும் அமைத்துள்ளனர். சுடலைமாடன் கோயில் கொடைவிழாவின் போது கழுந்திரட்டிற்குச் சிறப்பான பூசை நடைபெறுகின்றது. இத்தெய்வத்தினை வழிபடுவோர் தங்கள் வீட்டில் குழந்தைபிறப்பு, பூப்புனித நீராட்டு,

திருமணம், இறப்பு போன்ற நிகழ்ச்சிகளின் போது கழுந்திரட்டினை வழிபடுகின்றனர். அச்சமயங்களில் சேவல் ஒன்றினைப் பலிகொடுக்கின்றனர்.

சாத்தான்குளத்தின் அருகில் உள்ள சாஸ்தாவி நல்லூர் கிராமத்தின் அருகில் வயிரவம் என்ற பகுதி உள்ளது. இங்குள்ள கோனார்கள் தங்கள் ஊருக்கு அருகில் உள்ள தருவாய் என்ற இடத்தில் கழுந்திரட்டு ஒன்று வைத்துள்ளனர். இங்கும் சுடலைமாடன் கோயில் உள்ளது. இச்சுடலைமாடனை தேவர், ஹரிஜன இனமக்களும் வழிபடுகின்றனர். வயிரவத்தில் வாழ்ந்து வந்த கோனார்கள் குடும்ப பிரச்சினைக் காரணமாக சாத்தான்குளம், தச்சமொழி, நரையன்குடியிருப்பு, தூத்துக்குடி அருகில் உள்ள தட்டாப்பாறை போன்ற இடங்களுக்கும் பிரிந்து சென்றுள்ளனர். அவர்கள் இங்கிருந்து "பிடிமண்" எடுத்துச் சென்று தங்கள் ஊர்களில் "கழுந்திரட்டு" அமைத்து வழிபட்டு வருகின்றனர்.

உடையார் வழிபாடு ஸ்ரீ உடையார் சுவாமி வழிபாடு தென்தமிழகத்தில் வேரூன்றிப் பரவியுள்ளது. இவ்வழிபாடு இன்றளவும் காலம் காரணமாக எவ்வித மாறுதலும் அடையவில்லை. கொடைவிழாவின் போது கதையாடல் மற்றும் நிகழ்கலை நோக்கில் கழுவேற்றமும் நடைபெறுகிறது. கதையைப்பாடும் புலவரும் பார்வையாளர்களும் உடையார் கோவிலுக்கு உரிமையுடையவர்களாக உள்ளனர். கழுவேற்றத்தினைச் சேவல் மூலம் நிறைவேற்றும் போது பார்வையாளர்கள் கண்ணீர் விட்டு அழுவதும், அமைதியான சூழ்நிலையை மேற்கொள்ளுவதும் தொன்றுதொட்டு நிலவி வருகிறது என உடையார் வழிபாடு பற்றி ஆய்வு செய்யும் ஆய்வாளர் த.த.தவசிமுத்து குறிப்பிட்டுள்ளார்.

சமணர்களைக் கழுவேற்றிய செய்தியினைத் தேவாரப்பாடல்கள் கூறுகின்றன. பட்டினத்தார் வழிபாட்டில், தான் குற்றவாளியல்லன் என்பதனை நிரூபிக்க கழுமரத்தினை எரிக்கின்றனர். சில மாரியம்மன் கோவில்களில் கழுவடி மேடை அமைக்கின்றனர். மதுரைவீரன் வழிபாட்டிலும் இக்கழுவடி வழிபாடு இணைந்துள்ளது. சாத்தான்குளம் பகுதியில் கழு ஏற்றிய நிலையில் உள்ள உருவவழிபாட்டினை நாம் பார்க்கின்றோம். கழுவடி வீரன் தம் குடும்பத்திற்குத் துணை நிற்பான் என்ற நம்பிக்கையில் இவ்வழிபாடு இன்றுவரை நிலைபெற்றுள்ளது. மானத்திற்காக உயிர்விட்ட உடையாரின் நினைவாக இவ்வழிபாடு நடைபெறுகிறது என அறியமுடிகிறது. ஸ்ரீவல்லபாண்டியன் காலத்தில் நிகழ்ந்ததாக வில்லுப்பாடல் குறிப்பிடுகின்றது. அரசர்கள் மட்டுமல்லாது அரசகுடும்ப பெண்களும் பிற ஆண்களுடன் மோகம் கொண்ட நிலையை இக்கதைகள் வழி அறிகின்றோம். திருநெல்வேலி பகுதிக்கு என்ற தனிச்சிறப்பு பெற்ற வில்லுப்பாடலில் உடையாரின் கதை இடம்பெற்று சமயச் சடங்காக நிகழ்த்தப்பட்டு வருகின்றது. இதனை மேலும் வரலாற்று அடிப்படையில் அணுகவேண்டும். இதுபோன்று உயர்வர்க்கப் பெண்களுடன் தொடர்பு கொண்டு உயிர்விட்ட பிறவீரர்களின் கதைகளையும் சேகரித்து ஆய்வு செய்ய வேண்டும்.

குறிப்பு:
கழுவேற்றம் சடங்கு தொடர்பில் அமைந்த ஒரு கட்டுரையைப் பகிர்ந்து கொள்கிறேன். இக்கட்டுரையை நமக்காகத் தட்டச்சு செய்து வழங்கிய நண்பர்கள் மைதிலி, சுவர்ணலதா ஆகியோருக்குத் தமிழ் மரபு அறக்கட்டளையின் நன்றி.

-சுபா

Kattalai Kailasam
kattalai1956@gmail.com

***

5. மருங்கூர் – சங்ககாலக் கடற்கரைப்பட்டினம்

– சொ. சாந்தலிங்கம், மதுரை.

சங்க இலக்கியங்களில் ஒன்றான அகநானூற்றில் (227.19.21)

**‘விழுநிதி துஞ்சும் வீறுபெறு திருநகர்
இருங்கழிப் படப்பை மருங்கூர்ப் பட்டினத்து
எல்லுமிழ் ஆவணம்’**

என்றும், நற்றிணையில் (258.7-10)

**‘அகலங்காடி யசைநிழற் குவித்த
பச்சிறாக் கவர்ந்த பசுங்கட் தாக்கை
தூங்கல் வங்கத்துக் கூம்பில் சேர்க்கும்
மருங்கூர்ப் பட்டினத்து’**

என்றும் மருங்கூர்ப்பட்டினம் என்னும் ஓர் ஊர் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விலக்கியச் செய்திகள் மூலம் இது ஒரு கடற்கரைப் பட்டினம் என்பதும், வணிக முக்கியத்துவம் வாய்ந்த இடம் என்பதும் பெறப்படுகிறது.

இப்பட்டினம் பசும்பூண் பாண்டியனின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது என்பதிலிருந்து இது பாண்டிய நாட்டுக் கடற்கரைப் பகுதியில் இருந்து ஒரு பட்டினம் என்பது உறுதிப்படும். இப்பட்டினம் எங்கு இருந்தது, இருக்கிறது என்பது நீண்ட நாளைய கேள்வியாக இருந்தது. அண்மைக்கால களஆய்வின் மூலம் இப்பட்டினத்தை அடையாளங் காணத்தக்க சில சான்றுகள் பெறப்பட்டுள்ளன.[1]

இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை வட்டத்தில் அமைந்துள்ள ஒரு சிற்றூர் தளிமருங்கூர், திருவாடானையிலிருந்து தொண்டி செல்லும் சாலையில் வடக்கில் சற்று விலகி இருக்கும் ஊர் இது. கடலுக்கு அருகாமையில் சுமார் ஆறு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள இவ்வூரே மேலே குறிப்பிடப்பட்ட இலக்கியங்கள் கூறும் மருங்கூர் என்பதை நிறுவுவதே இக்கட்டுரை.

அண்மையில் இவ்வூர் தமிழக அரசு தொல்லியல் துறையினரால் ஆய்வு செய்யப்பட்டது. மேற்பரப்பு ஆய்வுகளின் மூலம் சங்க காலத்தைச் சேர்ந்தது எனக் கருதப்படும் கருப்பு சிவப்புப் பானை ஓடுகள் அதிக அளவில் சேகரிக்கப்பட்டுள்ளன. மேலும் பிற்காலப் பாண்டியர் காலத்தில் வணிகச் செழிப்பும், சமயச் சிறப்பும் பெற்ற இடமாக இருந்துள்ளமைக்கும் சான்றுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இவ்வூர் இன்று திசைகளை வைத்து இரண்டாகப் பிரிக்கப்பட்டு தெக்கூர், வடக்கூர் என்று

அழைக்கப்படுகிறது. தெக்கூரிலும், வடக்கூரிலும் பிற்காலப் பாண்டியர் காலத்தைச் சேர்ந்த சிவன் கோயில்கள் (கி.பி.13-ஆம் நூற்றாண்டு) அமைந்துள்ளன. இக்கோயில்கள் தெக்கீசர் கோயில் என்றும், வடக்கீசர் கோயில் என்றும் இன்றும் அழைக்கப்படுகின்றன, தெக்கீசர் கோயிலில் உள்ள கல்வெட்டுக்களில் இவ்வூர் தளிமருங்கூர் என்று பெயர் கூறப்பட்டுள்ளன. வடக்கீசர் கோயிலில் உள்ள கல்வெட்டுக்கள் அப்பகுதியை குலமாணிக்கபுரம் என்று குறிப்பிடுகின்றன. இன்று தளிமருங்கூர் என்ற ஒரே பெயரில் அழைக்கப்படும் இவ்வூர் பிற்கால பாண்டியர் காலத்தில் மருங்கூர் என்ற வேளாண் ஊராகவும், குலமாணிக்கபுரம் எனும் வணிக நகரமாகவும் இருபிரிவாக இருந்துள்ளது. இவ்வூர் முத்தூற்றுக் கூற்றத்தில் அமைந்திருந்தது. முத்தூற்றுக்கூற்றம் சங்க காலத்திலேயே இருந்த ஒரு நாட்டுப்பிரிவு என்பதை சங்க இலக்கியங்கள் வாயிலாக அறிகிறோம்.. முத்தூற்றுக்கூற்றத்தில் ஒழிந்திருந்த பகைவனை பாண்டிய நெடுஞ்செழியன் வெற்றிகண்டான். கி.பி.5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பூலாங்குறிச்சிக் கல்வெட்டிலும் முத்தூற்றுக்கூற்றம் குறிப்பிடப்படுகிறது.

குலமாணிக்கபுரம் என்னும் இவ்வூர் கல்வெட்டுகளில் நகரம் என்று குறிப்பிடப்படுகிறது. சில காலங்களுக்குப் பிறகு இதுவே நானாதேசிப்பட்டினம் என்றும் பெயர் பெற்றிருந்தது. மருங்கூர் என்பதும் குலமாணிக்கபுரம், நானாதேசிப் பட்டினம் என்னும் ஊரும் ஒரே ஊராகவே ஒருகாலத்தில் இருந்துள்ளது. மருங்கூர்ப்பட்டினம் என்று இலக்கியங்களில் கூறும் பாண்டிய நாட்டுக் கடற்கரைப் பட்டினம் கடல் ஒட்டிய பகுதிகளில் வேறு எங்கும் இல்லாத நிலையில் இவ்வூரையே சங்ககால ஊராகக்கொள்வதில் தவறில்லை. சங்ககாலத் தடயங்களான கருப்பு சிவப்புப் பானை ஓடுகள் பெருமளவில் இவ்வூரில் கிடைப்பது இவ்வெண்ணத்திற்கு வலுவூட்டுவதாக உள்ளது.

மருங்கூர்ப்பட்டினம் இருந்த இடத்தில்தான் இன்றைய அழகன்குளம் ஊர் அமைந்துள்ளது என்று அண்மைக்கால ஆய்வு அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.[2] ஆனால் அக்கருத்து மறுபரிசீலனைக்குட்பட்டதாகும். அழகன்குளம் என்பதும் மருங்கூர்ப் பட்டினம் என்பது ஓரே சமயத்தில் சிறந்து விளங்கிய வெவ்வேறு கடற்கரை பட்டினங்கள் என்றே கொள்ளவேண்டும்.

பிற்காலப் பாண்டியர் கல்வெட்டுக்கள்

இவ்வூரின் தென்பகுதியில் தெக்கீசர் கோயில் என்றும், வடக்குப் பகுதியில் வடக்கீசர் கோயில் என்றும் இரண்டு கோயில்கள் அமைந்துள்ளன. இவ்விரண்டிலும் பிற்காலப் பாண்டியர் கல்வெட்டுக்களும் இடம் பெற்றுள்ளன.

தெக்கீசர் கோயில்

இக்கோயில் மிகவும் இடித்த நிலையில் உள்ளது. கருவறை,அர்த்த மண்டபம், மகா மண்டபம் ஆகிய அங்கங்களைக் கொண்ட சிறிய கோயில் இது. விநாயகர், முருகன், பைரவர் ஆகிய தெய்வங்களுக்குச் சிற்றாலயங்கள் திருச்சுற்றில் அமைந்துள்ளன.

கோயில் மிகவும் இடிந்த நிலையில் உள்ளதால் இங்குள்ள கல்வெட்டுக்களை முழுமையாகப் படிக்க முடியவில்லை. கருவறைத் தென்புறச் சுவரில் உள்ள ஒரு கல்வெட்டு மட்டும் படிக்கும் நிலையில் உள்ளது.

இக்கல்வெட்டின் மூலம் இக்கோயிலின் பெயர் பிரம்மீஸ்வரம் உடையார்கோயில் எனத் தெரிந்துகொள்ள முடிகிறது. மன்னர் பெயர் கல்வெட்டில் குறிப்பிடப்படவில்லை. பாண்டிய மன்னனுடைய ஆணையாக இக்கல்வெட்டு விளங்குகிறது. இக்கோயிலின் திருப்படி மாற்றுச் செலவினங்களுக்காக தளிமருங்கூருக்கு அருகில் இருந்த மாவூர் என்னும் பல்லவராயநல்லூரை விலைக்கு விற்று வழங்கிய செய்தி கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது. வீரகேரளபுரமான நானாதேசிப் பட்டினத்து திருவிக்கரமன் சக்கரவர்த்தியான வீரபாண்டி ஜகவீர ராம சக்கரவர்த்திக்கு அஞ்சுகோட்டைப்பற்றினைச் சேர்ந்த செழியதேவனும் குலசேகர அஞ்சுகோட்டை நாடாழ்வானும் சேர்ந்த இவ்வூரை விலைக்கு விற்றுள்ளனர். விலைக் கிரயத்தொகை கோயில் பணிகளுக்கு வழங்கப்பட்டிருக்கலாம்.

இக்கல்வெட்டில் இடம் பெறும் மாவூர் தளிமருங்கூருக்கு அருகிலேயே தற்போது உள்ளது. பிற்காலப் பாண்டியர் காலத்தில் இவ்வூருக்கு பல்லவராசநல்லூர் என்னும் பெயர் ஏற்பட்டுள்ளது.

வடக்கீசர் கோயில்

ஊரின் வடபகுதியில் அமைந்துள்ளதால் இது வடக்கீசர் கோயில் என மக்களால் அழைக்கப்படுகிறது. ஆனால், இங்குள்ள கல்வெட்டுக்களில் கோயிலின் பெயர் உலகநாத ஈசுவரம் என்று குறிக்கப்பட்டுள்ளது. இங்கு நான்கு கல்வெட்டுக்கள் இடம் பெற்றுள்ளன. இக்கல்வெட்டுக்கள் யாவும் கி.பி. 13 – ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையே. முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தவை இரண்டும் மற்றவை அவன் சமகாலத்ததாகவுமே உள்ளன. இக்கல்வெட்டுக்கள் இரண்டில் ‘குடிதாங்கி மதிதொங்கனான கங்கை நாராயண சக்கரவர்த்தி’ என்னும் அதிகாரி ஒருவன் இடம் பெறுகிறான். இவன் முன்னர் குறிப்பிடப்பட்ட தெக்கீசர் கோயில் கல்வெட்டிலும் இடம் பெறுகிறான்.

இக்கல்வெட்டுக்கள் ஓரே அரச ஆணையை அதிகாரிகள் பெற்றுத் திரும்ப கோயில் நிர்வாகிகளுக்குப் பிறப்பித்த செய்தியைத் தருகின்றன. சடையனேம்பல் என்ற ஊர் உலகநாத ஈசுவரம் கோயிலுக்காக விற்றுக் கொடுக்கப்பட்டது என்பதே செய்தியாகும். இது கங்கை நாராயணச் சக்கரவர்த்தி ஓலை என்று அரச அதிகாரியின் ஆணையாகவும் வெட்டப்பட்டுள்ளது.

வடக்கம்மன் கோயில்

வடக்கீசர் கோயிலுக்கு வடக்கில் சிறு கிராம தெய்வக் கோயில் ஒன்று உள்ளது. வடக்கம்மன் கோயில் என்று இன்று அழைக்கப்படும் இக்கோயில் ஒரு கல்வெட்டில் ’அமரர் தொழு நங்கை’ கோயில் எனப்படுகிறது. இக்கல்வெட்டின் மூலம்

இக்கோயிலுக்கு இவ்வூரில் வாழ்ந்த கைக்கோளார்களில் நிரயன் சீவலஞ்சுப் பெருமான் என்பவர் செய்த ஒரு தருமம் பெறப்படுகிறது. கைக்கோளர் என்போர் நெசவுத் தொழில், துணி வணிகத்தில் ஈடுபட்ட பிரிவினராவர். இதன் மூலம் இவ்வூரின் வணிகத்தொடர்பு உறுதிப்படும்.

[1] தளிமருங்கூர் களஆய்வு இக்கட்டுரை ஆசிரியராலும், கல்வெட்டு ஆய்வாளர் முனைவர் வெ. வேதாசலம் அவர்களாலும் மேற்கொள்ளப்பட்டது.

[2] Abdulmajeed, A, Thulasiraman, D., and Vasanthi,
S., 1992, Alagankulam: A Preliminary Report, state Department of Archaeilogy, Madras,p.2.

Dr. C. Santhalingam
MobileNo: 9894687358
csantham@hotmail.com

***

6. மண்ணின் கீழ் அடியில் சென்ற கீழடி

– சிங்கநெஞ்சம் சம்பந்தம்

மதுரையிலிருந்து சுமார் ஏழு கி.மீ. தூரத்தில் உள்ள கீழடியில், நடுவண் அரசின் கீழ் இயங்கும் 'இந்திய தொல்லியல் ஆய்வுத் துறை' கடந்த இரண்டாண்டுகளாக (2014-15, 2015-16) மேற்கொண்ட அகழ்வாய்வின் போது வெளிப்பட்ட "பண்டைய நகரம்", வெள்ளத்தால் மண்ணுக்கு அடியில் புதையுண்டது என்பதில் இரு வேறு கருத்துக்கு இடமில்லை. அந்த வெள்ளம் எங்கிருந்து வந்தது என்பதுதான் வினா? இன்றைய வைகை ஆற்றிலிருந்து கீழடி, சுமார் ஒன்றரை கி.மீ. தூரத்தில் உள்ளதே , இவ்வளவு தூரம் ஆற்று வெள்ளம் சென்று தாக்க இயலுமா என்றெல்லாம் நம் அன்பர்கள் சிலருக்கு ஐயம் எழுந்துள்ளது. இந்த ஐயம் நியாயமானதே. இந்த ஐயத்தைத் தீர்ப்பதும் மிக எளிதானதே.

தடம் மாறும் ஆறுகள்:
காவிரி, தென்பெண்ணை, பாலாறு, வைகை ஆகிய அனைத்து ஆறுகளும் தங்கள் தடங்களை அவ்வப்போது மாற்றிக் கொண்டே இருந்திருக்கின்றன. இது ஓர் புவியியல் உண்மை. உலகம் முழுக்க இந்த வரலாறு உண்டு. சற்று அனுபவம் உள்ள கண் கொண்டு நோக்கினால், நமது செய்கோள் பதிமங்களிலேயே இவற்றைக் கண்டறிய இயலும். சில ஆறுகள் தடம் மாறியதற்கு இலக்கிய சான்றுகளும் காட்ட இயலும். அவற்றில் ஒன்று எங்கள் கடலூர் அருகே கடலில் கலக்கும் தென்பெண்ணையாறு.

கீழடிக்கும் வைகை ஆற்றிற்கும் போகும் முன், நான் கூற வரும் ஆறுகள் தடம் மாறும் நிகழ்வை எளிதில் புரிந்துகொள்வதற்கு ஏதுவாக, கொஞ்சம் தென்பெண்ணை ஆற்றிற்குப் போவோம். ஓரிரு சிவதலங்களையும் காண்போம்.

முதலில், திருவெண்ணெய்நல்லூர் செல்லலாம். ஆமாம், ஆமாம் சுந்தரமூர்த்தி நாயனார் இறைவனை "பித்தா" என்று அழைத்துப் பாடிய திருத்தலம். முதலில் அந்தப் பாடலைப் பார்ப்போம்:

பித்தா பிறை சூடி, பெருமானே அருளாளா
எத்தால் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட்துறையுள்
அத்தா உனக்காளாய் இனி அல்லேன் எனல் ஆமே

இந்த இனிய பாடலைப் படிக்கும் போதும், பாடும் போதும், நம் முன் சிவன் தோன்றுகிறாரோ இல்லையோ, திருவருட்செல்வர் சிவாஜி தோன்றி விடுவார். டி . எம் . எஸ். குரல் , மகாதேவன் இசை, சிவாஜியின் அருமையான முகபாவங்கள், இதை

எழுதும்போது கூட எழுதுவதை நிறுத்திவிட்டு அந்தப் பாடலைப் பார்த்து விட்டுத்தான் எழுதுகிறேன். அருமை.

சரி, பாடலுக்குப் போவோம். இதில் நாம் கவனிக்க வேண்டியது பாடலின் மூன்றாவது வரி

“வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட் துறை”

பொருள் : பெண்ணை ஆற்றின் தென்புறம் உள்ள திருவெண்ணெய் நல்லூர் எனும் துறை.

கீழேயுள்ள படத்தைப் பாருங்கள் ...



இன்றைய தென்பெண்ணை ஆறு, திருவெண்ணைநல்லூருலிருந்து சுமார் ஐந்தரை கி.மீ. தொலைவில் உள்ளது. சுந்தரர் பொய் சொல்லவில்லை.
திருவெண்ணைநல்லூருக்கு உடனடி வடக்கில் ஒரு ஆறு இருக்கிறது. அதற்குப் பெயர் ‘மலட்டாறு’. தண்ணீரே இருக்காது ஆதலின் அந்தப் பெயர். எனினும் தென்பெண்ணையில் வெள்ளப்பெருக்கு நிகழுங்காலை, மலட்டாற்றில் சிறிது நீர் வரும்.

ஆக, சுந்தரர் காலத்தில் திருவெண்ணைநல்லூருக்கு உடனடி வடக்கில் ஓடிய தென்பெண்ணை, தன் பாதையை மாற்றிக்கொண்டு, இன்று ஐந்தரை கி.மீ. தொலைவில் வடக்கில் ஓடுகிறது. அன்றைய தென்பெண்ணை இன்று மலட்டாறு எனும் பெயரில் நீரின்றி கிடக்கின்றது. பெண்ணையாறு, இடைப்பட்ட காலத்தில் தன் தடத்தை மாற்றிக்கொண்டுவிட்டது. இதற்கு சுந்தரரே சாட்சி.

அடுத்து, திருத்துறையூர் செல்வோம் வாருங்கள்.

விழுப்புரத்திற்கும் பண்ருட்டிக்கும் இடையில் உள்ள தொடர்வண்டி நிலையம் திருத்துறையூர். இறைவன் பாசுபதேஸ்வரர். இறைவி: பூங்கோதை நாயகி. திருமணம் தவிர்த்த புத்தூரில் (இன்றைக்கு மணப்புத்தூர் என வழங்கப் படுகிறது) சுந்தரரின் மணத்தைத் தவிர்த்த இறைவன், அவரை அழைத்துக்கொண்டு திருத்துறையூர் வரும் வழியில் கீழப்பாக்கம் எனும் இடத்தில் அவரை ஆட்கொண்டதாகப் புராணங்கள் கூறுகின்றன. பெண்ணையின் தென்பால் உள்ள வெண்ணை நல்லூரிலிருந்து, வடபால் உள்ள திருத்துறையூருக்கு ஆற்று வெள்ளம் காரணமாக செல்ல முடியாமல் சுந்தரர் தவித்தபோது, இறைவனும் இறைவியும் முதியோர் வடிவில் வந்து ஓடத்தில் ஏற்றிச் சென்றதாகவும் கதைகள் உள்ளன. இவைமூலம் நாம் அறிவது வெண்ணை நல்லூருக்கும் , திருத்துறையூருக்கும் இடையே அந்நாளில் பெண்ணை ஓடி இருக்கிறது.

திருத்துறையூருக்கு தெற்கே பெண்ணை ஓடியது என்பதற்கான இலக்கிய சான்றுகள் தேடி மீண்டும் சுந்தரரிடமே செல்வோம். கீழேயுள்ள தேவாரப் பாடல்கள் ஒன்பதிலும் , இரண்டாவது வரியைக் கவனியுங்கள். பெண்ணை வடபால் திருத்துறையூர் இருந்திருப்பது தெளிவாகிறது. ஆனால் , இன்றைய பெண்ணையாறு திருத்துறையூருக்கு மூன்று கி.மீ. வடக்கே உள்ளது. திருத்துறையூருக்கு தெற்கே மலட்டாற்றின் தடம்தான் உள்ளது.

மலையார் அருவித் திரள்மா மணிஉந்திக்
குலையாரக் கொணர்ந்தெற்றி யோர்பெண்ணை வடபால்
கலையார் அல்குற்கன் னியர் ஆடும்துறையூர்த்
தலைவா உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே. 7.13.1

மத்தம் மதயானை யின்வெண் மருப்புந்தி
முத்தங் கொணர்ந்தெற்றி யோர்பெண்ணை வடபால்
பத்தர் பயின்றேத்திப் பரவும் துறையூர்
அத்தா உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே. 7.13.2

கந்தங் கமழ்கா ரகில்சந் தனம் உந்திச்
செந்தண் புனல்வந் திழிபெண்ணை வடபால்
மந்தி பலமா நடமாடுந் துறையூர்
எந்தாய் உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே. 7.13.3

அரும்பார்ந் தனமல் லிகைசண் பகஞ்சாடிச்
சுரும்பாரக் கொணர்ந்தெற்றி யோர்பெண்ணை வடபால்
கரும்பார் மொழிக்கன் னியர்ஆடுந் துறையூர்
விரும்பா உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே. 7.13.4

பாடார்ந் தனமாவும் பலாக்க ளும்சாடி
நாடார வந்தெற்றி யோர்பெண்ணை வடபால்
மாடார்ந் தனமாளி கைசூழுந் துறையூர்
வேடா உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே. 7.13.5

மட்டார் மலர்க்கொன் றையும்வன்னி யுஞ்சாடி
மொட்டாரக் கொணர்ந்தெற்றி யோர்பெண்ணை வடபால்
கொட்டாட் டொடுபாட் டொலிஓவாத் துறையூர்ச்
சிட்டா உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே. 7.13.6

மாதார் மயிற்பீலி யும்வெண் ணுரைஉந்தித்
தாதாரக் கொணர்ந்தெற்றி யோர்பெண்ணை வடபால்
போதார்ந்தன பொய்கைகள் சூழுந் துறையூர்
நாதா உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே. 7.13.7

கொய்யா மலர்க்கோங் கொடுவேங் கையுஞ்சாடிச்
செய்யாரக் கொணர்ந்தெற்றி யோர்பெண்ணை வடபால்
மையார் தடங்கண் ணியர்ஆடுந் துறையூர்
ஐயா உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே. 7.13.8

விண்ணார்ந்தன மேகங்கள் நின்றுபொழிய
மண்ணாரக் கொணர்ந்தெற்றி ஓர்பெண்ணை வடபால்
பண்ணார் மொழிப் பாவையர் ஆடும்துறையூர்
அண்ணா உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே. 7.13.9

கீழே உள்ள படத்தை மீண்டும் பாருங்கள் ...

ஆக,பெண்ணையாறு தன் பாதையைக் கடந்த 1200 ஆண்டுகளில் மாற்றிக் கொண்டுள்ளது எனத் தெளிவாகிறது. பழைய பெண்ணையாற்றிற்கும் புது பெண்ணையாற்றிற்கும் இடையே ஐந்து கி.மீ. க்கும் அதிகமான இடைவெளி உள்ளதும் தெரிய வருகிறது.

தேவாரம் காட்டும் உண்மைகள் கூகிள் பதிமத்திலும் நன்கு தெரிவதால், நான் பெண்ணையை விளக்கினேன். இது போன்ற இலக்கிய சான்றுகள் பல இருக்கலாம். படித்தறிய வேண்டும்.

அடுத்த கேள்வி, தொல் வைகை ஆற்றால் அழிந்ததா கீழடி?

கீழூர் அருகே பள்ளிசந்தை திடலில், அண்மையில் அகழ்ந்தறியப்பட்ட பண்டை நகரத்தை எப்படி மண் மூடியது எனும் கேள்வி எல்லோர் மனதிலும் எழுந்துள்ளது. வைகை ஆற்றின் கரையில் இருப்பதால் ஆற்று வெள்ளத்தில் மூழ்கி இந்நகரம் அப்படியே அழிந்திருக்கலாம் என்பது எளிதான விடை. வைகை ஆற்றிலிருந்து ஒன்றரை கி.மீ. தூரத்தில் உள்ளதே இவ்வளவு தூரம் வெள்ளம் வருமா என்பதும் சிலரின் ஐயம்.

இது குறித்து தொல்லியலாளர்கள் என்ன சொல்கிறார்கள் என்று பார்ப்போம். தொல்லியலாய்வாளர் சாந்தலிங்கம்:

> "தொல்லியல் ஆய்வாளர் என்ற முறையில் என்னால் ஒன்றை யூகிக்க முடிகிறது. 1300 ஆண்டுகளுக்கு முன்பு அதாவது, கிபி 1650 முதல் 1700 வரையிலான காலகட்டத்தில் மதுரையை ஆண்ட அரிகேசரி என்ற மன்னன், இன்றைய குருவிக்காரன் சாலை அருகே வைகை ஆற்றில் அணை கட்டி, தண்ணீரைக் கால்வாய் வெட்டி பாசனத்திற்குக் கொண்டு சென்றுள்ளான். அந்தக் கால்வாய் கொந்தகை, கீழடி, திருச்சுழி வழியாக வீரசோழன் வரையில் இருந்திருக்கிறது. வைகையில் ஏற்பட்ட பெருவெள்ளம் இந்தக் கால்வாய் வழியாகப் பாய்ந்து கீழடியை மூழ்கடித்திருக்கும் என்று கருதுகிறோம். ஆய்வு தொடர்ந்தால் தான் உண்மையைக் கண்டுபிடிக்க முடியும்."

இதன் அடிப்படையில் கூகிள் பதிமத்தையும் , இஸ்ரோவின் புவன் பதிமத்தையும் ஆய்ந்த போது வைகையிலிருந்து ஒரு சிறு கிளை பிரிந்து கீழடி – வீர சோழன் வழியே சென்று கடலில் கலக்கிறது. இது ஒரு கிளைநதிதானா அன்றி வைகையின் தொல்தடமா? என்பது அடுத்த கேள்வி. இந்தக் கிளை ஆற்றின் நெளிவு சுழிவுகளைக் காணும்போது இது ஓர் வெட்டப்பட்ட கால்வாயன்று, இயற்கையான வாய்க்கால்தான் என்று தெளிவாகிறது. தொடர்ச்சியாக இல்லாமல் விட்டு விட்டு இருப்பதைப் பார்க்கையில் இது தொல்தடமாக இருப்பதற்கே வாய்ப்பு அதிகம் எனத் தெரிகிறது. (புவியியலாளர்களுக்கு தொல்தடங்கள் மீது எப்போதுமே ஒரு காதல் என்பது வேறு

விஷயம்). இதற்கிடையில், இங்குப் பணியாற்றிய திரு அமர்நாத் இராமகிருஷ்ணா அவர்கள் சொல்வதையும் கேட்போம்

பெரும்பாலான அகழ்வாய்வுக் குழிகளில் ஒரு குறிப்பிட ஆழத்திற்குக் கீழ் ஆற்று மணல் படிவங்கள் கிடைக்கின்றன.பல நூற்றாண்டுகளுக்கு முன் இங்கே ஒரு தொல்ஆற்றுத் தடம் இருந்திருக்கும் என்பதை இவை காட்டுகின்றன” (In most of the trenches, below a certain level, layers of river sand have been found, signalling the existence of paleochannels in the area many centuries ago).

ஆக, புவன் மற்றும் கூகிள் பதிமங்களில் நாம் காண்பது, தொல்லாற்றுத்தடமாக இருக்கும் வாய்ப்புகளே அதிகம்.

மேலும், இந்த கீழடி- வீரசோழன் ஆற்றினை அப்படியே இழுத்து கடலுக்குக் கொண்டுபோனால் அங்கே நம்மை வரவேற்க, ஒரு பவளத் தீவு திட்டும் காத்திருக்கிறது.



இந்த தொல் ஆற்றுத் தடம் அகழ்வாய்வுக் குழிகளில் ஒரு குறிப்பிட்ட ஆழத்திற்குக் கீழ் உள்ளதால், இது இந்தப் பண்டை நகரம் உருவாகும் முன்பே இருந்திருக்க வேண்டும் என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. இதனால் நகரம் அழிந்திருக்க வாய்ப்பில்லை.

பிறகு என்னதான் ஆனது?

Singanenjam
singanenjam@gmail.com

***

7. கயவாகு காலம்காட்டி முறைமை - எனது கருதுகோள்

– முகுந்தன்

தமிழக வரலாற்றைக் கணிப்பிடும்போது கயவாகு முக்கிய இடத்தைப் பிடித்துவந்துள்ளான். மகாவம்சத்தை மொழிபெயர்த்த வில்ஹெம் கெய்கர் அவர்களின் கருத்துப்படி முதலாம் கயவாகு கி.பி 171 - 193 இல் வாழ்ந்துள்ளான்.
(மறவன்புலவு க. சச்சிதானந்தன் ஐயா மொழிபெயர்த்த வில்ஹெம் கெய்கர் அவர்களின் "சிங்களவர் வரலாற்று நூல்களின் நம்பகத்தன்மை" நூலின்படி)

இந்தக் கயவாகுவே சிலப்பதிகாரத்தில் கூறப்படும் கயவாகு - அவன் சேரன் செங்குட்டுவன் காலத்தவன் எனும் கருத்து "1800 ஆண்டுகளுக்கு முன் தமிழர்" எனும் நூலில் வி.கனகசபை அவர்களால் கூறப்பட்டு பலராலும் ஏற்கப்பட்டு மற்றும் மறுக்கப்பட்டு வருகின்றது.
(இராம.கி ஐயா எழுதிய "சிலம்பின் காலம்" நூலிலும் இதனை மறுக்கின்றார்.)

இதற்குக் காரணமான சிலப்பதிகார வரிகள்,

உரை பெறு கட்டுரை:
அது கேட்டு, கடல் சூழ் இலங்கைக் கயவாகு என்பான் நங்கைக்கு நாள் பலி-பீடிகைக் கோட்டம் முந்துறுத்து-ஆங்கு, ‘அரந்தை கெடுத்து, வரம் தரும் இவள்’ என, ஆடித் திங்கள் அகவையின், ஆங்கு ஓர் பாடி விழாக் கோள் பல் முறை எடுப்ப, மழை வீற்றிருந்து, வளம் பல பெருகி, பிழையா விளையுள் நாடு ஆயிற்று.

வரந்தரு காதை:
அரும் சிறை நீங்கிய ஆரிய மன்னரும்,
பெரும் சிறைக்கோட்டம் பிரிந்த மன்னரும்,
குடகக் கொங்கரும், மாளுவ வேந்தரும்,
கடல் சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும்,
‘எம் நாட்டு ஆங்கண் இமயவரம்பனின்
நல்நாள் செய்த நாள் அணி வேள்வியில்
வந்து ஈக’ என்றே வணங்கினர் வேண்ட
‘தந்தேன் வரம்!’ என்று எழுந்தது ஒரு குரல்-

கி.பி 5ம் நூற்றாண்டில் எழுந்ததாகக் கூறப்படும் மகாவம்சத்தில் வரும் முதலாம் கயவாகு தமிழகம் வந்ததாகக் குறிப்புகள் இல்லை. ஆனால் கி.பி 17 ம் நூற்றாண்டளவில் எழுதப்பட்ட இராசாவளி நூலில் கயவாகு தனது தந்தையின் காலத்தில் சோழனால் பிடித்துச்செல்லப்பட்ட 12000 பேருக்குப் பதிலாக 24000 பேரையும் பத்தினித் தெய்வத்தின் பொற்சிலம்பையும் புத்தரின் புனித

பாத்திரத்தையும் (வட்டகாமினி அபயன் காலத்தில் பாண்டியர்களால் கொண்டுசெல்லப்பட்டது) நீலன் என்பவன் உதவியுடன் கொண்டுவந்தான் எனக் கூறுகின்றது.

பெரும்பாலானோர் அறிந்த முதலாம், இரண்டாம் கயவாகு தவிர்ந்த வேறும் சில கயவாகு பற்றி மட்டக்களப்பு மான்மிகம் கூறுகின்றது... புவனேய கயவாகு என்னும் கலிங்ககுமாரன் , சோழ இளவரசியை மணந்து, பின்பு இலங்கை வந்து ஒரு பிரதேசத்தை ஆண்டான் எனக் கூறுகின்றது. இந்த புவனேய கயவாகு மற்றும் அவன் மகன் மனுநேய கயவாகுக்கும் சிலப்பதிகாரம் கூறும் கதைக்கும் ஏதாவது தொடர்புள்ளதா எனப் பார்ப்போம்.

இலங்கை வரலாறு கூறும் தமிழ் நூல்கள்:
இலங்கையில் தமிழர் வரலாற்றை அறிவதற்கு எழுதப்பட்ட நூல்களில் கைலாய மாலை, வையாபாடல், பரராசசேகரன் உலா , இராசமுறை, யாழ்ப்பாண வைபவமாலை , மட்டக்களப்பு மான்மியம் , பெரியவளமைப் பத்ததி, குளக்கோட்டன் கம்பசாத்திரம், கோணேசர் கல்வெட்டு , கைலாச புராணம், என்பனவையும் அடங்கும்... இவை மிகப்பிற்காலத்தில் எழுந்த நூல்கள். வரலாறு மற்றும் காலவரிசைகளில் நிறையக் குழப்பங்கள் காணப்படினும், அவற்றைக் குறைத்து மதிப்பிடவேண்டியதில்லை.

இதில் மட்டக்களப்பு மான்மியம் என்பது வழிவழியாக சுவடிகளில் எழுதப்பட்டு வந்த வரலாறு எனக் கூறப்படுகின்றது.

(நூலகம் திட்டத்தில் : http://www.noolaham.org/wiki/index.php/மட்டக்களப்பு_மான்மியம்)

இதனை முழுமையான ஒரு வரலாற்று ஆவணமாகக் கருதமுடியாவிட்டாலும் மற்றைய ஆவணங்கள் கூறும் விடயங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்க உதவியாக இருக்கும்.

இதனைப் பதிப்பித்த F. X. C. நடராசா பின்வருமாறு கூறுகின்றார்...
மட்டக்களப்பின் சரித்திரத்தைக் கூறும் இந்நூல் யாரால் எந்த ஆண்டில் எழுதப்பட்டதென்ற விபரங்களை நூன்முகத்தானும், மறுமுகத்தானும் அறிந்து கொள்ள முடியவில்லை. நூலின் போக்கினையும் வாக்கினையும் நோக்குமிடத்து இது பல்லோரால் பற்பல காலங்களில் எழுதிச் சேர்க்கப்பட்டதென்பது புலனாகின்றது.

ஏட்டு வடிவத்தில் மட்டக்களப்புச் சரித்திரம் இதுவரை அடங்கிக் கிடந்தது. மயில்வாகனப் புலவரால்

எழுதப்பட்ட யாழ்ப்பாண வைபவமாலை எழுந்தகாலத்தே இந்நூலின் ஒரு சில பகுதி எழுதப்பட்டிருக்கலாம் என்று கருத நூலிற் சில பகுதிகள் சான்று பகருகின்றன. இந்நூலில் ஆதி காலந்தொட்டு ஒல்லாந்தர் காலம்வரையுள்ள சரித்திரம் கூறப்பட்டிருக்கிறது. ஆங்கிலேயரின் ஆட்சித் தொடக்கமும் ஓதப்பட்டிருக்கிறது.

மகாவம்சத்திற் கூறுபட்ட பல சங்கதிகள் இந்நூலில் ஒத்திருக்கின்றன. பாலிமொழியிலடங்கிக் கிடந்த மகாவம்சக் கதைகள் பல இந்நூலகத்தே இருக்கின்றன. மகாவம்சத்துடன் ஒத்துப்போகாத விடயங்களுமிருக்கின்றன. ஆகவே இந்நூல் மகாவம்சத்தைத் தழுவி எழுதப்பட்டதென்பதற்கு ஆதாரமில்லை. மகாவம்சத்திலுள்ள சரித்திரம் அறிந்தபின்ரே எழுதப்பட்டிருக்குமாயின் முன்பின் முரணின்றி முடிந்திருக்கும்.

விசயனும், அவன்தோழர்களும் தென்மதுரையிலிருந்து பெண்கள் பெற்றனரென்று மகாவம்சம் கூறுகின்றது. இந்நூலோ வடமதுரையிலிருந்து பெற்றதாக நவில்கின்றது.

மகாவம்சத்திற் கூறப்படும் பேரரசர்கள் பற்றியும் இந்நூல் எடுத்துரைக்கின்றிலது. பொல்லநறுவையில் ஆண்ட வேறு அரசர்களை எடுத்துரைக்கும் இந்நூலில் பராக்கிரமபாகுவைப்பற்றி ஒருவசனமுமில்லை.

ஆடகசவுந்தரியின் சரித்திரம் இந்நூலில் வேறோர் முறையிற் கூறப்பட்டிருக்கிறது. குளக்கோட்டன் கதை எதுவுமில்லை.

யாழ்ப்பாணப் பகுதியை இந்நூல் நாகதீபம், மணற்றி, மணற்றிடர், மணிபுரம் என்ற பல பண்டைப் பெயர்களால் விரித்துரைக்கின்றது.

இடப்பெயர் வரலாறுகளும் இந்நூலிற் காணப்படுகின்றன. பண்டை நூல்களில் இவ்வகை விபரம் காணுமாறில்லை.

காலவரையறை புரியாது அரசர்களை மாறுபடவுங் கூறியுண்டு.

இவ்வகைக் காரணங்களை மனதிற் கொண்டு ஆராயுமிடத்து இந்நூல் வேறோர் நூல்வழி வந்ததன்று என்பது புலனாகும். ஆகவே இந்நூல் மற்ற சரித்திர முதனூல்கள் போல் விளங்குகின்றது எனலாம்.

இந்த நூலில் பண்டைச்சரித்திரமும் உண்டு. ஒல்லாந்தர் வரையுள்ள இக்கால சரித்திரமுண்டு.

மகாவம்சம் கூறுவதுபோல் சிங்கத்தின் கதையைத் தழுவாது சிங்ககுல இளவரசன் வங்கதேசத்துப் பெண்ணைத் தூக்கிச்சென்ற மணமுடித்துப் பிள்ளைகள் பெற்றதாக இந்நூல் விரித்துரைக்கின்றது.



கலியுக ஆண்டுகளையே இந்நூல் கையாண்டு வந்திருக்கிறது. பழைய நூல்களிலேதான் இவ்வகை ஆண்டுமுறை கையாளப்படும்.

பண்டைக்காலத்தில் இலங்கை திரிசிங்கள நாடாகப் பிரிக்கப்பட்ட வரலாறு நவமான முறையிற் தரப்பட்டிருக்கிறது. எல்லாளனும் இவ்வகைப்பிரிவிற் பங்கு கொள்ளுகின்றான்.

இந்திய சரித்திரங்கூட இங்கு காட்டப்பட்டிருக்கின்றது. மகமது சூசினி என்பானின் நிர்ப்பாக்கியத்தால் முற்குகக் குடிகள் மூன்று படகுகளில் மட்டக்களப்பில் வந்து குடியேறினதாக எழுதப்பட்டிருக்கிறது.

இந்நூலின் வசனநடை, சொற்பிரயோகம் இவற்றை நோக்கும்போது பழைமைக்கும், புதுமைக்கும் இடனாக அமைகின்றது. வசனநடை பலபடியாக வளர்ந்து வந்திருக்கின்றது. கதை சொல்லுவது போல நீண்ட வசனங்களும், விளக்கிக் காட்டுவது போல் சிறு சிறு வசனங்களும் காணப்படுகின்றன. யாழ்ப்பாண வைபவமாலையின் வசனநடைவேறு, இதன் வசன நடைவேறு. வகுத்தும் தொகுத்தும் காட்டுவது போன்று நூல் நடந்து செல்கின்றது. சொற்பிரயோகங்களும் விசித்திரமானவை. இக்காலத்து வழங்கும் சங்கதச் சொற்களுமுள.

இவையெல்லாவற்றையும் நோக்குமிடத்து இந்நூல் யாரோ ஒருவரால் மாத்திரம் செய்யப்பட்ட தென்று துணிவதற்கில்லை. பல்லோராற் பற்பல காலங்களிற் செய்யப்பட்ட தென்பதே புலனாகின்றது.

இதனை எழுதியவர்கள் யாவரும் உண்மை வரலாறு அறிந்தவர்களாகவே தோற்றப்படுகின்றனர். பண்டைய வரலாறுகளில் அபிப்பிராயபேதம் இருப்பதால் அவைபற்றி உறுதியாக எதுவுஞ் சொல்லமுடியாது.

மாகோன் படையெடுத்து வந்து இலங்கையை வென்றமை யாவராலும் ஒப்புக் கொள்ளப்படுகின்றது. இவனின் சரித்திரம் ஆதியோடந்தமாக விரித்துரைக்கப்பட்டிருக்கின்றது.

இந்நூலும் யாழ்ப்பாண வைபவமாலை நவில்வது போல் ஒல்லாந்தரின் தூண்டுதலால் எழுதப்பட்டிருக்கலாமோ என்று நினைக்கவும் இடந்தருகின்றது.

பெரிய கல்வெட்டு, தாதன் கல்வெட்டு, போடி கல்வெட்டு இவையெல்லாம் அகவற்பாவாலானவை. இவையும் வரலாறு கூறுவன. வசனப்பகுதியிலுள்ள சில

சம்பவங்கள் செய்யுள்; நடையிற் தரப்பட்டிருக்கின்றன. ஆகவே நூல்வசனமும், செய்யுளுமாகச் செய்யப்பட்டிருக்கிறது எனலாம்

*** இங்கே கலி வருட ஆரம்பம் கி.மு 3102 என எடுத்துக்கொள்கின்றேன்.. மற்றும் இங்கே கூறப்படும் ஆண்டுக்கணக்கு சரியானதா எனவும் கூறமுடியாது...**

மட்டக்களப்பு மான்மியம் கூறும் சில தகவல்கள்:
இந்த நூல் இராவணன் - குபேரன் காலத்திலிருந்து வரலாற்றைக் கூறத் தொடங்குகின்றது..
பின்பு மகாபாரதப் போர்முடிந்தபின் அத்தினாபுரத்து நாகர் கலி ஆண்டு 800 இல் (கி.மு.2300) இலங்கை வந்ததாகவும்

குருகுலத்து
அன்றிய நாகர் கூடி அத்தி நாடதனால் மீண்டு
வன்றிற விலங்கை சேர்ந்து வாழ்ந்தனர் கலி எண்ணூறில்

பின்பு விஜயனும் தோழர்களும் இலங்கையை கலி ஆண்டு 2706 இல் (கி.மு 396) அடையும்போது அங்கே நாகர் சிற்றரசன் முல்லைத்தீவிலிருந்து ஆண்டதாகவும் பின்பு விஜயன் குவேனி எனும் இயக்கர் பெண்ணை மணந்து காளிசேனன் எனும் அரசனைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றியதாகவும் கூறுகின்றது...

இந்நூல் கூறும் சில வரலாற்றுக் காலங்கள்:
அத்தினாபுரத்து நாகர் இலங்கை வருகை - கலி ஆண்டு 800 (கி.மு.2300)
விஜயனும் தோழர்களும் இலங்கை வருகை - கலி ஆண்டு 2706 இல் (கி.மு 396)
கலிங்க மாகன் - கலி ஆண்டு 4250 இல் (கி.பி 1148)
கஜினி முகமது - கலி ஆண்டு 4115 அளவில் (கி.பி 1013)

மகாவம்சத்திற்கும் மட்டக்களப்பு மான்மியத்திற்குமிடையில் பல கால வேறுபாடுகள் இருப்பினும் ஒரு புதிய விடயத்தைப் பார்ப்போம்.

பிரசன்னசித்து - சரித்திரம்:
பிரசன்ன சித்து கலிபிறந்து மூவாயிரத்து நூற்றுப்பத்தாம் வருஷம் மட்டக்களப்புக்கு அரசுக்கு வந்த போது தேவர் சந்நிதியியற்ற விருப்புடையவனாக இருந்து வரும் காலம் புவனேயகயவாகு என்னுமொரு கலிங்ககுமாரன் சோழநாட்டிலரசியற்றி வரும் திருச்சோழனுடைய மகள் தம்பதிநல்லாள் என்பவளைப் பாணிக்கிரகணஞ் செய்து சில காலத்தின் பின்பு புத்திரனில்லாமையால் இராமேசுவரம் தரிசனை செய்து

மண்டபமொன்றியற்றும்படி திரவியமுங் கொடுத்து திட்டஞ் செய்து இலங்கையில் வந்து திருக்கேதீஸ்வரம் தரிசனை செய்து தானம் தன் மனைவியும் சிறைதளங்களோடு கோணேஸ்வரர் தரிசனை செய்து நிற்கும் போது மணிபுரத்தை அரசுபுரியும் நாகர்குலத்துச் சிற்றரசனுடைய மந்திரி கொட்டாயனென்பவன் புவநேயகவாகுவை நோக்கி என்னுடைய உத்தரவில்லாமல் நீயிங்கு வரப்படாதென விளம்பினன். அதனைக் கேட்ட புவனேயகயவாகுவும் தன்னோடு வந்து சோழவீரியர்களை ஏவிக் கொட்டியன் முதலிய நாகர் குலத்துப் பிரதானிகளையெல்லாம் வெட்டிக் கொன்று செயித்துச் சிலரை அந்நகரத்தாலகற்றியும் தெட்சணாபதியைத் தன்னளவிருத்திச் சோழநாட்டு வீரியர்களைக் காவல் வைத்து மட்டக்களப்பை அரசுபுரியும் வாகூரன் புத்திரன் பிரசன்னசித்துவிடத்தில் மனைவி துணைவரோடு வந்து குலமுகமன் கொண்டாடி ஆகாரமுண்டு பிரசன்னசித்துவிடத்தில் தெட்சணாபதியை ஒப்புக்கொடுத்துச் சில நாளிருந்து புவனேயகயவாகுவும் தனது நகரம் போகக் கருத்துற்ற போது பிரசன்ன சித்துவும் நாகர்முனையில் பண்டு-நாளில் சுப்பிரமணியர் ஆலயம் பாழடைந்திருப்பதால் நாட்டுச் சிற்பிகளை அழைத்துச் செப்பனிட்டுத் தரும்படி வேண்டினன். அதனை உணர்ந்த புவனேயகயவாகுவும் தனது மாமன் திருச்சோழனுக்கு மட்டக்களப்பு நாகர்முனைச் சுப்பிரமணியர் ஆலயத்தைச் செப்பனிடக் கருத்துற்றேன். அதற்குச் சிற்பிகளும் திரவியங்களும் அனுப்பும்படி திருமுகம் அனுப்பினன். திருமுகத்தை வாசித்த திருச்சோழனும் சந்தோஷமடைந்து மருகன் கேட்டபடி அனுப்பினன். சிற்பிகள் வந்து புவனேயகயபாகுவைக் கண்டு நமஸ்காரம் செய்து ஆலயத்தைச் செப்பனிட்டு புவனேயகயபாகுவும் அந்தணர் புத்தியின்படி அபிசேகஞ் செய்து திருக்கோயிலென நாமஞ் சாற்றி பிரசின்ன சித்துவிடம் ஒப்புக்கொடுத்துச் சில நாளிருக்க புவனேயகயபாகுவின் மனைவி தம்பதி நல்லாளுக்குக் கெற்பமுண்டாக பிரசின்னசித்துவும் மனமகிழ்ச்சி கொண்டு புவனேயகயபாகுவுக்கு ஒரு நாடுண்டாக்கக் கருதி, வடக்கு மக்கனல் வெட்டுவாய்க்காலும், தெற்கு மாணிக்க கங்கையும், மேற்குக் கடவத்தையும் கிழக்குச் சமுத்திரமாயுமுள்ள ஒரு கிராமத்தை உண்டாக்கிக் கவடா மலையில் மாளிகை உண்டாக்கி புவனேயகயபாகுவுக்குக் கைலஞ்சமாகக் கொடுத்து அரசிருக்கச் செய்து புன்னரசி என்று நாமஞ்சாற்றிக் கல்லிலும் வெட்டிவைத்து தன்னிருப்பிடஞ் சென்றான். இது நிகழ்ந்தது கலிபிறந்து மூவாயிரத்து நூற்றுமுப்பதாம் வருஷம். அதன்பின்பு புவனேயகயவாகு தன்னோடு வந்த பிரதானி சோழவீரியர் சிறைத்தளங்களாகவும், தன்னரகாயிருத்தி தனது நகரத்துள் கழனிகள் திருத்தி குடிபடைசிறைகளை வைத்து வாழ்ந்து வருங்காலம் தனது மனைவிக்குப் பிரசவ காலம் நேரிட்டது. அன்று விடாமழை பெய்ய அத்தினத்தில் புத்திரன் பிறந்தான். அப்பிள்ளைக்கு மேகவர்ணன் என்றும் மனுநேயகயவாகு என்றும் நாமஞ்சாற்றி வாழ்ந்து வருங்காலம் புத்திரனுக்கு இராச பருவகாலம் வர வங்கதேசத்துக் குலசந்திரனுடைய புத்திரி அழகுவல்லியை மணம்முடிப்பித்து உன்னரசுகிரியையும் பட்டங் கட்டிச் சிலகாலத்தின் பின் புவனேயகயவாகுவும் அவர் மனைவியும் ஒரே தினத்தில் தேகவியோகம் அடைந்தனர்.

மனுநேயகயவாகுவின் சரித்திரம்:

மனுநேயகவாகு கலிபிறந்து மூவாயிரத்து நூற்றைம்பதாம் வருஷம் பட்டத்துக்கு வந்தான். இவன் உன்னரசுகிரிக்கு மேற்கிலும் தெற்கிலும் உள்ள நாடு நகரங்களை எல்லாம் தன்கைவசப்படுத்தித் திசைவாங்க அரசுபுரியுங்காலம் மட்டக்களப்பை அரசுபுரியும் பிரசன்னசித்துவின் புத்திரன் நாசகனைச் சிநேகம் கொண்டு தந்தையாலியற்றிய நாகர்முனை ஆலயத்தை அந்தணர் புத்தியின்படி செப்பனிடக் கருதிச் சோழநாட்டுச் சிற்பிகளை அழைத்து ஏழுதட்டுத் தூபியும் மதில் மண்டபங்கள் மாதர்சாலை, வாகனவீடு, கோபுரவாசல், தங்கத் தகடு பூட்டிய கொடித்தம்பம் தூபியின் மேலே ஏழு தங்கக் குடமும் நிறைந்து ஆறுவீதியும் அலங்கரித்து அந்தணரால் அபிஷேகங்கள் செய்வித்துத் தனது மாதாபிதா வமிசத்தாருக்கு வங்கதேசம் சிங்கபுரம் சோழநாடு கலிங்கநாடு இராமநாடு இவற்றை அரசுபுரியும் புரவலர்களுக்குத் தந்தை தாயுடைய சம்பவங்களும் கலிங்கர் வங்கர் சிங்கர் இலங்கையை அரசுபுரியும் நேர்மைகளும், தனது தந்தையால் முன் நாகர் முனையிலியற்றிய திருப்பணிச் சம்பவங்களும் அந்தத் திருமுகப்பணியை யான் அந்தணர் புத்தியின்படி தமிழ் மதம் ஓங்கச் சோழ நாட்டுச் சிற்பிகளை அழைத்துச் செப்பனிட்டு அபிசேகம் இன்னதினமெனத் திருமுகம் அனுப்பினர். அதை வாசித்தறிந்து அரசர்கள் மாணிக்கம், முத்து, இரத்தினம், நாகமணி, தங்கத்தட்டு, பாரிசாதம், சரிகைப் பட்டு இவற்றை ஏழு இராசர் கையில் கொடுத்து தங்கள் தங்கள் பந்துகள் நாற்பது திறைக் குடிகளையும் அனுப்பிவிட்டனர். அவர்கள் ஒருங்கு சேர்ந்து ஒரு படகில் ஏறி தென்சமுத்திரம் சார்ந்து நாகர்முனைக்கு அடுக்காயிருக்கும் களப்பு முகத்திலிறங்கி நிற்க, தாசகன் மனுநேயகவாகுனின் பிரதானிகள் அந்தணர்களோடு எதிர் சென்று முகமன் கொண்டாட அந்தணர்களை ஏழு இராசரும் நாற்பது திறைக் குடிகளும் தம்பட்டனென வாழ்த்தித் திருப்பணிக்குச் சென்று ஏழு இராசரும் அவர் அவர்கள் கொண்டு வந்த திரவியங்களையும் அரசினர்தந் பதி நல்லாள் பந்துகள் கொடுத்த பத்திரங்களையும் மனுநேயகவாகுவிடம் கொடுத்து பரிசுபுரிந்தனர். மனுநேயகயவாகுவும் வந்தவர்களை ஆசீர்வதித்து அறுசுவையுடன் அமுதளிப்பித்து அபிசேகஞ் செய்து ஆறுகாலம் பூசை நடக்கும்படி ஏழு இராசர்களையும் படையாட்சி குலத்தில் மூன்று வன்னியர்களையும் வகுத்து இருபாகை முதன்மையாக கலிங்ககுலத்து பிரசன்னசித்துவினுடைய சந்ததிகளே வரவேண்டுமென்றும், ஐந்து பண்டாரங்களும், அந்தணர். முதன்மை இராசர் இவர்களுடைய உள்ளியர் என்றும் பதினாறு சிறைகளும் காராளருடைய உள்ளியர் என்றும் மனுநேயகயவாகுவும் தாசகனும் கற்பித்தனன். பின்பு திருப்பணிக்கு ஆதாரமாக மனுநேயகவாகுவும் தாசகனும் ஏரிகள் இயற்றிக் கழனிகள் உண்டாக்கக் கருதி சங்குமண்கண்டு தலையாகவும் தாடைகிரிபாதமாகவும் இருபத்துநான்கு ஏரி ஒன்றாகவும் முப்பத்திரண்டு மதகுவைத்து ஒரு ஏரி இயற்றி சமுத்திரக் கரைவரை கழனிகள் திருத்தி நீர் மிஞ்சிவந்தால் ஏரியை இரண்டாகப் பிரித்து நடுவில் கள்ளி ஓடையாய் வெட்டிச் சமுத்திரக் கரையில் கொண்டுவிட்டு நாகமுனைக்குத் திருப்பணிக்கு ஈந்து மட்டக்களப்பை அரசுபுரியும் தாசனிடத்து ஒப்புக்கொடுத்து இராசரும் வந்த திறைக் குடிகளும் தம்பட்டர் என்று அந்தணர்களைக் கண்டு பேசிய

இடத்தில் அந்தணர்களைக் குடியிருத்தி பட்டையும் வரிசைகளையும் கொடுத்து மாணிக்க வைரத்தால் ஒரு கணேசவிக்கிரகமும் ஸ்தாபித்து தம்பட்டார் ஊரென நாமம் சூட்டி, தனதுமாதா தம்பதி நல்லாள் பேரில் ஒரு வாவியும் இயற்றி அந்த வாவிக்குத் தம்பதிவில் என்று நாமம் சாற்றி தாசகனிடத்து விருந்துண்டு முகமன் கொண்டாடி உன்னரசுகிரிவில் மனைவியும் வரும்சிறைத் தளங்களோடு சென்று வாழ்ந்துவரும் காலம் மனைவிக்கு சந்தானமில்லாமையால் விசனமுற்று இருக்கும்போது ஒரு பேழை சமுத்திரத்தில் அடைந்துவந்து கரை ஏறக்கண்ட வேவுகாரன் ஒருவன் உன்னரசுகிரியில் சென்று மனுநேயகயவாகுவிடத்தில் கைகட்டி நின்று. அரசே சமுத்திரக்கரையில் ஒரு அழகுசவுந்திரியமான பேழை அடைந்து கரைசேர்ந்திருக்கிறதென விண்ணப்பம் செய்தான். அதைக்கேட்ட அரசன் பிரதானிகளோடு கடற்கரைக்குச் சென்று பேழையைத் திறந்தான். அதற்குள் ஒருபெண் குழந்தையிருந்து கல கல என நகைத்தது. அதைக் கண்ட அரசன் மனமகிழ்ச்சியோடு பல்லக்கில் வைத்து உன்னரசுகிரிக்குச் சென்று தன் மனைவி கையில் கொடுத்து ஆடகசவுந்திரி என நாமம் சூட்டி நாளொருவண்ணமாய் வளர்த்துப் பேழை அடைந்த இடத்தை நகராக்கி பாலர்நகை நாடென நாமம் சாற்றிக் குடியேற்றி அந்தநாடும் மட்டக்களப்பு எல்லையான படியால் தாசகனிடத்தில் ஒப்புக்கொடுத்துத் தனது நகரம் போயினன். தாசகனும் அந்தப் பாலர் நகரைக் காட்டில் படகுகட்டும் துறையாக்கி அணையும் இயற்றினன். அதன்பின் வடநாட்டு வர்த்தகர்கள் வந்து வர்த்தகம் செய்தனர். பின்பு மனுநேயகயவாகுவின் மந்திரி ஆடகசவுந்தரிக்கு ஏழுவயதில் சயனிக்கும் போது ஒருவர் தெரிசனபிரசன்னராகி இராமமந்திரம் ஒன்றும், இராமதியானமே வணக்கமொன்றும், உபதேசித்தகன்றார். உடனே விழித்து மறுநாட்காலையில் மந்திரஞ் செபித்து இராம மூர்த்தியை வணங்கி வருங்காலம் மனுனேயகயவாவுக்கு ஆடகசவுந்தரியினுடைய பூர்வ சம்பவங்களை வடநாட்டு வர்த்தகப் பிரபுக்கள் விளங்கப்படுத்தினர். மனுனேயகயவாகுவும் புத்திரிதனக்கு உரிமை உடையவளென்றும் உன்னரசுகிரியைப் பட்டங்கட்டி பரமபதம் அடைந்தனன்.

மேலும் இரு கயவாகு:

இதில் கூறப்படும் இரு கயவாகு புவநேய கயவாகு , மனுநேய கயவாகு. அதைப்பற்றி விரிவாகப் பார்ப்போம்..

புவனேயகயவாகு - கலி 3130 (கி.பி.28)

கலிங்கத்தைச் சேர்ந்தவன் - சோழ மன்னன் திருச்சோழனின் மகள் தம்பதி நல்லாளை மணம் முடித்துப் பின் இலங்கை வந்தான்.

மனுநேயகயவாகு என்னும் மேகவர்ணன் - கலி 3150 (கி.பி.48)

புவனேயகயவாகுவின் மகன் - பேழையில் வந்த குழந்தைக்கு ஆடகசவுந்தரி எனப் பெயரிட்டு வளர்த்து வந்தான்.

ஆடகசவுந்தரி கதை:

ஆடகசவுந்தரி வரலாறு புராணத்தன்மை நிரம்பியதாகக் காணப்படுகின்றது .. கலி 3180 – 3370 (190 ஆண்டுகள்) அளவில் ஆடகசவுந்தரி வாழ்ந்ததாகக் கூறுகின்றது... மகாவம்சம் கூறும் மகாசேனனை(கி.பி 325 – 352) மணந்து அரசாண்டதாகக் கூறும் இந்நூல் மகாசேனன் சைவ ஆலயங்களைத் திருத்தியதாகக் கூறுகின்றது. மகாவம்சம், அவன் சைவ ஆலயங்களை இடித்ததாகக் கூறுகின்றது.

சங்கமிகிந்து (சங்கமித்திரர் ??) வைதூலிக சைவமதத்தை வளரச்செய்ய விரும்பியதாக மட்டக்களப்பு மான்மியம் கூறுகின்றது.. மேலும் அவர் அனுராதபுர மன்னனின் சகோதரன் எனக் கூறுகின்றது.. தேரவாத மற்றும் மகாயான பௌத்த பிரிவுக்கிடையில் நடந்த பூசல்களையே அது சைவ – பௌத்த பூசல்களாகக் கூறுகின்றது எனக் கருத இடமுண்டு. இருப்பினும் வைதூலிக மதம் என்பது மகாயான பௌத்தமாக இருக்கலாம் ..

ஆடகசவுந்தரியின் பிற்கால வரலாறு மகாசேனன் காலத்தோடு ஓரளவு ஒத்துப்போகின்றது. ஆயினும் ஆடகசவுந்தரியின் மிகநீண்ட வாழ்க்கைக்காலம், மனுநேயகயவாகுவின் காலத்திற்குப் பின்னாலான தெளிவற்ற வரலாற்றால் மனுநேயகயவாகுவின் மகளையும் ஆடகசவுந்தரியையும் இணைத்துக் கூறப்பட்டதாகக் கருதலாம்.. அல்லது இருவரது பெயரும் ஒன்றாக இருந்து ஒருவராகக் கருதி வரலாறு மாற்றப்பட்டதாகவும் கருதலாம்..

கண்ணகி – கோவலன் கதை சிலப்பதிகாரம் தவிர நாட்டார் பாடல்களாகவும் வழங்கிவந்துள்ளன. அவற்றுள் கோவிலன் கதை, கண்ணகி வழக்குரை மற்றும் சிலம்பு கூறல் என்பன குறிப்பிடத்தக்கவை... அவை கண்ணகியை பாண்டிய மன்னனின் மகள் என்றும் சோதிடர் சொன்னதைக்கேட்டு பாண்டியன் குழந்தையைப் பேழையில் ஆற்றில் விட்டதாகவும் கூறும்.

பத்தினி வழிபாடு எனும் நூலில் சி. கணபதிப்பிள்ளை பின்வருமாறு கூறுகின்றார். (இதற்கான ஆதாரங்கள் என்னவென்று தெரியவில்லை)

சந்தன மரத்தால் செய்த கண்ணகி உருவமும் ஒரு சிலம்பும் சந்தன மரப்பலகையால் செய்த பேழையில் வைத்துக் கயவாகுக்குச் செங்குட்டுவன் கொடுத்தான். பாண்டிய அரசன் வெற்றிவேற்செழியன் யானைமேல் சந்தனப் பலகையாற் செய்த பெட்டியையும் அரசனையும் ஏற்றி வேதாரணியத்தில் கொண்டுவந்து விட்டான் . அங்கிருந்து கப்பலில் காரைதீவுக்கும் கீரிமலைக்குமிடையிலுள்ள திருவடிநிலையில் இறங்கினார்கள்.

(இதையும் பாருங்கள் - அகநானூறு
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிறி ஆர்ப்பெழ வளைஇ

அருஞ்சமங் கடந்து படிமம் வவ்விய
நெடுநல் யானை அடுபோர்ச் செழியன்
கொடிநுடங்கு மறுகில் கூடல் குடாஅது - எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார்)

(சிலம்பு கூறல் காவியத்தில் கண்ணகியின் காற்சிலம்புக்கு மாணிக்கம் எடுக்க இலங்கை வந்ததாக ஒரு கதை உண்டு.. வேறொரு இழையில் அதனைப் பார்ப்போம்)

எனது கருதுகோள்:
இங்கே கூறப்படும் மனுநேயகயவாகு, சிலப்பதிகாரம் கூறும் கயவாகுவாக இருக்கலாம்..
இலங்கைக்குக் கண்ணகி வழிபாடு வந்ததை ஆடகசவுந்தரி ஆற்றில் பேழையில் வந்ததாகக் கூறப்பட்டிருக்கலாம்..

புவனேயகயவாகு சோழ மன்னன் திருச்சோழனின் மகள் தம்பதி நல்லாளை மணந்ததாகக் கூறப்படுவதால் திகழ் ஒளி ஞாயிற்றுச் சோழன் மகள் ஈன்ற மைந்தன் செங்குட்டுவனுக்கும் மனுநேயகயவாகுக்கும் உறவுமுறை இருக்கலாம். அதனால் மனுநேயகயவாகு பத்தினிக் கடவுள் விழாவுக்குச் சென்றிருக்கலாம்.

சிங்கள, தமிழ் வரலாற்று நூல்களை மற்றும் ஏனைய சான்றுகளை ஒன்றிணைத்து ஒரு ஆராய்ச்சி செய்தால், மேலும் பல விடயங்களை அறியக்கூடும்..
வரலாற்றறிஞர்கள் இதுபற்றி மேலும் ஆராயவேண்டும்.

முகுந்தன்
mukunthan@gmail.com

***

8. கருப்பும் கறுப்பும்!

– நூ.த.லோக சுந்தரம்

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு மற்றும் 18 கீழ்க்கணக்கு எனவரும் சங்கநூல்களில் (8=10=18) வல்லின உகர 'றகரம்' வரும் **"கறுப்பு"** எனும் சொல்லிற்கு இருபொருள்கள் காணப்படுகின்றன.

(1) கார் = கரிய நிறம்
(2) சினம் கோபம் கொள்ளும் மனநிலை

சிறுதினை கொய்யக் கவ்வை கறுப்பக்
கருங்கால் வரகின் இருங்குரல் புலர [மதுரைக் காஞ்சி - 272]
/= நிறம்/
(கவ்வை-எள்ளின் இளங்காய் = நிகண்டு)
("கருங்கால் வரகின்" என்பதில் கரியநிறமும் காணலாம்)

வானமாமலை வாய்சூழ்பு கறுப்பக் கானங்
கல்லென் றிரட்டப் புள்ளின மொலிப்ப [குறிஞ்சிப்பாட்டு - 227]
/= நிறம்/

தொன்றுகறுத் துறையுந் துப்புத்தர வந்த
அண்ணல் யானை அடுபோர் வேந்தர் [மதுரைக் காஞ்சி - 347]
/=சினம் /

கறுவுகொள் நெஞ்சமொடு
களம்வேட் டன்றேஒருமுகம் [திருமுருகாற்றுப்படை - 100]
/=சினம் /

செம்மல் உள்ளம் துரத்தலின் கறுத்தோர் [அகநானுறு - 81]
/=சினம் /

உள் ஆங்கு உவத்தல் செல்லார் கறுத்தோர் [அகநானுறு - 111]
/=சினம் /

நம் உயர்வு உள்ளினர் காதலர் கறுத்தோர் [அகநானுறு - 187]
/=சினம் /

அரும்பொருள் வேட்டம் எண்ணி கறுத்தோர் [அகநானுறு - 389]
/=சினம் /

அவல நெஞ்சமொடு செல்வல்: நிற் கறுத்தோர் [புறநானூறு - 210]
/=சினம் /

கீழும் மேலும் எஞ்சாமைப் பல காய்த்து
வாலிதின் விளைந்த புது வரகு அரியத்
தினை கொய்யக் கவ்வை கறுப்ப அவரைக்
கொழுங்கொடி விளர்க் காய் கோட்பதம்ஆக [புறநானூறு - 220]
/= நிறம்/
(கவ்வை-எள்ளின் இளங்காய்)

கல் உறின், அவ்வடி கறுக்குந அல்லவோ [கலித்தொகை - 13]
/= நிறம்/

கறுவுகொண்டுஅதன்முதல்குத்தியமதயானை [கலித்தொகை - 36]
/=சினம் /

முரு(கு)உடன்று கறுத்த கலிஅழி மூதூர் [பதிற்றுப்பத்து - 26]
/ = நிறம்/

கறுத்த தெவ்வர் கடிமுனை அலற [பதிற்றுப்பத்து - 39]
/=சினம் /

ஆர்பதம் நல்கும் என்ப கறுத்தோர்
உறுமுரண் தாங்கிய தார்அரும் தகைப்பின் [பதிற்றுப்பத்து - 66]
/=சினம் /

காவல் எதிரார் கறுத்தோர் நாடுநின் [பதிற்றுப்பத்து - 72]
/=சினம் /

மையறு சுடர்நுதல் விளங்கக் கறுத்தோர் [ஐங்குறுநூறு - 474]
/=சினம் /

கற்றாற்று வாரைக் கறுப்பித்துக் கல்லாதார்
சொற்றாற்றுக் கொண்டு சுனைத்தெழுதல் - எற்றெனின்
தானும் நடவான் 'முடவன் பிடிப்பூணி
யானையோ டாடல் உறவு' [பழமொழி நானூறு - 16]
/=சினம் /

மெய்ம்மையே நின்று மிகநோக்கப் பட்டவர்
கைம்மேலே நின்று கறுப்பன செய்தொழுகிப்

பொய்ம்மேலே கொண்டவ் விறைவற்கொன் றார் 'குறைப்பர்
தம்மேலே வீழப் பனை [பழமொழி நானூறு - 280]
/=சினம் /

கறுத்து இன்னா செய்தஅக் கண்ணும் மறுத்துஇன்னா
செய்யாமை மாசுஅற்றார் கோள் [குறள் - 312]
/=சினம் /

கால்தூய்மை யில்லாக் கலிமாவும் காழ்கடிந்துறுத்து
மேல்தூய்மை யில்லாத வெங்களிறும் - சீறிக்
கறுவி வெகுண்டுரைப்பான் பள்ளிஇம் மூன்றும்
குறுகார் அறிவுடை யார் [திரிகடுகம் - 46]
/=சினம் /

ஒருத்தியான் ஒன்றல பல்பகை என்னை
விருத்தியாக் கொண்டன வேறாப் - பொருத்தில்
மடல்அன்றில் மாலை படுவசி ஆம்பல்
கடலன்றிக் காரூர் கறுத்து [திணைமாலை நூற்றைம்பது - 120]
/= நிறம்/

இயற்பகை வெல்குறுவான் ஏமாப்ப முன்னே
அயற்பகை தூண்டி விடுத்தோர் - நயத்தால்
கறுவழங்கிக் கைக்கெளிதாய்ச் செய்க அதுவே
'சிறுகுரங்கின் கையால் துழா' [பழமொழி - 400]
/= ????/

கறுத்த பகைமுனையும் கள்ளாட்டுக் கண்ணும் [ஆசாரக்கோவை - 55]
/=சினம் /

ஆய்ந்தமைந்த கேள்வி அறிவுடையார் எஞ்ஞான்றும்
காய்ந்தமைந்த சொல்லார் கறுத்து [நாலடியார் - 62]
/=சினம் /

பெறுவதொன் றின்றியும் பெற்றானே போலக்
கறுவுகொண் டேலாதார் மாட்டும் - கறுவினால்
கோத்தின்னா கூறி உரையாக்கால் பேதைக்கு
நாத்தின்னும் நல்ல சுனைத்து [நாலடியார் - 334]
/=சினம் /

வெள்ளி விழுந்தொடி மென்கருப்பு உலக்கை [அகநானூறு - 286]
/= ????/

என ஒரே ஒரு இடம் தவிர 'கருப்பு' எனும் சொல் வேறெங்கும் காணவில்லை. இதனில் கருப்பின்னுக்கு மென் எனும் பண்பு முன்னொட்டு சேர்ந்துள்ளதால் சுவடி பாடமே சரிதானா என பெரியதொரு ஐயமும் எழுகின்றது.

அதான்று;
'கரு' எனும் உரி வரும் பற்பல இடங்களில் 'சினை' எனும் பொருளில் '6' வரிகளில் கருப்பை எனும் பொருளில்தான் காண்கின்றன

ஆனால்;
கருப்பு வில்லி என காமனைக் குறிக்கும் சொல் உள்ளது; அதாவது கரும்பினை வில்லாக ஏந்தியவன் எனும் பொருளில்

கருப்பு எனும் சொல் நாம் இப்போது கரும்பு எனும் பயிரினமாவதை வருவதை ஆயிரம் ஆயிரம் எடுத்துக்காட்டுகளால் காட்டலாம்

வெளுத்த நிறத்தில் கரும்பு வளர்ந்தாலும் பெரும்பாலும் கரிய நிறத்தில்தான் காணலாம் அல்லவா?
எனவே கரியநிறத்துக்கும் கரும்பிற்கும் தொடர்பு முற்றிலும் இருக்கின்றது.

தேவாரம் போன்ற 7-10 நூற்றாண்டு நூல்களில்
'கண்டங்கறுத்தான் கறுப்புஅழ காய்உடையான்' என சிவபெருமான் கழுத்து கறுத்தது (கரிய நிறம்) எ ன வல்லின உகரம் ஏறிய றகரத்தால் எழுதி உள்ளமைக் காணலாம்.

ஆனால்; திருமாலின் நிறம் 'கரி'யது என வரும் போது 'கரு' என இடையின ரகரம் மட்டும்தான் காணலாம்.

கரிய நிற யானையைக்குறிக்க இடையின ரகரம்தான் வரும் அல்லவா!!
எனவே; கரிய நிறம் தனக்கு ரகரம் றகரம் என இரண்டும் போலியாவது நீண்டநாள் பயன்பாடாகின்றது எனலாம்.

நூ த லோ சு
(நூ.த.லோக சுந்தரம்)
மயிலை
selvindls61@gmail.com

***

9. கோண்ட்வானா

– சிங்கநெஞ்சம் சம்பந்தம்

“கோண்ட்வானா லேண்ட்”, “குமரிக் கண்டம்” இரண்டும் ஒன்றா? கேள்விக் கணையுடன் என் அறையில் நுழைந்த நண்பர் கையில் ஆங்கிலப் புத்தகம் ஒன்று இருந்தது. அதில் GONDWANA LAND (KUMARIK KANDAM) என்றிருந்தது.. முன்பெல்லாம் லெமூரியா அல்லது குமரிக் கண்டம் என்று எழுதி வந்தனர். லெமூரியா கருத்து கைவிடப்பட்டதால் இப்போது கோண்ட்வானாவைப் பிடித்துக் கொண்டனர். அவ்வளவுதான்.

சரி, கோண்ட்வானா என்றால் என்ன? “ கோண்ட்” என அழைக்கப்படும் பழங்குடியினர் வசிக்கும் பகுதி / வனப் பகுதி கோண்ட்வானா என்று அழைக்கப் பட்டது. இதில், வங்கத்தின் மேற்குப் பகுதி, ஜார்கண்ட் , சத்தீஸ்கரின் கிழக்கு மற்றும் தென் மேற்குப் பகுதிகள் (பஸ்தார்), விதர்பாவின் கிழக்குப் பகுதி மற்றும் தெலுங்கானாவின் வடக்குப் பகுதி ஆகியவை அடங்கும். இவர்கள் தனித்தனி குழுக்களாக இருந்து வருவதால் இதுதான் எல்லை என்று கோண்ட்வானா லேண்டை வரைப்படுத்த இயலாது.

இனி, பத்தொன்பதாம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்ட ரயில் வண்டி , 1850 களில் நம் நாட்டிற்குக் கொண்டு வரப்பட்டது. நீராவி என்ஜினை இயக்க நிலக்கரி வேண்டுமே, அதற்காக 1851 இல் எங்கள் “ GEOLOGICAL SURVEY OF INDIA (GSI) (ஜி.எஸ்.ஐ) துவக்கப் பட்டது.. இவர்களின் முதல் வேலை , நிலக்கரிப் படிவங்களைக் கண்டு பிடிப்பதுதான். நிலக்கரிப் படிவங்கள் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் உருவான படிவப் பாறைகளில் மட்டுமே கிடைக்கும். அத்தகைய படிவப் பாறைகளை அவற்றில் உள்ள தொல்லுயிர் எச்சங்கள், குறிப்பாக தொல் தாவர எச்சங்களைக் (படம்)கொண்டு இனம் கண்டுகொள்ள இயலும்.



ஜார்கண்ட் , சத்தீஸ்கரின் பிலாஸ்பூர் மாவட்டம், ஓடிஷாவின் டால்சிர் பகுதி, வங்கத்தின் மேற்குப் பகுதி, விதர்பாவின் கிழக்குப் பகுதி இங்கெல்லாம் நிலக்கரிப்படிவங்களை (படம்) உள்ளடக்கிய படிவப்பாறைகள் கண்டறியப்பட்டன.

இந்தப் படிவப்பாறைகள் கோண்ட் பழங்குடிகள் வாழும் பகுதியில் அதிகம் கிடைத்ததால், இந்தப் பாறைத் தொகுப்புக்கு, ஜி.எஸ்.ஐ. புவியியலாளர் HENRY BENEDICT MEDLICOTT,1872 ஆம் ஆண்டு “கோண்ட்வானா பாறைகள்” எனப் பெயரிட்டார். (இது மரபு. தமிழகத்தின் கிழக்குக் கரையோரம் அதிக அளவில் காணப்படும் “கடலூர் மணற்பாறைகள்” முதன் முதலில் கடலூர் திருவந்திபுரம் அருகே கண்டறியப்பட்டதால் அவை அப்பெயரில் அறியப்படுகின்றன. புதுக்கோட்டையிலும் இருந்தாலும் சரி , புதுச்சேரியிலும் இருந்தாலும் சரி அவை “கடலூர் மணற்பாறைகள்” என்றே அழைக்கப் படுகின்றன.).

இந்த “கோண்ட்வானா பாறைகள்’ உருவான காலம் “கோண்ட்வானா காலம்” என்று அறியப்படுகிறது (இன்றைக்கு முன் சுமார் முப்பது கோடி ஆண்டுகளுக்கும் பதினான்கு கோடி ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலம்).


Gondwana
Africa
India
Mada
South America
Australia
Antartica


PANGAEA
Equator
PERMIAN
250 million years ago
LAURASIA
TETHYS SEA
GONDWANALAND
Equator
TRIASSIC
200 million years ago
Equator
JURASSIC
145 million years ago
Equator
CRETACEOUS
65 million years ago
NORTH AMERICA
ASIA
INDIA
AFRICA
Equator
SOUTH AMERICA
AUSTRALIA
ANTARCTICA
PRESENT DAY

இந்த கோண்ட்வானா பாறைகள் தென் அமெரிக்கா, ஆப்ரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய கண்டங்களிலும் பெருமளவில் காணப் படுகின்றன. இதன் காரணமாகவே முதலில் “லெமூரியா” , பின் “கண்டப் பெயர்ச்சி”. தொடர்ந்து “கடல் தரை பரவுதல்” போன்ற கருத்துகள் தோன்றின. பின் கூறிய இரண்டு கருத்துகளும், எல்லாக் கண்டங்களும் சேர்ந்து ஒரே அகண்டமாக இருந்திருக்க வேண்டும் எனும் புவியியல் உண்மையை வலியுறுத்தின.

புவிக்கோளின் தென்பகுதியில் உள்ள கண்டங்கள் சேர்ந்திருந்த அகண்டம் .“கோண்ட்வானா லேண்ட் “ என்று பெயரிடப்பட்டது. இந்தியாவில் அறியப்பட்ட .“கோண்ட்வானா பாறைகள்” எல்லா தென்கண்டங்களிலும் காணப் படுவதால் , ஆஸ்திரியாவை சேர்ந்த அறிவியலாளர் எட்வர்ட் சூயெஸ் என்பவர், இந்தத் தென் அகண்டத்திற்கு இந்தப் பெயரை சூட்டினார்.

இந்த “கோண்ட்வானா லேண்ட், வட கண்டங்களை உள்ளடக்கிய “லவ்ரேஷியா” அகண்டத்துடன் சுமார் முப்பது கோடி ஆண்டுகளுக்கு முன் இணைந்து “பேன்ஜியா” (PANGEA) என்றழைக்கப்படும் பேரகண்டம் உருவானது. பின்னர் சுமார் இருபது கோடி ஆண்டுகளுக்கு முன் .“கோண்ட்வானா லேண்ட் அகண்டம்” பிரிந்து, தென் அமெரிக்கா, ஆப்ரிக்கா, இந்தியா, ஆஸ்திரேலியா, அண்டார்ட்டிகா ஆகிய கண்டங்கள் வெவ்வேறு திசைகளில் நகர்ந்து இன்றைய நிலையில் உள்ளன. “புவிதட்டுகளின் கட்டமைப்பு” கோட்பாடு கண்டப் பெயர்ச்சி மட்டுமல்லாமல் புவியியலின் தீர்க்க முடியாத புதிர்கள் பலவற்றிற்கும் விடை காண்கிறது.

Singanenjam
singanenjam@gmail.com

***

10. விளக்குத் தூண் மதுரை பழம் புகைப் படம் ஓர் ஆய்வு

– நூ.த.லோக சுந்தரம்

மதுரையில் இன்றும் "விளக்குத்தூண்" எனும் பெயரில் ஓர் பேருந்து நிறுத்தம் உண்டு என நான் என் மதுரை மீனாட்சிக்கோயில் வழிபாட்டில் பேருந்தில் செல்லும் பொது கேட்ட நினைவு.   ஆனால், அதற்கு அப்பெயர் எப்படி வந்தது என சிலரை கேட்டபோது அவர்கள் விளக்கம் தர அறியாமலிருந்தனர்.

மதுரையின் மிகப்பழமையான புகைப்படம் ஒன்றில் **"விளக்குத்தூண்"** எனும் தலைப்புடனேயே ஒன்று காணப்பட்டது இங்கு காண்க:

(1)
மேற்கு கிழக்காக தொடரும் தெற்கு மாசி தெருவும்,
வடக்குத்தெற்காகச் சென்று முடியும் கிழக்கு மாசித் தெருவும்,
சந்திக்கும் இடம் ஆகின்றது.

(2)
இந்தத் தூண் சந்திப்பின் தெற்கில் வடம்போக்கித்தெரு என உள்ளதால் கிழக்கு மாசி தெருவில் வந்த தேரோட்டம் தெற்கு மாசி தெருவிற்கு திரும்பும் இடம் எனல் வேண்டும்.
அதாவது தேரோடும் தெருவினுக்குத் தென் கிழக்கு மூலை வலப்பக்கத் திருப்பமாகும்.

(3)
தூணின் சதுரவடிவ பீடத்தில் படும் ஞாயிற்று ஒளியின் வழி அதன் முகம் மேற்கல்லாது
கிழக்கு நோக்கியதே ஆகும். ஏனெனில் வரைபடம் வழி தூணின் பின்புலம் உள்ள 10 பில்லர் தெரு தூணிற்கு வலப்புறம் உள்ளது.

(4)
பின்புல கட்டிடத்தை சுவர் மீது காணாத ஞாயிறு ஒளி தூணின் அடிப்பகுதியில் காணும் பிதுங்கிய வட்ட வடிவம் மேல் படும் ஞாயிற்றின் ஒளி தூணின் அரைப் பகுதி வரை விழாததால் ஞாயிறு தனது தெற்கோட்டத்தின் கடைக்காலம் ஆகும் (தட்சிணாயனம்)

(5)
அதாவது புகைப்படம் எடுத்த திங்கள் டிசம்பருக்கு ஏறக்குறைய இருக்க வேண்டும்

(6)
புகைப்படம் எடுத்தவரின் நிலை கிழக்குமாசித்தெருவின் சந்திப்பிலிருந்து சற்றே வடக்கின் கண் நின்று படம் எடுத்திருக்க வேண்டும்

(7)
படத்தின் பின்புலத்தில் காணும் திருமலை நாயக்கர் மகாலின் மிகுத்த உயர்நிலை மாடங்கள் புகைப்படம் எடுத்தகாலத்து அழிந்து படவில்லை

விளக்குத்தூணிண் வரலாற்றுக் குறிப்பு:
மதுரை நகரின் பத்துத் தூண் தெரு அருகே, கீழமாசி வீதியும் தெற்கு மாசி வீதியும் இணையும் இடத்தில், வீதியின் நடுவே அமைந்துள்ள அழகிய வேலைப்பாடுகள் மிக்க இரும்பு விளக்குத்தூண் ஓர் நினைவுச்சின்னம். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், மதுரையின் ஆட்சித் தலைவராக (Collector of Madurai) 1835 ஆண்டு முதல் 1848 ஆண்டு

வரைப் பணியாற்றியவர் "ஜான் பிளாக்பர்ன்" (John Blackburne) என்ற ஆங்கிலேயர். இவர் அன்றைய மதுரை மாநகரின் குறுகிய சாலைகளை, பல எதிர்ப்புகளுக்கிடையே விரிவாக்கம் செய்து நகரப் போக்குவரத்தையும், நகரின் தோற்றத்தையும் செம்மைப்படுத்தப் பல நடவடிக்கைகள் எடுத்து மதுரை நகரை மேம்படுத்தினார்.

அவர் செய்த பணிகளைப் போற்றும் விதமாக, அவருக்காக இந்த வேலைப்பாடமைந்த அழகிய இரும்பு விளக்குத்தூண் ஓர் நினைவுச் சின்னமாக எழுப்பப்பட்டது. இக்காலத்தில் இச்சாலையின் வழியே பேருந்துகள் செல்ல அனுமதியில்லை.

இந்தப் படத்தை "லின்னேயஸ் ட்ரிப்பி" (Linnaeus Tripe) என்ற புகைப்படக் கலைஞர் 1858 ஆம் ஆண்டு ஜனவரி முதல் மார்ச் வரை உள்ள இடைப்பட்ட காலகட்டத்தில் எடுத்தார் எனவும், 1860 ஆம் ஆண்டு இப்படம் வெளியிடப்பட்டது எனவும் தெரிகிறது. இந்த நிழற்படம் 'பிரிட்டிஷ் நூலகத்துத் தொகுப்பில் ''பிளாக்பர்ன் டெஸ்ட்டிமோனியல்' (The British Library Collection - The Blackburne Testimonial [Madurai]) என்ற குறிப்புடன் இடம்பெற்றுள்ளது.
(தொகுப்பு: தேமொழி)

தகவல் பெற்ற இடங்கள்:
The British Library Collection
http://www.bl.uk/onlinegallery/onlineex/apac/photocoll/t/019pho0000953s2u00009000.html

http://collections.vam.ac.uk/item/O130643/the-blackburne-testimonial-photograph-tripe-linnaeus/

Wikipedia:
https://ta.wikipedia.org/s/4bhi

நூ த லோ சு
(நூ.த.லோக சுந்தரம்)
மயிலை
selvindls61@gmail.com

***

11. உதகை வாழ் தோடர் இன மக்கள் - பிரிட்டிஷ் லைப்ரரி படங்கள்

– தேமொழி

உதகை வாழ் தோடர் இன மக்கள் - பிரிட்டிஷ் லைப்ரரி படங்கள்
நீலகிரி மலைப்பகுதியின், தோடர் இன மலைவாழ் பழங்குடியினரின் படங்கள் சில பிரிட்டிஷ் லைப்ரரி சேகரிப்பில் உள்ளன.

இப்படங்கள் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் 19 ஆம் நூற்றாண்டிலும் (1870 களிலும்), சில 20 ஆம் நூற்றாண்டின் துவக்கத்திலும் எடுக்கப்பட்டுள்ளன. 1820 களில் உதகை பகுதி ஆங்கிலேயர்களின் கோடைக்காலக் குடியிருப்புப் பகுதியாக மாற்றம் பெறத் துவங்கியது. மேலை நாட்டு மக்களின் வரவின் தாக்கத்தால் விரைவில் மாறிவரும் பழங்குடியினரின் பண்பாட்டு நிலையை உணர்ந்து இப்படங்களை எடுத்து அவர்கள் வாழ்வுமுறையை ஆவணப்படுத்த முடிவு செய்து அதற்கான ஏற்பாடும் செய்திருக்கிறார் ஆங்கிலேய அதிகாரியான 'ஜேம்ஸ் வில்கின்சன் பிரீக்ஸ்' (James Wilkinson Breeks, the Commissioner of the Nilgiris). மெட்ராஸ் ஸ்கூல் ஆஃப் ஆர்ட்ஸின் பெயர் குறிப்பிடப்படாத புகைப்படக் கலைஞர் ஒருவர் 1871-72 காலத்தில் சில படங்களை எடுத்துள்ளார். மேலும் சிலரும் படங்களை எடுத்துள்ளனர்.

குழுக்களாக இடையர்கள் வாழ்வு முறையைக் கடைப்பிடித்து, புல்வெளியில் (sholas) எருமை மாடுகளை மேய்த்து வாழ்க்கை நடத்துவது தோடர் இன மக்களின் வாழ்வு முறை. இவர்கள் தாவர உணவை உண்பதை (vegetarian) வழக்கமாகக் கொண்டவர்கள். எருமைகளைப் புனிதத்தன்மையைக் கொண்டதாகக் கருதும் தோடர்களுக்கென தனிப்பட்ட மொழியும் பண்பாடும் உள்ளது. தோடர்களுக்கு அவர்களது வழிபாட்டிற்கான கோவில்களும் (Boas and Palthchis) உண்டு. தோடர்களில் ஒருசிலர் அதிகாரமிக்க சமயத்தலைவர் (Palals) பதவியில் இருந்து அவர்கள் இன மக்களுக்கு அறிவுரை கூறும் பொறுப்பில் இருப்பார்கள்.

தோடர்கள் சிவப்பு, நீலம், கருப்பு வண்ண வேலைப்பாடமைந்த கரைகளுடைய நீண்ட பருத்தி ஆடைகளையும் (Puthukuli), வேலைப்பாடமைந்த அணிகலன்களையும் அணியும் வழக்கம் கொண்டவர்கள். சிறந்த கைவினைக் கலைஞர்களாகவும் திகழ்பவர்கள். ஆண்கள் புருவம் வரை கொண்ட முடியைப் படிய வாரிவிட்டுக் கொள்பவர்கள். பெண்கள் நடுவகிடு எடுத்து, நீண்டு சுருண்ட குழல் கற்றைகள் முதுகில் தொங்குவது போன்ற தலையலங்காரம் செய்திருப்பார்கள். ஆண்களைப் போன்றே நீண்ட ஆடை அணிந்து அதனைத் தோளின் இருபுறத்திலும் சுற்றி முன்புறம் கொண்டுவந்து கைகளில் பிடித்துக் கொண்டு காட்சியளிப்பார்கள். பெண்களில் சிலர் பச்சைகுத்திக் கொள்ளும் வழக்கமும் உண்டு.

(1)


(2)

(3)

(4)

படங்கள் கிடைக்கும் சுட்டிகள்:

1.
http://www.bl.uk/onlinegallery/onlineex/apac/photocoll/t/019pho0000974s1u00005000.html
http://www.bl.uk/onlinegallery/onlineex/apac/photocoll/t/largeimage62765.html
http://ogimages.bl.uk/images/019/019PHO0000974S1U00005000[SVC2].jpg
1871 ஆம் ஆண்டு

*****

2.
http://www.bl.uk/onlinegallery/onlineex/apac/photocoll/t/019pho0000974s1u00004000.html
http://www.bl.uk/onlinegallery/onlineex/apac/photocoll/t/largeimage62764.html
http://ogimages.bl.uk/images/019/019PHO0000974S1U00004000[SVC2].jpg
1871 ஆம் ஆண்டு

*****

3.
http://www.bl.uk/onlinegallery/onlineex/apac/photocoll/t/019pho0000974s1u00003000.html
http://www.bl.uk/onlinegallery/onlineex/apac/photocoll/t/largeimage62763.html
http://ogimages.bl.uk/images/019/019PHO0000974S1U00003000[SVC2].jpg
1871 ஆம் ஆண்டு

*****

தோடர்கள் இருவர் தங்கள் இசைக்கருவிகளுடன் (Buguri). புல்லாங்குழலும் கொம்பும் கொண்ட கலவையான இசைக்கருவி ஒன்றை இசைப்பது தோடர்கள் வழக்கம்.

4.
http://www.bl.uk/onlinegallery/onlineex/apac/photocoll/t/019pho0000974s1u00011000.html
http://www.bl.uk/onlinegallery/onlineex/apac/photocoll/t/largeimage62769.html
http://ogimages.bl.uk/images/019/019PHO0000974S1U00011000[SVC2].jpg
1871 ஆம் ஆண்டு

*****

(5)

இருளர், குரும்பர், கோட்டா, பகடா போன்ற பிற பழங்குடி மக்களுடன் இரு தோடர்கள்
5.
The Five hill Tribes [of the Nilgiris]. 2 Irulas. 2 Badagas. 2 Todas. 2 Kotas. 2 Kurumbas
http://www.bl.uk/onlinegallery/onlineex/apac/photocoll/t/019pho0000974s1u00001000.html
http://www.bl.uk/onlinegallery/onlineex/apac/photocoll/t/largeimage62762.html
http://ogimages.bl.uk/images/019/019PHO0000974S1U00001000[SVC2].jpg
1871 ஆம் ஆண்டு

(6)

படத்தில் காணப்படுபவர்கள் தோடர்களின் சமயத்தலைவர்கள் (Palals)
6.
http://www.bl.uk/onlinegallery/onlineex/apac/photocoll/m/019pho0000974s1u00012000.html
http://www.bl.uk/onlinegallery/onlineex/apac/photocoll/m/largeimage62770.html
http://ogimages.bl.uk/images/019/019PHO0000974S1U00012000[SVC2].jpg
1871 ஆம் ஆண்டு

நீலகிரியின் உதகை பகுதியில் தோடர்இன மக்களின் குடியிருப்புகள் (Toda mund) அமைந்துள்ளன. வீடுகள் மலைச்சரிவுகளில் காடுகள் துவங்கும் இடத்தில் கட்டப்பட்டிருக்கும். கூண்டுவண்டியின் கூண்டு அமைப்பில் அவர்கள் வீடுகள் தோற்றமளிக்கும். நெருக்கமாகப் பரப்பப்பட்ட மூங்கில்களாலும், புற்களாலும், காற்று மழைநீர் புகாத வகையில் கூரை வேயப்பட்டிருக்கும். சுவர்கள் கற்களை அடுக்கி எழுப்பப்பட்டிருக்கும். சுவர்களில் சாளரங்கள் அமைக்கப்படுவதில்லை. நுழைவாயில் தவழ்ந்து உள்நுழையும் வண்ணம் குறுகியதாக இருக்கும். உள்ளே பெரிய அறையாக, ஒருபுறம் படுக்க அமைக்கப்பட்ட மேடைககள் கொண்ட பகுதியாகவும், மறுபுறம் சமைக்கும் பகுதியாகவும் பிரிக்கப்பட்டிருக்கும். சுவர்கள் சாணம் கொண்டு மெழுகப்பட்டிருக்கும். பொதுவாக தோடர்களின் வீடுகள் ஐந்து குடில்கள் இணைந்த அமைப்பாக இருக்கும், அவற்றில் மூன்று குடில்கள் வசிப்பதற்காகவும், ஒன்று பால் தொடர்பான பணிகளுக்காகவும், மற்றொன்று கால்நடைகளின் தொழுவமாகவும் பயன்படுத்தப்படும்.

தோடர்களின் குடியிருப்புப் பகுதி

(7)

7.
http://www.bl.uk/onlinegallery/onlineex/apac/photocoll/a/019pho0000472s1u00020000.html
http://www.bl.uk/onlinegallery/onlineex/apac/photocoll/a/largeimage62314.html
http://ogimages.bl.uk/images/019/019PHO0000472S1U00020000[SVC2].jpg
1880 ஆம் ஆண்டு (Nicholas and Company)

தோடர்களின் குடில்

8.
http://www.bl.uk/onlinegallery/onlineex/apac/photocoll/t/019pho0000974s1u00009000.html
http://www.bl.uk/onlinegallery/onlineex/apac/photocoll/t/largeimage62767.html
http://ogimages.bl.uk/images/019/019PHO0000974S1U00009000[SVC2].jpg
1871 ஆம் ஆண்டு

*****

தோடர்களின் கோவில் (Boa)

9.
http://www.bl.uk/onlinegallery/onlineex/apac/photocoll/b/019pho0000974s1u00013000.html
http://www.bl.uk/onlinegallery/onlineex/apac/photocoll/b/largeimage62771.html
http://ogimages.bl.uk/images/019/019PHO0000974S1U00013000[SVC2].jpg
1871 ஆம் ஆண்டு

*****

(8)

(9)



(10)

10.
http://www.bl.uk/onlinegallery/onlineex/apac/photocoll/t/019pho0000974s1u00008000.html
http://www.bl.uk/onlinegallery/onlineex/apac/photocoll/t/largeimage62766.html
http://ogimages.bl.uk/images/019/019PHO0000974S1U00008000[SVC2].jpg
1871 ஆம் ஆண்டு

(11)

11.
http://www.bl.uk/onlinegallery/onlineex/apac/photocoll/t/019pho0000752s4u00041000.html
http://www.bl.uk/onlinegallery/onlineex/apac/photocoll/t/largeimage62364.html
http://ogimages.bl.uk/images/019/019PHO0000752S4U00041000[SVC2].jpg
1900 ஆம் ஆண்டு (Penn, Albert Thomas Watson)

(12)

12.
http://www.bl.uk/onlinegallery/onlineex/apac/photocoll/t/019pho001000s42u04385000.html
http://www.bl.uk/onlinegallery/onlineex/apac/photocoll/t/largeimage65311.html
http://ogimages.bl.uk/images/019/019PHO001000S42U04385000[SVC2].jpg
1870 ஆம் ஆண்டு (Archaeological Survey of India Collections)

(13)

13.
http://www.bl.uk/onlinegallery/onlineex/apac/photocoll/t/019pho000015s10u00060000.html
http://www.bl.uk/onlinegallery/onlineex/apac/photocoll/t/largeimage61431.html
http://ogimages.bl.uk/images/019/019PHO000015S10U00060000[SVC2].jpg
1896 (அல்லது 1869) ஆம் ஆண்டு (Bourne, Samuel)

தோடர் குடும்பத் தலைவர் இறந்த பிறகு நடத்தப்படும் சடங்கில் (Kordzai Kedu), அவரது மந்தையிலிருந்து இரண்டு எருமைகள் பிரிக்கப்பட்டு கொல்லப்பட்டு அவருடன் இறுதிப்பயணம் மேற்கொள்ளும். இறந்த எருமைகளின் கொம்புகளை இறந்த குடும்பத்தலைவரின் கைகள் பற்றியிருப்பது போல இணைக்கப்படும். இச்சடங்கு மரணம் நிகழ்ந்த உடனேயே செய்யப்படும். பிறகு மற்ற சடங்குகள் தொடரும்.

(14)



14.
http://www.bl.uk/onlinegallery/onlineex/apac/photocoll/t/019pho0000974s1u00014000.html
http://www.bl.uk/onlinegallery/onlineex/apac/photocoll/t/largeimage62772.html
http://ogimages.bl.uk/images/019/019PHO0000974S1U00014000[SVC2].jpg
1871 ஆம் ஆண்டு

****

தேமொழி
themozhi@yahoo.com

***

12. சாத்தனூர் கல்மரம்

– சிங்கநெஞ்சம் சம்பந்தம்

"நீ கல்லாகப் போகக் கடவாய்", தவறு செய்த (?) மனைவியைச் சபித்தார் முனிவர்.உடனே முனிவரின் மனைவி கல்லாக மாறிவிட்டார். பின்னர் இராமர் காலடி பட்டு கல்லாக இருந்த அகலிகை மீண்டும் பெண்ணாக மாறினாள். இது இதிகாசக் கதை. கற்பனைக் கதைதான். உண்மையாக இருக்க வாய்ப்பு இல்லை. ஆனால் காலத்தின் கோலத்தால் மரங்கள் கல்லான நிகழ்வுகள் புவியியல் வரலாற்றில் பூமியின் பல பகுதிகளில் பல்வேறு காலங்களில் நிகழ்ந்திருக்கின்றன. அப்படிக் கல்லாக மாறிய மரங்கள் தமிழ் நாட்டில் “கல்மரங்கள்” என்றே அழைக்கப்படுகின்றன. நம் நாட்டில் கல் மரங்கள் அதிகமாக உள்ள மாநிலம் நம் தமிழ்நாடுதான்.

தமிழக நில அமைப்பில் சுமார் 80% வன்பாறைகளால் ஆனது. தீப் பாறைகளும், உருமாற்றுப் பாறைகளும் இவ் வன்பாறைகளில் அடங்கும். தமிழகத்தின் கிழக்குப் பகுதியில் மென்பாறைகள் காணப் படுகின்றன. படிவப் பாறைகள் இத் தொகுப்பில் அடங்கும். அரியலூர் பகுதியில் இத்தகைய படிவப் பாறைகளே உள்ளன. பெரும் நீர்நிலைகளில் ஆறுகளால் கொண்டுவரப்படும் படிவங்கள் மற்றும் வண்டல்கள் படிகின்றன. பல இலட்சக் கணக்கான ஆண்டுகள் இந்நிகழ்வு தொடர்ந்து நடைபெறும்போது, நீர்நிலைகளின் அடியில் படியும் படிமங்களின் அளவு, பலநூறு மீ. அளவிற்கு உயர்ந்து விடுகிறது. இப்படிவங்கள் அழுத்தம் மற்றும் வெப்பம் காரணமாக கெட்டிபட்டுப் பாறைகளாக மாறுகின்றன, இவையே படிவப்பாறைகள் (SEDIMENTARY ROCKS) எனப்படுகின்றன. மணல் பாறைகள், களிப் பாறைகள், சுண்ணாம்புப் பாறைகள் ஆகியவை இப்பகுதியில் கிடைக்கும் படிவப் பாறைகள் ஆகும்.

நீர்நிலைகளின் அடியில் படிவங்கள் படியும்போது, அந்த நீரில் வாழும் உயிரினங்களும், (சிப்பி, நண்டு, நத்தை, மீன் போன்றவையும் , நீர் வாழ் தாவர வகைகளும்), ஆற்றிலடித்து வரப்படும் மரங்கள், கிளைகள் மகரந்தங்கள், ஆற்றில் வாழும் உயிரினங்கள், ஆற்றோரம் உள்ள நிலப் பகுதியில் வாழும் உயிரினங்கள் ஆகியவையும் சேர்ந்து புதையுண்டு போகின்றன. மேலும் மேலும் படிவங்கள் மேலே படியும் பொது அடியில் உள்ள படிவங்கள் அழுத்தத்திற்கும் வெப்பத்திற்கும் உட்பட்டு கெட்டிப் படுகின்றன. பாறைகளாக உருவெடுக்கின்றன. அதில் படிந்துள்ள உயிரினங்களில் உள்ள செல்லுலோஸ் போன்ற மென்பொருட்கள் , குவார்ட்ஸ் போன்ற கனிமங்களால் இட மாற்றம் செய்யப் பட்டு, அந்த உயிரினங்கள் உருக் குலையாமல் அப்படியே தொல்லுயிர் படிவங்களாக (FOSSILS) மாறுகின்றன. பொதுவாக , தொல்லுயிர் எச்சங்கள் படிவப் பாறை களிலேயே காணப்படுகின்றன. தாம் அடங்கியுள்ள படிமப் பாறைகள் தோன்றிய காலம், சூழ்நிலை போன்றவற்றை

அறியவும், பரிணாம வளர்ச்சி பற்றி அறியவும் தொல்லுயிர் எச்சங்கள் மிகவும் பயன் படுகின்றன. தொல்லுயிர் எச்சங்களை ஆய்வு செய்யும் கல்வி தொல்லுயிரியல் (PALAEONTOLOGY) என்று வழங்கப் படுகிறது. புதைபடிவ எரிபொருட்களாகிய நிலக்கரி, பழுப்பு நிலக்கரி, பெட்ரோலியம், எரிவாயு ஆகியவற்றைக் கண்டுபிடிக்கும் பணியில் தொல்லுயிரியல் பெரும்பங்கு வகிக்கிறது.

அரியலூர் பகுதியிலுள்ள படிவப்பாறைகளில் பல்வேறு வகைப்பட்ட தொல்லுயிர் எச்சங்கள் ஏராளமான அளவில் கிடைக்கின்றன. இவற்றில் மிகப் பெரும்பாலானவை கடல்வாழ் உயிரினங்களின் எச்சங்களே ஆகும். இதன் வாயிலாக, தற்போது இப்பகுதிக்கு நூறு கி.மீ. கிழக்கில் உள்ள கடல், சுமார் 12 கோடி ஆண்டுகளுக்கு முன் இப்பகுதியில் இருந்திருக்கிறது என அறிய முடிகிறது.

இந்திய புவியியல் ஆய்வுத்துறையைச் சேர்ந்த ப்ளான்ஃ போர்ட் (BLANFORD-1862) மற்றும் இராபர்ட் ப்ரூஸ் ஃபுட் (ROBERT BRUCE FOOTE-1873) ஆகியோர் இங்கே ஆய்வுகள் நடத்தி , இங்குள்ளப் படிவப் பாறைகள் பற்றியும் அவற்றில் பொதிந்துள்ள 12 கோடி ஆண்டுகள் பழமையான தொல்லுயிர் எச்சங்கள் பற்றியும் உலகிற்கு எடுத்துரைத்தனர். அன்று முதல் அரியலூர் பகுதி "PARADISE OF PALAEONTOLOGISTS" என்றே அழைக்கப்படுகிறது. உலகின் பல பகுதிகளிலும் உள்ள புவிஅறிவியல் அருங்காட்சியகங்களை, அரியலூர் பகுதி தொல்லுயிர் எச்சங்கள் அலங்கரிக்கின்றன.

இவ்வளவு பெருமை வாய்ந்த அரியலூர் பகுதியில் இந்திய புவியியல் ஆய்வுத்துறைக்குத் தலைமை ஏற்ற முதல் இந்தியர் எனும் பெருமை பெற்ற எம்.எஸ். கிருஷ்ணன் அவர்கள் 1940 ஆம் ஆண்டில், ஆய்வுகள் மேற்கொண்டார். அப்போது அவர் அரியலூருக்கு பத்து கி.மீ. மேற்கேயுள்ள சாத்தனூர் எனும் கிராமத்திற்கு 700 மீ. வடக்கே ஓடைப் படுகை ஒன்றில் 18மீ. நீளமுள்ள தொல்மர எச்சம்/ கல் மரம். (FOSSIL TREE / WOOD FOSSIL) ஒன்றைக் கண்டு பிடித்தார். இந்த சாத்தனூர் கிராமத்தின் அருகே உள்ள வரகூர், ஆனைப்பாடி, அழுந்தளையூர், சாரதாமங்கலம் போன்ற கிராமங்களின் அருகே உள்ள ஓடைப் படுகைகளிலும் சில மீ. நீளமுள்ள கல் மரங்கள் கண்டுபிடிக்கப் பட்டன. ஆயினும் சாத்தனூர் அருகே உள்ள 18 மீ. நீளமுள்ள கல்மரம்தான் இந்தப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மிக நீளமான, மிகப் பெரிய கல்மரம் ஆகும். அருகே உள்ள ஆனைப்பாடி ஓடைப் படுகைகளில் காணப் படும் "அம்மோனைட்" எனப்படும் கடல் வாழ் உயிரினத்தின் தொல்லுயிர் எச்சங்கள் , சுமார் 12 கோடி ஆண்டுகளுக்கு முற்பட்ட கிரிடேஷியஸ் காலத்தைச் சேர்ந்தவை. (இவற்றில் சில கார் சக்கரம் அளவிற்குப் பெரிதானவை) எனவே இந்தப் பகுதி சுமார் 12 கோடி ஆண்டுகளுக்கு முன் கடலின் கீழ் இருந்தது- ஆற்றில் அடித்து வரப்பட்ட பெரிய அடிமரம் கடலில் சேர்ந்து , மேலே மேலே படிந்த படிவங்களின் அடியில் சிக்கி கல்லாகச் சமைந்தது (PETRIFICATION) என்பது தெளிவு. மணல் பாறைகளில் பதிந்து பூமிக்கு அடியில் இருந்த சாத்தனூர் கல்மரம் , ஓடைகளில் ஓடிவரும் தண்ணீரால் மேலேயுள்ள மண் அரிக்கப்பட்டு , அதனால்

வெளிப் பட்டிருக்கிறது. ஆய்வின் போது கிடைத்த தடையங்களின் அடிப்படையில் , இந்த அடிமரம் சுமார் 26 மீ. இருந்திருக்க வேண்டும் என்றும், ஓடை நீரால் அடித்துச் செல்லப் பட்டது போக எஞ்சியுள்ள 18மீ. பகுதியே தற்போது நாம் பார்ப்பது. என்றும் தெரிய வருகிறது.

இந்தக் கல்மரம் ஜிம்னோஸ்பேர்ம் (GYMNOSPERM) எனப்படும் "பூக்காத"/"கனிதரா' தாவரங்கள் பிரிவில் "கோனிஃபர்" (CONIFER) எனப்படும் கூம்புடை பிரிவைச் சார்ந்தது. 12 கோடி ஆண்டுகளுக்கு முன் "க்ரீடேஷியஸ்" காலகட்டத்தில் இவ்வகைத் தாவரங்களே பூமியில் பெருகி இருந்தன. பின்னர் "ஆஞ்சியோஸ்பேர்ம்" எனப்படும் பூக்கும் / கனிதரும் மரங்கள் தோன்றின.

தற்போது சாத்தனூர் –அரியலூர் பகுதிகளில் கடலும் இல்லை , பெருங்காடுகளும் இல்லை. இப்பகுதி இன்றைக்குக் கடலிலிருந்து 100 கி.மீ. மேற்கே தள்ளியுள்ளது. ஆனால் 12 கோடி ஆண்டுகளுக்கு முற்பட்ட "க்ரீடேஷியஸ்" காலகட்டத்தில் இப்பகுதி கடலின் கீழ் இருந்தது என்பதை இங்கே கிடைக்கும் கடல்வாழ் உயிரினங்களின் தொல்லுயிர் எச்சங்கள் (MARINE FOSSILS) உறுதி செய்கின்றன. அன்றைய கடற்கரையை ஒட்டியோ அல்லது சற்று தள்ளியோ இருந்த நிலப்பகுதியில் 60-70 அடி உயரமுள்ள மரங்கள் இருதிருக்க வேண்டும். அந்த மரங்கள் ஆறுகளால் அடித்து வரப் பட்டு, கடலை அடைந்து, கடலுக்கு அடியில் படிந்த படிவங்களோடு சேர்ந்து படிந்து , கல்லாகச் சமைந்திருக்க வேண்டும். பிற்காலத்தில் புவியியல் மாற்றங்களால் கடல் பின்னே செல்ல தற்போது இந்தக் கல் மரங்களும் ஏனைய தொல்லுயிர் எச்சங்களும், நிலப் பகுதியில் புதைந்து கிடக்கின்றன. ஆறுகளிலும் ஓடைகளிலும் மண் அரித்து அடித்து செல்லப் படும்போது, இவை வெளிப் படுகின்றன.

சரி, மரம் எப்படிக் கல்லாக மாறுகிறது.? சாதாரணமாக மரம் மண்ணில் புதையுண்டு போகும் பொது, மண்ணில் உள்ள நுண்ணுயிரிகளால் அவை மட்கிப் போகும் வாய்ப்புகளே அதிகம். மாறாக , அந்த மரம் புதையுண்ட இடத்தில் மேலும் மேலும் படிவங்கள் படியும் போது அதனால் ஏற்படும் அழுத்தம் மற்றும் வெப்பம் காரணமாக மரம் தகன நிலைக்கு உட்பட்டுக் குமைந்துபோய் கரியாக மாறக் கூடும். நிலக்கரி, பழுப்பு நிலக்கரிப் படிவங்கள் இப்படித்தான் உருவாகியுள்ளன. இதனை CARBONAISATION அல்லது கரியாக மாறுதல் எனக் குறிப்பிடலாம். மூன்றாவதாக மண்ணில் புதைந்த

மரம் மட்கிப் போகும் முன்னால் அந்த மரத்திலுள்ள செல்களின் இடை வெளிகளிலும், செல் அடுக்குகளின் இடை வெளிகளிலும் , நிலநீர் புகுந்து விடுகிறது. அந்த நீரில் கரைந்துள்ள சிலிகா அந்த இடைவெளிகளை ஆக்கிரமித்து தாவரப் பொருளான செல்லுலோசை இடமாற்றம் செய்து விடுகிறது. இந்த நிகழ்வின் போது மரத்தின் அமைப்பு உருக்குலையாமல் அப்படியே காப்பாற்றப் படுகிறது. மரம் கல்லாக சமையும் இந்நிகழ்வு "PETRIFICATION" (PETRA MEANS ROCK) என்று அழைக்கப்படுகிறது.நிலநீரில் கரைந்துள்ள கனிமங்களின் தன்மைக்கேற்ப கல் மரத்தின் நிறம் மாறுபடுகிறது. சாத்தனூர் கல் மரம் சிலிகாவால் ஆனதால் இது பழுப்பு நிறத்தில் உள்ளது.

அரியலூரைச் சுற்றியுள்ள சாத்தனூர், ஆனைப்பாடி வரகூர் ஆகிய இடங்களில் மட்டுமின்றி , விழுப்புரம் மாவட்டம் திருவக்கரை, கடலூர் மாவட்டம் நெய்வேலி, புதுவை காலாப்பட்டு மற்றும் விருத்தாசலம் பாரூர் ஆகிய இடங்களிலும் கல் மரங்கள் கிடைக்கின்றன. இராஜஸ்தான் மாநிலம் பொக்ரேன் பகுதியிலும் கல்மரங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. உலக அளவில் அரிசோனா கல்மரக் காடுகள் மிகவும் புகழ் பெற்றவை.

சாத்தூர் கல் மரத்தின் சிறப்பு மற்றும் முக்கியத்துவம் கருதி, இந்திய புவியியல் ஆய்வுத் துறை இதற்குக் கல்மரப் பூங்கா எனப் பெயரிட்டு , தேசிய நினைவுச் சின்னமாக அறிவித்துள்ளது..இந்த இடம் வேலியிட்டு பாதுகாக்கப் பட்டு வருகிறது. ஓடை அரிப்பால் வெளிப்பட்ட இந்தக் கல்மரம், எதிர் காலத்தில் ஓடை வெள்ளத்தினால் அகற்றுபட்டு விடக்கூடாது என்பதற்காக , செயற்கைக் கால்வாய் அமைத்து ஓடை திருப்பி விடப்பட்டுள்ளது. கல்மரம் பற்றிய புவியியல் குறிப்பு

ஒன்றும் இத்துறையினரின் அறிவிப்புப் பலகையில் காணப் படுகிறது. பாதுகாப்பிற்காக பணியாள் ஒருவரும் இருக்கிறார்.



சென்னை- திருச்சி நெடுஞ்சாலையில் (N.H. 45), பெரம்பலூரில் இருந்து, ஆறு கி.மீ. தெற்கே சிறுவாச்சூர் எனும் ஊர் உள்ளது. அங்கிருந்து கிழக்கே செல்லும் சாலையில் 14 கி.மீ. பயணித்தால் சாத்தனூரை அடையலாம்.அண்மைக்காலத்தில் சாத்தனூர் கல் மரத்தின் சிறப்பு பற்றி அறிந்த தமிழக அரசின் சுற்றுலா துறை , சிறுவாச்சூர்-சாத்தனூர் சாலையை செப்பனிடு பணியை மேற்கொண்டது. சாத்தனூரில் கல் மரத்திற்கு அருகே ஓய்வு விடுதி ஒன்றும் கட்டப் பட்டது. பத்து கோடி ஆண்டுகள் பழமையான கல்மரத்தைப் பாதுகாத்துவரும் இந்திய புவியியல் ஆய்வுத் துறையின் பணி பாராட்டிற்குரியது.

Singanenjam
singanenjam@gmail.com

***

13. சேரி… சாதி… தீண்டாமை…

சேரிகளின் தோற்றம் - அம்பேத்கரின் கருத்துக்கள் விரிவான தளத்தில்…

– கௌதம சன்னா

1

சேரிகள் உருவானதற்கு இன பாகுபாடுகள் காரணமாகவில்லை என்ற முடிவை எட்டியபின் நமக்கு இருக்கக்கூடிய ஒரே அடிப்படையான அம்பேத்கரின் அவதானிப்புகளை விரிவாகப் பார்க்க வேண்டும். அப்போதுதான் சேரிகள் உருவாக்கம் இயக்கம் மற்றும் பரவல் குறித்த தெளிவினைப் பெற முடியும். தீண்டத்தகாதவர்கள் யார் அவர்கள் எவ்வாறு தீண்டத்தகாதவர்களாக ஆயினர் (-) என்ற நூலை அம்பேத்கர் 1948 ஆம் ஆண்டு வெளியிட்டார். இந்திய வரலாற்று ஆய்வியல் வரலாற்றில் முதல்முறையாகக் கிராமத்திற்கு வெளியே தீண்டத்தகாதவர்களின் குடியிருப்பும், தீண்டாமையும் உருவானதைப் பற்றின ஆய்வை முன்னெடுத்த முதல் புத்தகம் அது. அதற்கு முன்பு இத்துறை பற்றி யாரும் பேசவேயில்லை என்பதால் மிக முன்னோடியான நூல் என்பதில் ஐயமில்லை. அதே நேரத்தில் அதற்குப் பிறகும் அத்துறை பெரிதாக வளரவில்லை என்பதும் அதிர்ச்சியளிக்கக்கூடியதாக உள்ளது. இதுவரை தீண்டாமையும் சேரியும் உருவான புதிரை விடுவிக்க யாரும் பெரிதாக அலட்டிக் கொண்டதாகவும் தெரியவில்லை. எனவேதான் மிக முக்கியத்துவம் வாய்ந்த அந்த நூலில் அம்பேத்கரின் கருத்துக்களை அவரின் எழுத்துகளிலேயே பார்த்தால் கூடுதல் தெளிவு பிறக்கும் என நம்புகிறேன்.

அம்பேத்கர் கூறுகிறார்…

வேறுநாடாக இருந்திருந்தால் இத்தகைய வகுப்பினர் இருந்து வருவது மனாசான்றைக் குத்திக் குடைந்திருக்கும்., அவர்களது மரபு மூலம் பற்றி ஆழமான ஆய்வு நடந்திருக்கும். ஆனால் ஓர் இந்துவின் மனத்தில் இவை இரண்டுமே நிகழவில்லை. இதற்கான காரணம் வெளிப்படையானது, சிக்கலற்றது. இந்த வகுப்பினர் இருந்து வருவதை இரங்கத்தக்கதாகவோ, அவமானகரமானதாகவோ இந்து கருதுவதில்லை. இந்தப் பழிபாவத்துக்குப் பிராயச்சித்தம் தேடவேண்டும் அல்லது இந்த இழிநிலை எப்படித் தோன்றியது, அது எவ்வாறு வளர்ந்து வலுப்பெற்றது என்பதை ஆராய வேண்டும் என்றும் அவன் உணர்வதில்லை. அதேசமயம் அவனது நாகரிகம் மிகத் தொன்மையானது மட்டுமல்ல, பல அம்சங்களில் ஈடுஇணையற்றது, தன்னிகரில்லாதது என்று ஒவ்வொரு இந்துவும் போதிக்கப்படுகிறான். தனது நாகரிகத்தைப் போற்றிப் புகழ்வதிலும், தலைமீது தூக்கி வைத்துக் கொண்டு கொண்டாடுவதிலும் எந்த இந்துவும் ஒருபோதும் சலிப்பதில்லை, சளைப்பதில்லை. இந்து நாகரிகம் மிகப் பழமையானது என்று கூறப்படுவதைப் புரிந்து கொள்ள முடியும். அதனை ஏற்கவும்கூட முடியும். ஆனால் இந்து நாகரிகம் தன்னிகரில்லாதது,

ஒப்பற்றது என்று எந்த அடிப்படையில் உரிமை கொண்டாடப்படுகிறது என்பதைப் புரிந்துகொள்வது அவ்வளவு எளிதல்ல. இந்துக்கள் விரும்பாவிட்டாலும், இந்துக்கள் அல்லாதவர்களைப் பொறுத்தவரையில் இத்தகைய உரிமையை இந்துக்கள் ஒரே ஓர் அடிப்படையில்தான் கொண்டாட முடியும். இந்து நாகரிகம் தோற்றுவித்துள்ள இந்த வகுப்பினர் (தீண்டத்தகாதவர்) இருந்து வருதே அந்த அடிப்படை. அத்தகைய வகுப்பினர் இருந்து வருவது ஒரு தனித்தன்மை வாய்ந்த நிகழ்வுப்போக்கு என்பதில் ஐயமில்லை. எனவே எந்த இந்துவிடம் இதனைக் கிளிப்பிள்ளைபோல திருப்பத் திருப்பிக்கூற வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் இதனை யாரும் மறுக்கமாட்டார்கள். இது பெருமிதம் கொள்வதற்குப் பதிலாக வெட்கித் தலைகுனிய வேண்டிய விசயம் என்பதை இந்துக்கள் உணர வேண்டும். (அம்பேத்கர் எழுத்தும் பேச்சும் தொகுதி 14 பக்கம் 2).

அம்பேத்கரின் ஆதங்கம் தெளிவானது என்பது மட்டுமல்ல, அது இன்னமும் கண்டுகொள்ளப்படாமலே இருக்கிறது என்பதுதான் மிக முக்கியமானது. சாதி இந்துவின் மனச்சான்று விழித்துக்கொள்வதற்குப் பதில் நாளும் நாளும் அது அதலபாதாள இருட் குகைகள் நீளப் போய்க்கொண்டே இருக்கிறது.

2

சரி இப்போது தொடங்கிய பிரச்சினைக்கு வருவோம். அம்பேத்கரின் கருத்துகளின் படி கிராமம் எப்படி இரண்டாகத் தோன்றியது அல்லது கிராமத்தில் சேரிகள் எப்படி உருவாயின அவை எவ்வாறு பல்கிப் பெருகின, எப்படிச் செயல்பட்டன, எவ்வாறு பரிமாணம் அடைந்தன என்பதைப் பார்க்க வேண்டும்.

அம்பேத்கரின் ஆய்வில்; தொடக்ககால மனிதக் கூட்டம் நாடோடியாகவே அலைந்து கொண்டிருந்தது என்பது முதல்படி. இரண்டாவது அலைந்து கொண்டிருந்த மக்களில் ஒரு குழு ஓரிடத்தில் நிலையாகத் தங்கி தமது வாழ்விடத்தை அமைத்துக் கொண்டது. அதன்படி ஆதிகால மனித சமூகம் இரண்டாகப் பிரிகின்றது. அதாவது அலையும் ஒரு மக்கள் கூட்டம். நிலைபெற்று வாழத் தொடங்கிய ஒரு மக்கள் குழு. இந்த இரண்டு குழுக்களையும் அம்பேத்கர் பின்வருமாறு அழைக்கிறார்.

1. பூர்வீக நாடோடி (Nomadic communities) அல்லது சிதறடிக்கப்பட்டக் குழு (Broken Men)
2. நிலையமர்ந்த குழு அல்லது நவீனகாலக் குழு (Modern Society)

மேற்கண்டக் குழுக்களின் இயல்புகளை அம்பேத்கர் பின்வருமாறு விளக்குகிறார். பூர்வீக சமுதாயம் (Primitive Society) நாடோடி (Nomadic communities) சமூகங்களைக் கொண்டிருந்தது. நவீனகால சமுதாயமோ (Ancient Modern Society) குடியமர்ந்த சமுகங்களைக் கொண்டிருக்கிறது. இரண்டாவதாகப் பூர்வீக சமுதாயம் குருதி உறவுகளைக் கொண்ட குலமரபு சமூகங்களைக் கொண்டிருந்தது. நவீனகால சமுதாயமோ பிரதேசப் பற்றுதல் கொண்ட ஸ்தல சமுகங்களைத் தன்னுள் கொண்டிருந்தது. வேறுவிதமாகக் கூறினால் பூர்வீக சமுதாயம் நவீன கால சமுதாயமாக மாறுவதற்கு முன்னர் இரு பரிணாம வளர்ச்சி மார்க்கங்களை

மேற்கொண்டது. ஒரு பரிணாம வளர்ச்சி மார்க்கம் பூர்வீக சமுதாயத்தை குலமரபு குழுவிலிருந்து பிரதேசக் குழுவாக மாற்றியிருக்கிறது. (அ எ பே .தொ 14.ப 52).

மேற்கண்ட இரண்டு பிரிவுகள் மனிதக் குல வரலாற்றின் இயக்கத்தையும், எதிர்காலத்தையும் நிர்ணயித்தன. அந்த இரண்டு குழு என்பது இரண்டு மட்டுமே அல்ல என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். உலகம் முழுதும் இப்படிப்பட்டக் குழுக்கள் கால தேச வர்த்தமானங்களுக்கு ஏற்ப முன்னம் பின்னுமாக உருவாகிக் கொண்டிருந்தன. மனிதக் குல வரலாற்றில் இந்தியத் துணைக் கண்டத்தில் இது சுமார் ஐம்பதாயிரம் ஆண்டுக் காலத்திற்கு முன் உருவாகியிருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். இப்படி உருவான இந்த இரண்டு குழுவின் முரண்பாடுகள் எவ்வாறு இயங்கின என்பதைப் பற்றி அம்பேத்கர் பின்வருமாறு விளக்குகிறார்.

பூர்வீக சமுதாயம் இவ்வாறு குலமரபு அமைப்பை (Totem) அடிப்படையாகக் கொண்டிருந்தது என்பது இரண்டு விஷயங்களைக் குறித்தது. முதலாவதாக, பூர்வீக சமுதாயத்தில் ஒவ்வொரு தனி நபரும் ஒரு குலமரபைச் சேர்ந்தவராக இருந்தான். இன்னும் சொல்லப்போனால் அவ்வாறு அவன் ஒரு குலத்தைச் சேர்ந்தவனாக இருப்பது அவசியம். குலத்துக்கு வெளியே எந்தத் தனிநபரும் இருக்க முடியாது. அவ்வாறு இருந்தால் அவன் சுத்த பூஜ்ஜியம்தான். இரண்டாவதாக, குலமரபு அமைப்பானது பொதுக் குருதித் தொடர்பு, பொதுப் பண்பொற்றுமையின் அடிப்படையில் அமைந்திருந்ததால் ஒரு குறிப்பிட்ட குலத்தில் பிறந்த ஒருவன் இன்னொரு குலத்தில் சேர்ந்து அதன் அங்கமாக மாற முடியாது. எனவே சிதறுண்ட சமூகத்தினர் ஆங்காங்கு தனித்தனி நபர்களாகவே வாழ வேண்டியிருந்தது. ஒரு குலம் இன்னொரு குலத்தை எதிர்த்துப் போராடி வந்த பூர்வீக சமுதாயத்தில் சிதறுண்ட தனிநபர்களின் ஒரு திரள் இருந்து வருவதானது அத்திரள் தாக்குதலுக்குள்ளாகும் அபாயம் எப்பேதுமே இருந்து வந்தது. இந்நிலைமையில் எங்குப்போய் புகலிடம் தேடுவது என்று அவர்களுக்குத் தெரியவில்லை. யார் தங்களைத் தாக்குவார்கள் என்பதும், பாதுகாப்பாக யாரை நாடிச் செல்வது என்பதும் அவர்களுக்குத் தெரியவில்லை. எனவேதான் புகலிடம் தேடுவதும் பாதுகாப்பு நாடுவதும் சிதறுண்ட பிரிவினரின் பிரச்சனையாக உருவெடுத்தது. (அஎபே .தொ 14.ப 56).

மேற்கண்ட அமைப்பில் குலமரபு என்பதை எப்படி விளங்கிக் கொள்வது. மானுடவியல் ஆய்வுகளில் பரிச்சயம் உள்ளவர்களுக்கு இதைப் புரிந்து கொள்வது எளிதாயிருக்கும். ஆனால் சாதாரண வாசகர்களுக்குத் தெளிவிற்காக சிறிது விளக்கம் தேவைப்படுகிறது. பொதுவாக குலமரபு என்பது தற்காப்பின் அடிப்படையில் அமைந்த ஒன்றாகும். தமது ரத்த உறவிற்குள் மட்டுமே அனைத்துச் சமுக நடவடிக்கைகளையும் பின்பற்றுவதாகும். ரத்த உறவற்றப் பிறரை அந்நியராகவே கருதுவது குலமரபு குழுவின் இயல்பு. அதில் பிறப்பு, பூப்படைதல், திருமணம், இறப்பு, சடங்குகள், வாழிட எல்லை, அவற்றைக் குறியிட்டுக் காட்டும் அடையாளக்

குறியீடுகள் அல்லது சின்னங்கள் இவை மிக முக்கியமானவை. இவையே பிற்காலத்தில் தீட்டு என்ற கருத்தாக்கத்திற்குள் வந்தவை. ஒரு குலமரபின் குழுவிற்குள் இவை அத்தனையும் கட்டுப்படுத்தப்பட்ட விதிகளுக்குள் கடைப்பிடிக்க வேண்டும். மீறுபவர்கள் விலக்கப்படவோ அல்லது கொல்லப்படவோ கூடும். இப்படி கட்டுப்பாடுகளை கடைப்பிடிப்பதின் மூலம் வேறு ஒரு குழுவோ அல்லது அலையும் நாடோடிக் குழுவோ தம் குழுவில் இணைவதை எளிதில் தடுக்க முடியும். அதுவுமன்றி பிற குழுக்களை எளிதில் இனம் காண முடியும். இதில் உள்ள முக்கிய வேறுபாடு என்னவெனில் அலையும் நாடோடிக் குழுவும் இதுபோன்ற குலமரபு கூறுகளை வைத்திருந்தாலும் அதற்குப் பிரதேச எல்லை என்பது கிடையாது. அதனால் அலையும் போது எளிதில் கலப்புகளும் அழிவுகளும் நேர்கின்றன. அதனால் அது எப்போதும் பாதுகாப்பற்ற நிலையிலேயே அலைந்து கொண்டிருக்கிறது. இதுதான் அக்குழுவினை ஒரு நிலையான இடத்திற்கு நோக்கித் தள்ளுகிறது. அப்படியானால் அலையும் குழுவிற்கும் நிலையமர்ந்த குழுவிற்குமான பிரச்சினை எப்படி உருவாகியிருக்கும் என்பதை அனுமானித்தால் இந்தக் கருத்துக்கு தெளிவினைப் பெற முடியும். அது குறித்து அம்பேத்கர் கூறுவதைப் பார்ப்போம்.
நாம் நினைவில் கொள்ள வேண்டிய இரண்டாவது விசயம், குலங்கள் பரஸ்பரம் ஒன்றுடன் ஒன்று சமாதானமாக அமைதியாக வாழ்ந்ததில்லை. எப்போதும் அவை சண்டை சச்சரவில் ஈடுபட்டிருந்தன. அனைத்துக் குலங்களும் நாடோடி வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தபோது அவற்றிடையே போர்கள் நிகழ்வதற்குப் பின்வரும் மூன்று பிரதான காரணங்கள் இருந்தன.

1.கால்நடைகளைக் கவர்ந்து செல்வது
2.பெண்களைக் கடத்திச் செல்வது
3.மற்ற குலங்களுக்குச் சொந்தமான மேய்ச்சல் நிலங்களில் கால்நடைகளை திருட்டுத்தனமதாக மேய விடுவது. (அஎபே தொ.14 பக் 54)

இந்தப் பிரச்சினையை நாடோடிக் குழுக்கள் மட்டும் சந்திக்கவில்லை. ஏற்கெனவே நிலையமர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் குலக்குழு கூடுதலாக எதிர்கொண்டது. அதற்கான காரணம் பின்கண்டவாறு இருந்தது.

குடியமர்ந்த குலத்திடம் இரண்டு மடங்கு செல்வச்செழிப்பில் மிதப்பதை நாடோடிக் குலத்தினர் தெரிந்துகொண்டனர். நாடோடிக் குலத்தினரைப் போன்றே இவர்களிடம் ஏராளமான கால்நடைகள் இருந்தன. கால்நடைகள் மட்டுமின்றி, தானியங்கள் மிகுந்திருந்தன, இவை நாடோடிக் குலத்திடம் இல்லை. எனவே அவர்கள் தானிய மணிகள் மீது பெரிதும் நாட்டம் கொண்டிருந்தனர். குடியமர்ந்த குலத்தினரின் செல்வங்களைக் கவரும் நோக்கத்தோடு நாடோடி குலத்தினர் அவர்கள் மீது திட்டமிட்டு பல தாக்குதல்களைத் தொடுத்து வந்தனர். இதிலுள்ள மூன்றாவதொரு அம்சத்தை இங்குக் குறிப்பிட வேண்டும். குடியமர்ந்த குலத்தினர் அதிக ஆதாயம் தரும் தொழிலில் ஈடுபட்டிருந்ததாதல் அவர்களால் தங்கள் கலப்பைகளை

போர்வாளாக மாற்ற முடியவில்லை. தங்கள் இல்லங்களிருந்து வெளியேறி திடீர்த் தாக்குதல் தொடுக்கும் குலத்தினரைத் துரத்திச் சென்று அவர்களுடன் பொருதவும் இயலவில்லை. (அ எ பே தொ14 ப 55).

இது ஒரு பிரச்சனையென்றால். மற்றொரு பிரச்சனையானது அலையும் நாடோடிக் குலங்களுக்குள் உருவானதாகும். அதில்தான் சிதறுண்டக் குழுவினர் உருவாகியிருக்கின்றனர். அதை மிக முக்கியமானதாக அம்பேத்கர் கருதுகிறார்.

ஆரம்பக் கட்டத்தில் பல்வேறு குலமரபு குழுவினரும் தங்களுக்குள் ஓயாது ஒழியாது போரிட்டுக் கொள்வது சகஜமாயிருந்தது. அதிலிருந்த எழுந்ததே சிதறுண்ட குழுவினரின் பிரச்சனை. ஒரு குலப்போரில் எந்த ஒரு குலத்தினரும் பூண்டோடு ஒழித்துக் கட்டப்படுவதில்லை. மாறாக அவர்கள் தோற்கடிக்கப்பட்டு நிலைகுலையச் செய்யப்படுகின்றனர். இவ்வாறு தோற்கடிக்கப்பட்ட குலத்தினர் பல நேர்வுகளில் துண்டு துண்டாக சிதறுண்டு போயினர். இதன் விளைவாக ஆரம்பக் காலத்தில் சிதறுண்ட குலத்தினர் அடங்கிய ஒரு பிரிவினர் எல்லாத் திசைகளிலும் சுற்றித் திரிந்தனர். சிதறுண்ட குலத்தினர் பிரச்சினை எழுவதற்கு என்ன காரணம் என்பதைப் புரிந்து கொள்வதற்குப் பூர்வீக சமுதாயம் அடிப்படையில் ஒரு குலமரபு அமைப்பாக இருந்து வந்தது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.(அ எ பே .தொ 14.ப 55)

இப்படிச் சிதறடிக்கப்பட்ட குலமரபுக் குழுவைச் சேர்ந்தவர்கள் தனித் தனி நபர்களாகவோ அல்லது மிகச்சிறு குழுவாகவோ அலைந்தனர்.. அவர்களுக்குப் பல பிரச்சினைகள் உருவாயின. அவற்றுள் முக்கியமானவை உணவுப் பிரச்சினை. அவர்கள் உணவிற்காக வேட்டையாடலாம். வேட்டைக்காக விலங்குகளைப் பின்தொடர்ந்து போகலாம். அப்படிப் போகும்போது ஏற்கெனவே அலைந்து கொண்டிருக்கும் பெரிய குலத்தையோ அல்லது பெரிய நிலையமர்ந்த குலத்தையோ அவர்கள் எதிர் கொள்ள வேண்டும். இதனால் உயிருக்கு உத்திரவாதமில்லை. எந்நேரமும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். அல்லது அடர்ந்த காடுகளில் நுழைந்து காட்டுவாசிகள் வாழ்க்கையை மேற்கொள்ளலாம். அப்படி மேற்கொள்ள வேண்டுமானால் மிருகங்களின் தாக்குதலை சமாளிக்கும் அளவிற்குக் குழு பலம் வேண்டும். தனிநபராகக் காட்டில் அலைவது தற்கொலைக்குச் சமம். எனவே சமவெளிகளில் அலையும் ஏதாவது ஒரு குழுவிடம் சேர்வதோ அல்லது நிலையமர்ந்த ஒரு குழுவிடம் சேர்வதோ ஒரு தற்காலிக பாதுகாப்பாகவும் இருக்கலாம். ஆனால் அலையும் ஒரு சிறு குழு குலமரபுக் குழுவாக இருப்பதால் புதிய ஆட்களை சேர்த்துக் கொள்வது கடினம், அதற்கு குலமரபு விதிகள் இடம் தராது. தனி நபர்களாய் இருந்தால் குறைந்த பட்ச பாதுகாப்பின் அடிப்படையில் ஒன்று சேர்ந்து ஒரு புதிய குழுவாக மாறி தம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம். இது ஒரு வாய்ப்பு. அப்படிச் சேரும்போது அது ஒரு வலுவுள்ள குழுவாக மாறுவதற்குப் பல காலம் பிடிக்கும். அப்படிப் பல குழுக்கள் உருவாயின.

எனினும் சிதறுண்ட பிரிவினர் நிலைத்த இடம் நோக்கி, பாதுகாப்பு, உணவினை தேடி அலைந்து கொண்டிருந்தனர். அது ஒரு குழுவோ பல குழுக்களோ எப்படியாயினும் அவற்றின் அலைச்சல் அதன் விதியாக இருந்தது. இப்படி அலையும் குழு தம்மைப் பாதுகாத்துக் கொள்ள செயல்பட்ட விதியினை அம்பேத்கரின் ஆய்விலிருந்தே பெற்றுக் கொள்ளலாம். சாதி உருவான போது “போலச் செய்தல் விதி” செயல்பட்டுள்ளதை நிறுவியிருக்கிறார். அந்த விதியை இங்கு பரிசோதித்துப் பார்த்தால் அது வலுவாகச் செயல்பட்டிருப்பதை புரிந்து கொள்ள முடியும்.

போலச் செய்தல் விதியென்பது ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ள ஒரு போக்கினை அல்லது மாதிரியினைப் பின்பற்றுவதாகும். அதன்படி அலைந்து கொண்டிருக்கும் சிதறடிக்கப்பட்ட குழுவிற்கு பாதுகாப்பு உள்ளிட்ட இத்யாதிகள் கிடைக்க வேண்டுமாயின் ஏற்கெனவே நவீன சமுதாயமாக மாறிவிட்ட நிலையமர்ந்த சமுகத்தைப் போல தம்மை மாற்றிக் கொள்ள வேண்டும். அதற்கு நிலையான ஓர் இடத்தைக் கண்டு பிடிப்பது மட்டுமின்றி, நிலைபெற்ற சமுகத்தின் உற்பத்தி உள்ளிட்ட பழக்க வழக்கங்களைப் பின்பற்ற வேண்டியிருக்கும். அல்லது அந்தக் குலத்தை போரிட்டு விரட்டிவிட்டு அவ்விடத்தை கைப்பற்றிக் கொள்ள வேண்டும். இதில் இரண்டாவது எளிதாக இருக்கும். ஆனால் அது தற்காலிகமாக இருக்கும். ஏனெனில் போர்கள் தவிர்க்க இயலாத அம்சமாகத் தொடர்ந்து மாறிவிடும் எனவே ஒரு மாற்று ஏற்பாடு அவசியமாகிறது. அந்த மாற்று ஏற்பாடு எல்லா இடத்திலும் நிகழ்ந்தது என்று பொருளில்லை. சில குறிப்பிட்ட இடங்களில் முதலில் தோன்றியிருக்கலாம் என்று அனுமானித்துக் கொள்ள முடியும். அது எப்படி நடந்தது என்பதைப் பற்றி தமது நூலில் அம்பேத்கர் தெளிவு படுத்தியுள்ளார். அதில்...

இங்கு அடுத்த கேள்வி எழுகிறது. இவ்விரு குழுக்களும் தமது பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு கண்டன? இரு தரப்புகளும் மக்கள் ஒரு பேரம் செய்து கொண்டு, இப்பிரச்சினைகளுக்கு முடிவு கட்டினர். இதன்படி குடியமர்ந்த குலத்தினருக்குக் காவல் பணி புரிய சிதறுண்ட பிரிவினர் ஒப்புக் கொண்டனர். இதற்குப் பிரதிபலனாக இவர்களுக்கு உணவும் புகலிடமும் தருவதற்குக் குடியமர்ந்த குலத்தினர் இணக்கம் தெரிவித்தனர். முக்கியமாகப் பரஸ்பரம் ஒருவர் ஒத்துழைப்பு மற்றவருக்குத் தேவைப்படும் நிலைமையில் இத்தகைய ஓர் உடன்பாடு ஏற்பட்டிருக்கவில்லை என்றால் அது இயற்கைக்கு மாறானதாக இருந்திருக்கும் (அஎபே .தொ 14.ப 57).

அம்பேத்கரின் இந்த கருதுகோள் மிக முக்கியமானதாகும். இதுபோன்ற உடன்பாடு நிகழ்ந்திருப்பதை உலகில் பல இடங்களில் நாம் காண முடியும். இந்த உடன்பாட்டிற்கு வராமல் போனால் அலையும் குலமரபுக் குழு பாதுகாப்பின்றி மீண்டும் தமது நாடோடி வாழ்க்கையைத் தொடங்க வேண்டியதிருக்கும். எனவே உயிர் வாழ்க்கையின் நெருக்குதல் அவர்களை இணங்கி வாழ வைக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால் இதில் உருவாகின்ற இடர் என்ன? புதிதாக வந்த நாடோடிக் குழு ஒரு குலமரபுக் குழுவாகவோ அல்லது பலர் குல மரபைச் சேர்ந்தவர்களின்

தொகுப்பாகவோ இருக்கும் பட்சத்தில் அவர்கள் ஒப்பந்தம் செய்து கொண்ட நவீன குழுவிடம் நேரடியாக இணைய முடியுமா என்பது ஐயமே. ஏனெனில் குலமரபு விதிகள் அதற்கு இடம் தராது. அவர்களால் ரத்தக் கலப்பு உருவாகி நிலைத்து வாழும் குழுவிற்குள் பிரச்சினைகளும், குழப்பங்களும் உருவாகலாம். அதனால் பாதுகாப்பிற்கு வந்தவர்களால் கேடுகளே பெருக வழி பிறக்கும். இந்நிலையில் இப்பிரச்சினை எப்படிக் கையாளப்பட்டிருக்கும் என்பதற்கு அம்பேத்கர் தரும் விளக்கம்தான் கிராமத்திற்கு வெளியே புது குடியிருப்பை அல்லது சேரியை உருவாக்க வழிவகுத்தது. இது குறித்து அம்பேத்கர் பின்வருமாறு கூறுகிறார்.

தீண்டப்படாதவர்கள் கிராமத்திற்கு வெளியே ஏன் வசிக்கிறார்கள் என்ற பிரதான கேள்விக்கு இப்போது வருவோம். இந்தக் கேள்விக்கான பதிலை மேலே கண்ட விளக்கங்களிலிருந்து பெற முடியும். இந்து சமுதாயம் நாடோடி வாழ்க்கை முறையிலிருந்து குடியமர்ந்த கிராம சமுக வாழ்க்கை முறைக்கு மாறிக் கொண்டிருந்தபோது இந்தியாவில் இதே நிகழ்வுப் போக்குகள் நடைபெற்றிருக்க வேண்டும். பூர்வீக இந்து சமுதாயத்தில் குடியமர்ந்த குலமரபுக் குழுக்களும், சிதறுண்ட பிரிவினரும் இருந்திருக்க வேண்டும் குடியமர்ந்த குலங்கள் கிராமத்தையும் கிராம சமுகத்தையும் உருவாக்கின. சிதறுண்ட பிரிவினர் வேறுபட்ட குலத்தையும் வேறுபட்ட குருதி உறவையும் கொண்டவர்களாதலால் கிராமத்திற்கு வெளியே வசித்து வந்தனர். இவ்வகையில் பார்க்கும்போது தீண்டப்படாதவர்கள்தான் ஆதியில் சிதறுண்ட பிரிவினராக இருந்தனர் என்று கூறலாம். அவர்கள் சிதறுண்ட பிரிவினராக இருந்ததால்தான் கிராமத்துக்கு வெளியே வசித்தனர்.

மேற்கண்ட தமது கருத்தை நிலைநிறுத்த அம்பேத்கர் இரண்டு சான்றுகளைத் தருகிறார். ஒன்று பழைய இந்து சாத்திரங்களிலிருந்தும் மற்றும் அவர் காலத்திய சான்றான மகர்களுக்கு சாதி இந்துக்களும் இடையிலான சமூக ஒப்பந்தத்தையும் சுட்டிக் காட்டுகிறார். அதனைச் சுருக்கமாகப் பார்க்க வேண்டும். அப்போதுதான் ஒரு பரந்துப்பட்ட பார்வை பெற முடியும்.

இந்து சாத்திரங்கள் குறிப்பிடும் அந்த்யாக்கள், அந்தயஜாக்கள், அந்த்யாவாசின்கள் என்று குறிப்பிடப்படும் பெயர்கள் வர்ண சமுகத்தில் கடைசியாக உள்ள வர்ணத்தைச் சேர்ந்தவனையே குறித்தது என்று ஆய்வாளர்கள் சொல்லி வந்ததை அம்பேத்கர் மறுத்து அந்த வார்த்தை கிராமத்திற்கு வெளியே அல்லது கடைசியில் வசிப்பவர்கள் என்று பொருள் கொள்ள வேண்டும் என்று தமது வாதத்தை முன்வைக்கிறார். அடுத்தச் சான்று சிதறுண்ட பிரிவினர் தீண்டத்தகாதவர்களான மகர்கள் எனப்படும் சமூகத்தவரை ஒத்தவர்களாக இருந்தனர் என்பதைப் பற்றினதாகும். மகாராட்டிரத்தில் மகர்கள்தான் பெரும்பான்மையினர். அவர்கள் கிராமங்களின் கடைசியில் அல்லது தனிச் சேரியில் வாழ்ந்தாலும் சாதி இந்துக்களிடமிருந்து அவர்களுக்கு 52 வகையான உரிமைகள் கிடைத்தன. அதில் முக்கியமானவை 3 என்று அம்பேத்கர்

குறித்திருக்கிறார். அது பண்டைய காலத்தில் நாடோடி குலமரபுக் குழு பெற்ற உரிமைகளைப் போன்று இருப்பதால் அதை முன்வைக்கிறார். அதில்...

1. கிராமவாசிகளிடமிருந்து உணவு பெறும் உரிமை
2. அறுவடைக் காலத்தில் ஒவ்வொரு கிராமவாசியிடமிருந்தும் தானியங்களைப் பெறும் உரிமை.
3. கிராமவாசிகளுக்குச் சொந்தமான செத்த விலங்குகளை தங்களுடையதாக்கிக் கொள்ளும் உரிமை. (காண்க - அஎபே .தொ 14. ப60-61)

இவை போதிய தகவல்கள் அல்லாவிட்டாலும் தீண்டத்தாகதவர்கள் ஆரம்பம் முதலே கிராமத்துக்கு வெளியே வசித்து வந்தனர் என்ற கருத்துக்கு ஆதரவாக இவை சில சான்றுகளை அளித்துள்ளன. அவர்கள் தீண்டத்தகாதவர்கள் என்ற காரணத்திற்காக கிராமத்தைவிட்டு வலுக்கட்டாயமாக வெளியேற்றப்படவில்லை. கிராமத்திற்கு வெளியேதான் வசிக்க வேண்டும் என்று அவர்கள் எவ்வகையிலும் நிர்ப்பந்திக்கப்படவில்லை. தொடக்கக் காலம் முதலே அவர்கள் கிராமத்திற்கு வெளியே வசித்து வந்தார்கள் என்றால் குடிபெயர்ந்த குலத்திடமிருந்து வேறுபட்டதொரு குலத்தைச் சேர்ந்த சிதறுண்டவர்களாக அவர்கள் இருந்ததே இதற்குக் காரணம். (அ எ பே .தொ 14.ப 62)

அதே நேரத்தில் இந்த புதிய குடியிருப்பில் வசித்தவர்களுக்கும் தீண்டாமைக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை.

ஆக, தீண்டத்தாகதவர்கள் ஆரம்பம் முதலே கிராமத்துக்கு வெளியேதான் வசித்து வந்தனர், அவர்கள் கிராமத்திற்கு வெளியே வசிப்பதற்கும் தீண்டாமைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்ற ஊகிப்பது முற்றிலும் இயல்பானதே என்பதை இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். (அ எ பே .தொ 14.ப 57-58)
இப்படி உருவான கிராமத்திற்கு வெளியேயான தனிக் குடியிருப்பு மற்ற இடங்களில் அல்லது இந்தியத் துணைக்கண்டத்தில் எல்லாக் கிராமங்களிலும் எவ்வாறு பரவியிருக்கும் என்பதற்கான பதிலைப் பெற வேண்டும். அதற்கு அம்பேத்கரின் போலச் செய்தல் விதியைத்தான் பயன்படுத்த முடியும். ஒரு முன்மாதிரி உருவாகிவிட்டால் அது மற்ற சமுகங்களிடையே பரவுவது ஒன்றும் கடினமல்ல. நிலைநிறுத்தப்பட்ட ஒரு பாதுகாப்பு ஏற்பாட்டினை நிலையமர்ந்த குழுவுக்கு அனுகூலமாக இருக்கும் பட்சத்தில் அவர்கள் தேவைப்பட்ட நேர்வுகளில் பயன்படுத்திக் கொண்டிருப்பார்கள். இந்தச் சமுக ஒப்பந்தமானது போலச்செய்தல் விதியாக மாறிப் பிற சமுகங்களைப் பற்றி இந்தியா முழுமைக்கும் பல நூற்றாண்டுகளாகச் செயல்பட்டு பரவியிருக்கிறது. சொல்லப்போனால் அண்மைக்காலம் வரை செயல்பட்டுப் பரவிக் கொண்டிருக்கிறது. ஆனால் அதன் உள்ளடக்கம் எல்லா நேரத்திலும் ஒரே நோக்கத்திற்காக மட்டும் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை என்பதைப் புரிந்து கொண்டால் பிரச்சினையில் மூலத்தைப் புரிந்து கொள்வதும் எளிதாகும்.

அம்பேத்கர் அவர்களின் இந்த முடிவுகள் சேரி எவ்வாறு உருவாகியிருக்கும் என்பதைப் பற்றின ஒரு தீர்மானமாக முன்வைப்பு. அடிப்படையானது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் முழுமையானது அல்ல என்பதை அவரே வெளிப்படுத்தியிருக்கிறார். அது நிச்சயம் வளர்த்தெடுக்கப்பட வேண்டிய ஒரு வரலாற்று ஆய்வு என்பது அது பின்னாளில் நடக்கும் என்று நம்பினார். கெடுவாய்ப்பாக அது சாதி இந்துக்கள் மத்தியில் இன்னும் வளரவில்லை என்பது சோகமான உண்மை. எனவே இந்த ஆய்வில் அதை நாம் தொடரப் போகிறோம். அம்பேத்கர் தொட்டுக்காட்டிய ஆய்வின் முடிவினை அவர் விட்ட இடத்திலிருந்து தொடங்குவது அவரது ஆய்வுத் துறைக்கு செய்யும் ஒரு பங்களிப்பு மட்டுமல்ல, வரலாற்றின் மறைந்த பக்கத்தை வெளிச்சத்திற்குக் கொண்டு வரும் முயற்சியாகும்.

எனவே இது வரை பார்த்தக் கருத்துக்களை தொகுப்பாக பார்த்துக் கொள்வோம்.
மனித இன தொடக்க வரலாற்றில் குலமரபு குழுக்கள் உருவாயின.
அவை தொடர்ந்து போரிட்டுக் கொண்டன.
அவற்றில் சில நிலையாகத் தங்கி நவீன சமுகமாக மாறின. சில நாடோடிகளாக அலைந்தன.
இந்த இரண்டு குழுக்களின் பாதுகாப்பு ஏற்பாட்டிற்காக தமக்குள் ஒரு ஒப்பந்தத்தை உருவாக்கிக் கொண்டு இரண்டு குடியிருப்புகளாக கிராமம் உருவானது.
இரண்டு குடியிருப்புகளுக்கும் குலமரபு வேறுபாடுகள் மட்டும் இருந்தனவே தவிர எந்த விதத்திலும் தீண்டாமை என்பது இல்லை. அது உருவாக இன்னும் பலகாலம் இருக்கிறது.
மேற்கண்ட முடிவுகள் முழுமையானதல்ல என்பதும் அம்பேத்கர் சொன்னதுபோல சில குறைபாடுகளும் இருக்கின்றன. அதே நேரத்தில் பல கேள்விகள் எழுந்துள்ளன. அவற்றைத் தற்கால ஆய்வுகளின் அடிப்படையில் பார்க்க வேண்டும். அவை என்ன...?

தமிழ்மண் இதழில் கட்டுரை ஆசிரியர் கௌதம சன்னா எழுதி வரும் தொடர்.
கட்டுரை ஆசிரியர் சம்மதத்துடன் மின்தமிழில் வெளியிடப்படுகின்றது.
-சுபா

கவுதம் சன்னா
g.sannah@gmail.com

***

14. கச்சத்தீவு – ஒரு மீள்பார்வை – மூன்று ஆங்கில நூல்கள் மூலம்

– கே.ஆர்.ஏ. நரசய்யா



நூல்கள்:

1. KACHCHTIVU and the PROBLEMS of INDIAN FISHERMEN in the PALK BAY REGION - T R Publications. Chennai
2. Conflict Over Fisheries In The Palk Bay Region – Lancer Publishers and Distributors
3. CONTESTED TERRITORY OR COMMON HERITAGE? Thinking Out Of The Box – Imprint of Productivity and Quality Publishing Pvt., Ltd Chennai.

முதல் இரண்டு நூல்களும் பேராசிரியர் வெ. சூரியநாராயணனாலும் மூன்றாவது வெ. சூரியநாராயணன் மற்றும் ஆர். ஸ்வாமிநாதன் என்பவர்களாலும் எழுதப்பட்டவை.

பேரா. சூரியநாராயணன் தெற்கு மற்றும் தெற்காசிய நாடுகளைப் பற்றிய சிறந்த ஒரு ஆய்வாளர். சென்னைப் பல்கலைக்கழகத்தில் தெற்கு மற்றும் தெற்காசிய ஆய்வு மையத்தின் இயக்குநராகவும் முதுநிலைப் படிப்பில் பேராசிரியராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றவர். முக்கியமாக பாக் நீரிணையின் வரலாற்றைச் சிறந்த முறையில் ஆய்ந்தவர். இவ்விரு முதல் நூல்களிலும் கச்சத்தீவு பிரச்சினையை அதன் ஆரம்பக்காலத்திலிருந்து திறம்பட விவரித்துள்ளார். காலத்தால் முதல் நூல் முன்னரே எழுதப்பட்டதாயினும் இன்றைய நிலைக்கும் அது சரியாக இருப்பதால் இம்மூன்று நூல்களையும் கலந்து பார்ப்பதே பொருத்தமாகும்.

முதல்நூலிலேயே ஆசிரியரின் நோக்கு தெளிவாகிறது. ஆரம்பக் காலத்திலிருந்தே பாக் நீரிணை இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலேயான ஒரு வழியாகவும் அதே நேரத்தில் ஒரு பெரும் தடையாகவும் இருந்துள்ளது. அவ்விடம் மீன் பிடிப்பதற்கான ஒரு முக்கியமான இடமென்பது கீழ்க்கண்ட புள்ளி விவரங்களால் தெரியும். 1980 ஆம் வருடத்து மக்கள் தொகை விவரத்தின் படி, தமிழ்நாட்டு மீனவர் 3,95,903 ஆவர். இந்தியாவின் மொத்த மீனவர் தொகையில் தமிழ்நாட்டு மூன்றில் ஒரு

பங்காவார்   உலகில் மீனவர் சமுதாயம் வாழும் எவ்விடத்தை நோக்கினும் ஒன்று தெளிவாகும்; அதாவது சாதாரணமாக மீனவர்கள் கடலைத் தமது வாழ்க்கையின் ஒரு பகுதியாகவேக் கருதுகின்றனர். ஆகையால் அவர்களுக்குக் கடல் எல்லைகள் ஒரு பொருட்டல்ல; கடல் அவர்களது பிரதேசம்.

பாக் நீரிணை ராபர்ட் பால்க் என்ற அக்கால (1755-1763) மெட்ராஸ் ஆளுநராக இருந்தவரின் பெயரால் அழைக்கப்படுகிறது. இந்நீரிணையும் மன்னார் வளைகுடாவும் பாம்பன் கால்வாயால் இணைக்கப்படுகின்றன. இங்கு மீன்கள் வாழ்வதற்கும் பெருகுவதற்கும் இயற்கைச் சூழ்நிலை வழி வகுக்கின்றது. ஆகையால் தொன்றுதொட்டே இவ்விடம் மீனவர்கள் விரும்பிய கடலாகும். இன்றைய பிரச்சினைகளுக்கு ஆரம்பம் இந்திய இலங்கை அரசுகள் அரசியல் ரீதியாக எடுத்த சில முக்கிய முடிவுகள் என்றே கூறலாம். 1974 மற்றும் 1976 வருடங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்ட முடிவுகள் தமிழ் நாட்டு மீனவர்களுக்குச் சாதகமாக இருக்கவில்லை.

இரண்டாவது நூலில் ஆசிரியர் முக்கியமான புள்ளி விவரங்களைப் பட்டியலிட்டுத் தந்துள்ளார். அது படிப்பவர்களுக்கு ஒரு நல்ல அடித்தளமாகக் காணப்படுகிறது.

1950களில் இறால் மீன் வகை அதிகமாக இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டது. முக்கியமாக அமெரிக்காவும் ஜப்பானும் இவ்வகை மீனை வாங்கத் தொடங்கியது. வணிக நிலை கருதி அரசும் இதற்காக அது வரை இல்லாத அளவில் மீன் பிடி வசதிகளை அதிகரித்தது. முதல் கட்டமாகச் சாதாரண படகுகளிலிருந்து விசைப்படகுகளுக்கும் சாதாரண வலைகளுக்குப் பதிலாக இழுவலைகளுக்கும் உதவிகள் வழங்கப்பட்டன. மீன் ஏற்றுமதிக்காக மத்திய அரசு Marine Exports Development Authority (MPEDA) என்ற ஒரு அமைப்பைத் தொடங்கியது. இதன் மூலம் மீன் ஏற்றுமதி 1961ல் இருந்த 17,295 டன்னிலிருந்து 2001 ஆம் ஆண்டில் 4,24,320 டன்னாக உயர்ந்தது. இதே போல இலங்கையிலும் ஏற்றுமதி பெருகிற்று. இவ்வணிக உயர்வும் இலாபமும், , இந்த பாரம்பரியத் தொழிலை மீனவர்கள் கைகளிலிருந்து மற்ற வணிகர்கள் கைகளுக்கு மாற்றியது! பல தமிழ் நாட்டு அரசியல்வாதிகள் விசைப் படகுகளின் மகிமையைத் தெரிந்து கொண்டு அவற்றில் மூலதனமிட்டனர். இழுவலைகள் தற்காலிகமாகப் பெரும் இலாபத்தை அளித்தாலும் காலப்போக்கில் மீன் இனத்திற்குப் பெரும் பங்கத்தை விளைவிக்கும் என்பது மீனவச் சமூகத்திற்குத் தெரிந்த விஷயம். ஆனால் இத்தொழில் வணிகர்களுக்கு ஒரு வியாபாரமே.
285.2 ஏக்கர் அளவிலான கச்சத்தீவு ராமேஸ்வரத்திற்கு வடகிழக்கில் பத்து மைல் தொலைவில் உள்ளது. இது மனிதர்கள் வாழும் பகுதியல்ல. பழங்காலத்தில் தமிழக மீனவர்கள் அக்காலத்திய வலைகளைக் காயப்போடுவதற்குப் பயன் படுத்தி வந்தனர். புனித அந்தோணியாரின் சர்ச் ஒன்று அங்குள்ளது. மார்ச் மாதத்தில் இங்கு நடைபெறும் திருவிழாவில் தமிழக, இலங்கை மீனவர்கள் பங்கு கொள்வர். 1972 ராமநாதபுரம் கெசட் பதிவின் படி, இத்திருவிழாவின் போது, தங்கச்சிமடத்து கத்தோலிக்க குரு ஒருவர் அங்கு பூஜைக்காகச் செல்வது வழக்கம். இருபதாம்

நூற்றாண்டின் ஆரம்ப காலகட்டத்தில் இராமநாதபுரத்து மீனவரான சீனிக்குப்பன் படையாச்சி என்பவரால் கட்டப்பட்டது என நம்பப் படுகிறது. இந்த சர்ச் ஒரு இராமநாதபுரத்துப் படையாச்சியால் கட்டப்பட்டதன் காரணமாக, பொதுவாக இது தமிழ் நாட்டுக் கத்தோலிக்க ஆளுமைக்குக் கீழ் வந்திருக்க வேண்டும். ஆனால், இந்த சர்ச் அப்போதே கொழும்பு டயோசீஸ் ஆளுமைக்குக் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதனால் இலங்கை சொந்தம் கொண்டாட மற்றொரு வாய்ப்பாக அமைந்துவிட்டது.

இந்நூலில் சூரியநாராயணன் நேரு 1960 செப்டம்பரில் ராஜ்ய சபையில் குறிப்பிட்டதைச் சுட்டுகிறார். நேரு சொன்னது: "ஒரு ஜமீன்தாரால் இத்தீவு சொந்தம் கொண்டாடப்பட்டது. இப்போதோ ஜமீன்தாரி முறை கிடையாது. ஆகையால் சொந்தம் குறித்துத் தெளிவாகச் சொல்ல முடியாது" திருமதி இந்திரா காந்தி மார்ச் 1968ல், "நாம் இலங்கை அரசுடனும் மக்களுடனும் நல்லுறவு கொண்டுள்ளோம். இப்போது இத்தீவைப் பற்றிப் பேசினால் தொந்தரவுகள் உண்டாகலாம்" என்றதையும் காட்டுகிறார். அது மட்டுமின்றி அன்றைய வெளி விவகாரத்துறையின் அமைச்சரான பி. ஆர். பகத் ஜி. ஜி. ஸ்வெல் கேட்ட கேள்விக்கு குழப்பமுண்டாக்கும் வகையிலான பதிலை அளித்தாரெனவும் குறிப்பிடுகிறார். ஆகையால் ஆரம்பத்திலிருந்தே கச்சத்தீவு விவகாரம் இந்திய அரசால் சரியாகக் கையாளப்படவில்லை என்கிறார். அதே நேரத்தில் இலங்கையிலோ அவ்வரசு தீர்க்கமான முடிவைத் தொடக்கத்திலிருந்தே கொண்டிருந்தது என்றும் கூறுகிறார்.

1974 தொடக்கத்திலேயே இந்திய அரசு கச்சத்தீவை இலங்கைக்கு அளித்து விட நினைத்து விட்டது என்கிறார். ஜனவரி 1974 ல் சிரிமாவோ பண்டாரநாயகா இந்தியா வந்த போது இந்திரா காந்தியுடன் எடுத்துக் கொண்ட முடிவில் இரண்டு ஷரத்துகள் இருந்தன நாடின்றி இருப்பவர்களை இருநாடுகளும் சமமாகப் பங்கேற்று குடியுரிமை தலா 75,000 நபர்களுக்கும் பின்னர் பெருகும் அவர்களது சந்ததியர்களுக்கும் வழங்கவேண்டும். கடல்சார் எல்லையை இருநாடுகளும் கலந்து முடிவெடுக்கவேண்டும். இந்த முடிவு ஜூன் 28 1974 அன்று செய்கைக்கு வந்தது. கச்சத்தீவைப் பொறுத்த மட்டில், அது இலங்கைக்குச் சொந்தமானதென ஒப்புக் கொள்ளப்பட்டது. ஆனால் "இந்திய இலங்கை மீனவர்கள் கச்சத்தீவு செல்ல பயண பத்திரங்கள் வேண்டியிருக்காது என்றும் கூறியது. இந்நூலில் பல பழைய ஆவணங்களும் குறிக்கப்பட்டுள்ளதால் இது முக்கியமாகப் படிக்கவேண்டிய நூலாகிறது. உதாரணமாக 1921 ஆம் ஆண்டு ஆவணம் எல்லைகளைக் குறித்துப் பேசுகிறதைச் சுட்டுகிறது.

அன்றைய ஜனசங்கம் (பின்னர் பா ஜ க) 1974 முடிவு குறித்துப் பிரச்சினை எழுப்பலாம் என்று அன்றைய காங்கிரஸ் அரசு மிகவும் இரகசியமாகக் கையாண்ட விதத்தையும் ஆசிரியர் சுட்டிக் காட்டுகிறார். அதே போல 1976 ஆம் ஆண்டு முடிவு குறித்தும் விளக்கியிருக்கப் பட்டுள்ளது. 1972 ஆம் ஆண்டின் தமிழ் நாடு கெசட்டில்

கச்சத்தீவு பற்றிக் குறிப்பு ஒன்றுமே இல்லாதது குறித்தும் சொல்லப்படுகிறது. ஒரு முறை இலங்கையில் நடந்த பேச்சு வார்த்தைகள் குறித்து எழுதுகையில் இந்தியாவின் மெத்தனப் போக்கு குறிப்பிடப்படுகிறது "சாஸ்திரி மேற்கொண்ட பேச்சுவார்த்தைகள் போது தமிழ் நாட்டுப் பிரதிநிதி வாயே திறக்கவில்லை" என்பதை ஒரு பத்திரிகையாளர் சொல்லக்கேட்டதையும் குறிப்பிடுகிறார்.
இந்த மூன்று நூல்களில் முக்கியமானது மூன்றாவதாகும்.

சர்வதேச கடல்சார் விதி முறைகளில் சரியாக விவரிக்கப்படாதது Right Of Innocent Passage என்பதாகும். பழங்காலத்து விதி முறைகளின் படி, கடல் எல்லோருக்கும் பொதுவானது.. UNCLOS எனப்படும் ஐக்கிய நாடுகளின் கடல் சார் விதிகள், குற்றமற்ற பாதை என்பது எங்கேயும் வரையறுக்கப்படவில்லை. கடலில் எல்லைகள் பாதுகாப்பிற்காக நிர்ணயிக்கப்பட்டதுவேயன்றி தமது தொழில் சார்ந்து மீனவர்கள் கடல் எல்லையைக் கடப்பது குற்றமற்ற ஒரு செய்கையேயாகும். ஆகையால் அவர்களைக் கைது செய்வது சரியல்ல என்பது உணரப்பட வேண்டும். ஆகையால் இது பற்றிய உணர்வு பூரணமான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பதை இந்நூல் குறிப்பிட்டுக் காட்டுகிறது. பன்னாட்டு விவகாரங்கள் உதாரணங்களாகக் காட்டப்பட்டுள்ளன. ஒரு அழகான கதை இறுதியில் சொல்லப்படுகிறது. அது இந்தியாவுக்கும் இலங்கைக்கும் பொருந்தும். ஒரு ஆதிவாசிக் கிராமத்துப் பள்ளியில் ஓட்டப்பந்தயம் வைக்கப்பட்டது. ஒரு பையன் எல்லோருக்கும் முன்னர் ஓடிக் கொண்டிருந்தான். ஆனால் பந்தயம் முடிவுக்கு முன்னால் சற்றே நின்று கொண்டான். ஏனெனக் கேட்ட போது "பின்னால் வருபவர்களும் வரட்டும். எல்லோரும் சேர்ந்தே ஓடலாம்" என்றானாம்.
கடல் பொதுவானது. எல்லோரும் சேர்ந்து செயல் பட்டால் அனைவருக்கும் பயனாகும்.

நன்றி: தினமலர்

Mr. K R A Narasiah
narasiah267@gmail.com

***

15. ஐரோப்பாவில் அச்சான முதல் தமிழ் ஆவணம்

– சிங்கநெஞ்சம் சம்பந்தம்

ஃபிலிபஸ் பால்டேயஸ் (Philippus Baldaeus) எனும் பாதிரியார் தமிழில் மொழி பெயர்த்த கர்த்தரின் ஜெபம் 1672 ஆம் ஆண்டு ஐரோப்பாவில் அச்சானது. ஐரோப்பிய மொழிகள் அல்லாத வேற்று மொழி ஐரோப்பாவில் அச்சானது இதுவே முதன்முறை.

இந்த பரமண்டல ஜெபத்தை , 1964இல், நான் 4 ஆம் வகுப்புப் படிக்கும் போது , எங்கள் செயின்ட் டேவிட் பள்ளியில் சொல்ல ஆரம்பித்தேன். அப்போது எனக்கு எட்டு வயது. துடுக்குத்தனம் அதிகம். நேரே தலைமை ஆசிரியர் அறைக்குச் சென்றேன். அனுமதி மறுக்கப்பட்டது. "இன்னார் வீட்டுப் பையன் " என்றேன் ; உள்ளே விட்டார்கள்.

தலைமை ஆசிரியர் அருமை நாயகம் அவர்கள். பெயருக்கு ஏற்றார் போல் அருமையான மனிதர், மிகச் சிறந்த ஆசிரியர்.....என்னைப்பார்த்து

" ஏன்னா வேணும்"
"சார், இந்த ஜெபம் நல்லா இல்ல சார்."
"ஏண்டா"
"நல்லாவே புரியல சார். 'ராச்சியம் வருவதாக...... அன்றன்றுள்ள அப்பம்' .... ஒண்ணுமே புரியல சார் , மாத்துங்க சார்."
"டேய் டேய் ....அப்பிடியெல்லாம் சொல்லக் கூடாது. பெரியவங்க எழுதினது "
"யார் , யார் சார் எழுதினாங்க, எங்க இருக்காங்க , அவங்க கிட்ட சொல்லி மாத்துங்க சார். உங்களுக்கு தெரிஞ்சவங்கதானே"

" டேய் . கிளாசுக்குப் போ....நேரமாவுது. .....அப்புறம் சொல்றேன். "
உணவு இடைவேளையில் கண்ணில் பட்டார் .
"சார் "
" அப்புறம் சொல்றேன்னு சொன்னேன் இல்ல , போடா....சாப்ட்டு வா...போ."

அடுத்த திங்கள் முதல் பீரியட் , "நீதி போதனை", H.M. எங்கள் வகுப்புக்கு வந்தார். பொதுவாக சின்ன கிளாசுக்கெல்லாம் வர மாட்டார். மிரண்டுவிட்டனர் அனைவரும். என்னை முறைத்தார்கள்.

" கர்த்தருடைய ஜெபம் , யார்- எப்போ எழுதினதுன்னு இவன் கேட்டான். நல்ல கேள்வி...இப்பிடித்தான் கேக்கணும். இத்தினி வருஷமாச்சி எனக்கும் தெரியாது. பெரியவங்கள கேட்டு சொல்றேன் ...நீங்களும் கேட்டுப் பாருங்க " என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். அதிர்ச்சியில் உறைந்தோம். H.M.முக்கே தெரியாதா?



ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் ஓடி விட்டன. கடந்த ஜூன் மாதம் இணையத்தில் அந்த ஜெபம் கண்டேன். புள்ளி இல்லை. நெடில் தனியே இல்லை. நிச்சயமாகப் பழைய ஆவணம் என உணர்ந்து, மின் தமிழிலும் , ஃபேஸ்புக்கிலும் போட்டேன். நண்பர் ஒருவர், இந்த ஜெபம் ஃபிலிபஸ் எழுதியது எனக்குறிப்பிட்டிருந்தார்.

Singanenjam
singanenjam@gmail.com

***

16. காந்தியார் கண்ணில் தொட்டு ஒற்றிக்கொண்ட தமிழ் மண்

– பேராசிரியர் நாகராசன்

தென் ஆப்ரிக்காவிலிருந்து தாயகம் திரும்பிய காந்தியார் தென் ஆப்ரிக்கா போல் ஒரு ஆசிரமம் அமைக்க உடன் அழைத்துவந்தவர்களில் பலர் தமிழ்நாட்டைச் சேர்ந்த தென் ஆப்ரிக்காச் சத்யாகிரகிகள். அவர் நாடு திரும்பும்போது அவருடைய நண்பர் இந்தியா சென்றதும் வேதாரண்யம் பகுதியில் இருக்கும் தன் முன்னோர்களின் வீட்டையும் சத்யாக்கிரகம் செய்த குற்றத்துக்காக நாடு கடத்தப்பட்டு வேதாரண்யம் பகுதியில் வாழும் சத்யாக்கிரகிகளையும் சந்திக்குமாறு வேண்டினார்.

இந்தியாவுக்கு வந்து சுதந்திரப்போரில் ஈடுபடுவதற்கு முன்னோடியாக அவர் இந்தியாவைச் சுற்றி வந்து இந்தியச் சூழலை அறிந்துகொள்ள முயற்சி எடுத்ததும் அவர் முதலில் பயணம் செய்த இடம் வேதாரண்யத்தைச் சுற்றியுள்ள பகுதிகள்.

அவரது பயணத்தில் தென் ஆப்ரிக்காவில் வீறுகொண்டெழுந்த மக்கள் இங்கே அடிமைகளாகப் பண்ணையாட்களாகப் பணிபுரிவதைப் பார்த்துக் கலங்கிப்போனவர் தில்லையாடி வள்ளியம்மையின் வீட்டுக்குமுன் மண்டியிட்டு வணங்கி தன்னுடைய எதிர்காலச் செயல்பாடுகள் ஆங்கிலேய அடிமைத்தனத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முன் இந்திய சமூகக் கட்டமைப்பின் கிடுக்கிப்பிடியில் சிக்கிச் சக்கையாகும் உழைப்பாளிகளையும் பெண்களையும் கரையேற்றுவதாக உறுதி பூண்டார்.

இந்தியன் ஒப்பீனியன்' பத்திரிகையில் காந்தி “இந்தியாவின் புனிதமகள் ஒருத்தியை இழந்துவிட்டோம். ஏன், எதற்கு என்று கேட்காமல் தனது கடமையைச் செய்தவள் அவள். மாதர்களுக்கே உரிய துன்பத்தைச் சகிக்கும் மனோபலமும், தன்மானமும் கொண்டவள்! அவளது தியாகம் இந்தியச் சமூகத்திற்கு நிச்சயம் பலனளிக்கும்! என் அண்ணனின் மரணத்தை விட வள்ளியம்மையின் மரணம் என்னை அதிகம் பாதிக்கும்” என்று எழுதினார். மகாத்மா காந்தி தில்லையாடி வந்த பொழுது மண்ணைத் தொட்டு வணங்கினார் என்று கூறப்படுகிறது.ஒரு பெண். தன் தாய்நாட்டை பார்த்திராத போதும் அதன் விடுதலைக்காக போரிட்டவர். நாம் 15வது வயதில் பத்தாம் வகுப்புத் தேர்வைப்பற்றி புலம்பிக்கொண்டிருந்தோம். இந்தப் பெண் தன் நாட்டிற்காகச் சிறை சென்று இறந்தாள். நாம் நமது விடலைப்பருவத்தைச் சுவைத்துக்கொண்டிருந்த வயதில் இந்தப் பெண் அடிமைத்தனத்தை எதிர்த்து போரிட்டாள்.

காந்தி எழுதிய தமிழ்க் கடிதம்!

மகாத்மா காந்தியின் ஞாபகார்த்தமாகப் பல பொருட்கள் உண்டு. ஆனால், அவற்றில் சிறப்பு வாய்ந்தது, அவர் தில்லையாடியில் வாழ்ந்த சுப்பிரமணிய ஆச்சாரிக்கு தன் கைப்பட எழுதிய தமிழ்க் கடிதம்!

தங்கள் தாயாரைப் பற்றிய பதில்
இன்று எதிர்பார்த்துக் கொண்டு
இருக்கிறேன் தயவு செய்து
இந்த விஷயத்தில் கூடிய
[illegible]
கொள்ளுகிறேன் வந்தேமாதரம்
அன்போடு மொகன்தாஸ்
[illegible] காந்தி
[illegible]

தென் ஆப்பிரிக்காவில் நிறவெறியை எதிர்த்து காந்தி நடத்திய போராட்டத்தில் கலந்துகொண்டு, சிறை சென்று, உயிர்த் தியாகம் செய்தவர், தில்லையாடி வள்ளியம்மை.

மயிலாடுதுறையில் இருந்து தரங்கம்பாடி போகும் வழியில் தில்லையாடி இருக்கிறது. ஒருமுறை மனைவி கஸ்தூரிபாயுடன் காந்தி, தில்லையாடிக்கு வந்தார், தில்லையாடி ஊருக்குள் நுழைந்ததும் வண்டியில் இருந்து இறங்கி, இரு கையிலும் மண்ணை அள்ளி கண்களில் ஒற்றிக் கொண்டார், காந்தி!

தில்லையாடி வள்ளியம்மை

தகவல் உதவி: http://gouthamtamil.blogspot.in/2012/03/blog-post.html

பேராசிரியர் நாகராசன்
radius.consultancy@gmail.com

***

17. மறைமலை அடிகள்

– மாயோன் .டி. எஸ்.

வேதாசலம் சுவாமி என்ற பெயரை மறைமலை அடிகள் என தனித்தமிழில் மாற்றியவர்.

தமிழ், சமசுகிருதம், ஆங்கில மொழிகளில் புலமை பெற்றவர். அன்றைய காலத்தில் தமிழில் பிறமொழிச் சொற்கள் கலந்து, தமிழ்ச் சொற்கள் வழக்கொழிந்து போன நிலையில் தனித்தமிழ் இயக்கம் கண்டு தமிழையும், தமிழ்ச்சொற்களையும் மீட்டெடுத்தவர்.

இயற்கை மொழியான தமிழில், பிறமொழிகளைக் கலப்பதை, உடலுறுப்புகளை வெட்டிவிட்டு அவ்விடங்களில் செயற்கையான மண்ணாலும், மரத்தானாலும் ஆன உறுப்புகளை வைப்பது போன்றது என எளிய முறையில் விளக்கி, பிறமொழிச் சொற்களை விலக்கியவர். சங்க இலக்கியங்கள் எல்லாம் படிக்கச் சொல்லியவர்; குறிப்பாகத் தொல்காப்பியத்தை அறியாமல் இருப்பது தமிழருக்கு மானக்கேடு என்றவர். உலகில், முதன்முதலில் மொழியின் எழுத்துகளை உயிர்,மெய் எனப் பகுத்தது தமிழரே என விளக்கியவர்.

தமிழர் யாரும் இந்துக்கள் இல்லை என விளக்கியவர். உயர்தனிச் செம்மொழி எனத் தமிழின் பெருமைகளை, அருமைகளைத் தமிழர் அறியச் செய்தவர். இன்று மக்களை முட்டாளாக்கும் "இந்தி பொது மொழி" என்ற பொய்யுரையை அன்றே உடைத்தவர். தமிழிசையை மீட்டெடுக்க விரும்புவர். ஆலயங்களில் தமிழை வழிப்பாட்டு மொழியாக்க விரும்பியவர்.

1902'இல் தமிழ் வடமொழியில் இருந்து பிறந்ததா என்ற கட்டுரையில் சமசுகிருதம் தமிழுக்கு தாய் என்ற பொய்யுரையை உடைத்தவர். ஆரியர் வேறு, தமிழர் வேறென்று 1904'இல் பேசி, தமிழரே இந்நாட்டின் பூர்வகுடி மக்களென்றும் மக்களுக்கு விளக்கியவர். ஆரிய எதிர்ப்பு என, தமிழரிடத்தில் ஆரிய வெறுப்பை விதைக்காமல், வெறுப்பில்லாமல் சமசுகிருதத்தை நன்கு கற்ற பிறகு ஆரியத்தை எதிர்த்தவர். 1913'இல் சாதி வேற்றுமையை எதிர்த்துப் பேசியவர். மக்கள் யாவரும் கல்வி கற்க வேண்டும் என வலியுறுத்தியவர்.

‘ஆங்கிலமும், சமசுகிருதமும் கட்டாயம் படிக்க வேண்டும். தாய்மொழிப் பாடத்தை விருப்பப்பாடமாக கற்றால் போதும்’ என்று சென்னைப் பல்கலைக்கழகம் தீர்மானம்

போட்டபோது, 11 ஆண்டுக் காலம் பணியில் இருந்த மறைமலை அடிகளார், அதை எதிர்த்துத் தன்னுடைய பணியில் இருந்து விலகினார். ஆங்கிலம், சமசுகிருதம் போன்ற மொழிகள் தமிழில் பரவிக் கிடந்ததை உணர்ந்து வருந்தியவர், அதிலிருந்து தமிழை மீட்க முடிவெடுத்தார். வெறும் பேச்சால் மட்டுமே கொள்கைகளைப் பரப்பிவிட முடியாது என்ற தெளிவும் அவரிடம் இருந்ததால்தான் அதற்கு ஒரு முன்னுதாரணமாகச் செயல்படவும் தொடங்கினார். 1916-ல் தனித்தமிழ் இயக்கத்தைத் தொடங்கினார்.

தமிழ்க்கடல்,தனித்தமிழ்த் தந்தை என்றழைக்கப்பட்டவர். ‘‘அடிகளே தென்னாடு… தென்னாடே அடிகள்’’ என்று தமிழ்த்தென்றல் திரு.வி.க-வால் புகழப்பட்டவர்.

இன்றும், தமிழின் தூய்மை கெடாமல் இருக்க, மறைமலை அடிகளாரின் முயற்சிகள் தான் முக்கிய காரணம். மெய்யாகத் தமிழை வளர்க்க அரும்பாடு பட்ட மறைமலை அடிகளார் தனது 75'ஆவது அகவையில் 15-09-1950'இல் மறைந்தார்.

தமிழகத்தில் தமிழில் பேசினால் இழிவு, தமிழ் ஏன் கற்க வேண்டும்,தமிழ் கற்றால் பயனில்லை,தமிழில் பிறமொழிச் சொற்கள் கலந்து பேசுவது என்றெல்லாம் பலர் மயக்கத்தில் இருப்பதற்கு முக்கிய காரணம் மறைமலை அடிகளின் வரலாறு அறியாமல் இருப்பதே. அவரது நினைவு நாளில் அவராற்றிய அரும்பணிகளை நம்மால் முடிந்தவரை மயக்கத்தில் இருப்போருக்கு எடுத்துரைப்போம்.

Maayon TS
ts.maayon@gmail.com

***

18. ஆஜ்மீர் தேக்ஸாக்கள்

– சிங்கநெஞ்சம் சம்பந்தம்

நம் இந்தியத் துணைக் கண்டத்தில் மிகப் புகழ் வாய்ந்த தர்கா , ஆஜ்மீரிலுள்ள “ஷரி◌ஃப்” தர்காதான். என் பேகத்துடன் அங்கே சென்றிருந்தேன். உள்ளே போனதும் இரு பக்கங்களிலும் பெரிய பெரிய தேக்சாக்கள் . இரண்டுமே கிங் சைஸ். ஒன்று சின்ன கிங் .....மற்றொன்று பெரிய கிங்.

சின்ன தேக்சாவை பேரரசர் அக்பர் (1556-1605) , தர்காவிற்கு அளித்திருக்கிறார், இதில் ஒரே சமயத்தில் 2400 கிலோ உணவு சமைக்கலாம். பெரிய தேக்சா , அக்பரின் மகன் பேரரசர் ஜஹாங்கீர் (1606-1927) அளித்திருக்கிறார். இதில் 4800 கிலோ உணவு சமைக்கலாம். சமையல் கலை அறிந்த பக்தர்கள் மட்டுமே சமைக்கிறார்கள்.

பேரரசர் ஜஹாங்கீர் ஆட்சி செய்தபோது TOMES CORYAT எனும் ஆங்கிலேய யாத்திரிகர் ஆஜ்மீர் வந்திருக்கிறார். பெரிய தேக்சாவில் செய்த கிச்சடியை , 5000 மக்களுக்கு விநியோகம் செய்திருக்கிறார்கள். மகாராஜா , மகாராணி நூர் ஜெஹான் , அந்தப்புர அழகியர் துவக்கி வைக்க , கிச்சடி விநியோகம் சிறப்பாக நடந்ததாம்.

முகலாயர்களுக்குப் பின் மராத்தியரும், ராஜ புத்திரர்களும் ஆட்சி செய்தபோது நம் சர்க்கரைப் பொங்கல் போல “கேசரியா பாத்” (‘பாத்’ என்றால் சோறு/ சாதம் என்று பொருள். உதாரணம் ‘பிசிபேளா பாத்”) என்று ஒரு உணவு தயாரித்து வழங்கப்பட்டிருக்கிறது. நிறைய இனிப்பும், குங்குமப் பூவும் கலந்து உருவாகும் உணவு

فہرست سامان دیگ ہائے خورد کلاں

LIST OF MATERIAL COOKING SMALL & BIG DEGH

S.No. نمبر	MATERIAL विवरण	سامان	خورد (چھوٹی) SMALL DEGH QL.	KG.	کلاں (بڑی) BIG DEGH QL.	KG.
1.	RICE चावल	چاول	6	71	18	66
2.	SUGAR शक्कर	شکر	6	71	18	66
3.	GHEE घी	گھی	-	75	2	24
4.	DRY FRUIT मेवा	میوہ	-	75	1	50
5.	ZAFRAN जाफरान	زعفران	*One Big Packet*		*Two Big Packets*	
6.	HALDI हल्दी	ہلدی	-	14	-	33
7.	FLOUR OF WHEAT आटा	آٹا	-	18	-	30
8.	MAIDA मैदा	میدہ	-	11	-	23
9.	FLOUR OF MASH माश का आटा	ماش کا آٹا	-	18	-	37
10.	KEWRA केवड़ा	کیوڑہ	-	18	-	37
11.	ARQUE GULAB अर्क गुलाब	عرق گلاب	-	18	-	34
12.	WOOD लकड़ी	لکڑی	15	-	37	-
13.	CLOTH (CHADAR) चादर	(لٹھا) چادر	18 Mtr	-	36 Mtr	-
14.	REZA (THAN) रेजा	ریزہ	1 Than	-	2 Than	-
15.	BAN & MUNJ बान व मूंज	بان و مونجھ	-	2.5	-	5
16.	TOKRI (BANS) टोकरी	ٹوکری بانس	2 *Tokri*	-	4 *Tokri*	-
17.	GURH गुड़	گڑھ	-	2	-	4
18.	FLOUR OF MAITHI मेथी का आटा	میتھی کا آٹا	-	1.5	-	3
	ZARE CHAHARAM जरे चहारम	زر چہارم	Rs. 3572 *Cooking Expenses*		Rs. 7390 *Cooking Expenses*	
	DISTRIBUTION CHARGE तकसीम खर्च	اجرت دیگ (خالی/تقسیم) کرانے کی	Rs. 1000		Rs. 2000	

இது. (கேசர் என்றால் குங்குமப் பூ). “ கேசரியா பாத்”தயாரித்து விநியோகிக்கும் முறை இன்றும் தொடர்கிறதாம். ஆனால் நாங்கள் போன போது தேக்சா வில் காணிக்கை பொருட்கள்தான் கண்டோம்.

சில நல்லன அல்லாத செய்திகள்.

இந்தியாவிலேயே பிச்சைக்காரர்கள் அதிகம் உள்ள இடம் ஆஜ்மீர் தர்கா தெருதான்.

சமாதியில் முழங்காலிட்டு தலை வணங்கித் தொழும்போது, நாலா புறமிருந்தும் "பைசா டாலோ" "பைசா டாலோ" எனும் குரல் காதுகளுக்கு இனிமை தரவில்லை.

(தர்காவின் உள்ளே படம் எடுக்க அனுமதி இல்லை.....தகவலும் படங்களும் இணையத்திலிருந்து.)

Singanenjam
singanenjam@gmail.com

***

19. கபாலியும் மலேசியர்களும்

– நிர்மலா ராகவன்

கபாலியும் மலேசியர்களும் . ..



‘இப்போ யாரைக் கேட்டாலும், மலேசியாவிலதான் வேலை பாக்கிறதாச் சொல்றாங்க!’ சமீபத்தில் தமிழ்நாட்டில் நான் கேட்டது இந்த விமரிசனம்.

இங்கு வேலை பார்க்க வருகிறவர்கள் பன்னிரண்டிலிருந்து ஐம்பது பேர் ஒரே இடத்தில் படுத்துக்கொண்டு, குடும்பத்துடன் இருக்க வாய்ப்பில்லாது (இந்தோனீசியர்களைத் தவிரப் பிற ஆண்கள் தம் மனைவியரை அழைத்து வர அனுமதி கிடையாது), விடுமுறை நாட்களில்கூட வெளியூருக்கு எங்காவது போகாது, முடிந்தவரை காசைச் சேமித்துக்கொண்டு தாய்நாடு திரும்பும்போது, தாம் அனுபவித்த இன்னல்கள் பிறருக்குத் தெரியாதவண்ணம் பார்த்துக்கொள்வார்கள். அப்போதுதானே மிதப்பாக நடக்கலாம்!

இதனால், மலேசியாவில் எல்லாத் தமிழர்களும் கோடீசுவரர்கள், பணத்தை வாரி இறைப்பவர்கள் என்றுதான் பலரும் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். உண்மைக்கும் இந்த நம்பிக்கைக்கும் வெகு தூரம் என்பதுதான் சரியான நிலவரம்.

இருபதாம் நூற்றாண்டில் எஸ். ஏ. கணபதி என்ற ஒருவர் கபாலிக்கு முன்னோடி எனலாம். மலாயா தொழிற் சங்க இயக்கத்தின் தேசிய தலைவராக இருந்த அவர், ஒரே வேலையைச் செய்தாலும், ஒரு நாளைக்குச் சீனர்களுக்கு அறுபது காசு, இந்தியர்களுக்கு நாற்பது காசு என்று ஆங்கிலேய முதலாளிகள் நிர்ணயித்ததை எதிர்த்தார் (1940). தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்யத் தூண்டுகோலாக அமைந்தார். பல வேலை மறியல் போராட்டங்கள். இறுதியில் அவர் தூக்கிலிடப்பட்டார். (ஆதாரம்: மலேசிய நண்பன், ஜூலை 31)

நான் ஐம்பது வருடங்களுக்குமுன் கோலாலம்பூருக்கு வந்தேன். அப்போது தமிழர்கள் பெரும்பாலும் தோட்டப்புறம், அதாவது ரப்பர் எஸ்டேட்டுகளில்தான் வேலை செய்துவந்தார்கள். அவர்கள் தமிழ்நாட்டில் திருச்சி, மதுரை முதலிய நகரங்களுக்கு அருகே இருந்த கிராமங்களிலிருந்து அழைத்துவரப்பட்டவர்கள். அனேகருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. பெரிய நகரங்களிலோ தெருக்கூட்டுவது போன்ற கடைநிலை ஊழியங்களைத்தான் செய்துவந்தார்கள்.

`இங்குள்ள இந்தியர்களுக்குள் ஒற்றுமையே இல்லையே!' என்று நான் என் குடும்பத்தினரிடம் பலமுறை சொல்லி அங்கலாய்த்ததுண்டு. இதனாலேயே இவர்களைக் கீழ்நிலையிலேயே வைத்திருப்பது பிறருக்குச் சாத்தியமாயிற்று.

கல்வி கற்றால் உயரலாம் என்று சிலருக்குப் புரிந்து போயிற்று. ஆனால், அதுவும் கடினமாகத்தான் இருந்தது. ஏழ்மை நிலையில் புத்தகம், சீருடை என்று வாங்கக் காசில்லை.

நான் கற்பித்த முதல் பள்ளியில், சீன, ஆங்கில-சீன ஆசிரியைகள் ஒரு தமிழ்ப் பையனைப்பற்றி ஆசிரியைகளின் பொது அறையில் ஓயாது குற்றம் சொல்லிக் கொண்டிருப்பார்கள். அவன் செல்வந்தர் வீட்டுப் பையன். அதனால், இவர்கள் மட்டம் தட்டிப்பேசுவதை அவனால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. முடிந்தவரை மரியாதையுடன் எதிர்த்திருப்பான்.

ஒரு முறை, `நீ அவனைப்பற்றி எதுவுமே சொல்வதில்லையே!' என்று அதிசயப்பட்டு என்னிடம் கேட்டபோது, நான் யோசிக்காது, "Indian boys are no problem in my class!" (இந்திய மாணவர்கள் என் வகுப்பில் பிரச்சினைகள் அளிப்பதே கிடையாது!) என்றுவிட்டேன். அவர்கள் முகம் அவமானத்தால் சுருங்கியது. அப்போதுதான் RACISM என்ற வார்த்தைக்கே அர்த்தம் புரிந்தது எனக்கு.

(சீனப்பையன்கள் அதைவிட அதிகமாக, மரியாதைகெட்டதனமாக நடக்கலாம். ஆனால், `இந்தச் சீனர்களே இப்படித்தான்!' என்று அவர்களை யாரும் எதுவும் சொல்ல மாட்டார்கள். மாட்டிக்கொள்வதெல்லாம் சாதுவான தமிழர்கள்தாம். அதுவும், அழகாகவோ, திறமைசாலியாகவோ இருந்தால் போயிற்று!).

இன்னொரு பள்ளியில், ஒரு வகுப்பறையில் ஆசிரியை கணக்குப்பாடம் நடத்திக்கொண்டிருக்க, தமிழ் மாணவிகள் ஆறு பேர் கும்பலாக உட்கார்ந்துகொண்டு, தம்பாட்டில் பேசிச் சிரித்துக் கொண்டிருந்தார்கள். நான் அவர்களைத் தனியே அழைத்துக் கேட்டபோது, `உங்களுக்கு இதெல்லாம் புரியாது. என்ன வேண்டுமானாலும் பண்ணிக்கொள்ளுங்கள்!' என்று ஆசிரியை சொல்லிவிட்டதாக அறிந்தேன். அதிர்ந்தேன்.

நான் தினமும் மிகக் கவனமாக அலங்கரித்துக்கொண்டு போவேன். உதட்டுச்சாயம், எனக்காகப் பிரத்தியேகமாகச் செய்யப்பட்ட காலணி (இரண்டு, மூன்று நிறங்களில்கூட இருக்கும்), வளையல், கைக்கடிகாரப்பட்டை எல்லாமே என் புடவை நிறத்தில்தான் இருக்கும். எனக்கு அலங்காரத்தில் பிரியம் என்பதால் மட்டுமில்லை, `உங்களாலும் உயர முடியும். ஏழ்மையைக் கண்டு அஞ்சாதீர்கள்! அது நிலையானதில்லை!' என்று மாணவிகளுக்கு நான் மறைமுகமாக அளிக்க விரும்பிய போதனை அது.

தொலைக்காட்சிக்கு என்னைப் பேச அழைக்கும்போது, `ஒரு நிபந்தனை. ஒரு நிமிடத்துக்கு ஒரு புடவை மாற்றுவேன்,' என்றுவிடுவேன். அது வேடிக்கை என்று நினைத்துச் சிரிப்பார்கள் இயக்குநர்கள். ஒரு நிகழ்ச்சிக்குப்பின், நான் வேறு ஒரு ஊருக்குப் போயிருந்தபோது, `உங்களை டி.வியில பாத்தேன். Very nice saris!' என்று கிறங்கினார், வசதி குறைந்த நிலையிலிருந்த ஒரு ஆண்!

கபாலி படத்தில் ரஜினி விடாப்பிடியாகக் கோட்டு அணிந்து வருவதும் இதைப்போல்தான் என்றே தோன்றுகிறது.

படத்தின் இறுதியில், கல்லூரியில் படிக்கும் பெண்கள் கபாலியிடம் முறையிடுவதுபோல் வருகிறதே, அதுவும் இன்றைய நடப்பைக் காட்டுகிறது.

ஒரு சில இந்திய வம்சாவளியினர் (ஆரம்பத்தில் வந்தவர்களில் 92% தமிழர்கள்தாம்) நன்றாகப் படித்துத் தேர்ச்சி பெற்றாலும், கல்லூரிகளில் இடம் கிடைக்காது, உபகாரச் சம்பளம் கிடைப்பதும் துர்லபம்தான் என்ற நிலை. எப்படியோ படித்துத் தேர்ச்சி பெற்றாலும், அரசாங்க வேலை கிடைப்பது கடினம். பிற இடங்களில் அனுமதிக்கப்பட்டதைவிடப் பாதி சம்பளத்திற்கு வேலை செய்யவென ஆப்பிரிக்கா, நேபால், பங்களாதேஷ், மியன்மார், இந்தோனீசியா, வியட்நாம், தாய்லாந்து என்று உலகின் பல பாகங்களிலிருந்தும் ஆட்கள்தாம் வந்து குவிகிறார்களே!

இதெல்லாம் புரியாது, `இவ்வளவு பணக்கார நாட்டில் நாம் ஏன் ஏழைகளாக இருக்கவேண்டும்?' என்ற ஆத்திரத்துடன் சிலர் குண்டர் கும்பலில் சேருகிறார்கள். இல்லை, சேர்க்கப்படுகிறார்கள். இதனால் பணத்துடன், அந்தஸ்தும் கிடைக்கிறது. இவர்கள் பிறரைப் பார்த்துப் பயந்தது போக, பிறர் இவர்களைப் பார்த்துப் பயப்படுகிறார்களே, போதாதா?

சட்ட விரோதமான செயல்களால் பொருளீட்டுபவர்களில் பலர் தம் பழைய நிலையை மறப்பதில்லை. வசதிகுறைந்த இந்தியர்களுக்கும், விதவைகளுக்கும் பலவாறாக பொருளுதவி செய்கிறார்கள். இப்படி ஒருவர் அண்மையில் சுட்டுக் கொல்லப்பட்ட பின்னர், அவருடைய இறுதி ஊர்வலத்தில் பலர் ஆழ்ந்த வருத்தத்துடன் கலந்துகொண்டனர். அவருடைய படத்தைத் தாங்கிய பெரிய, பெரிய போஸ்டர்கள் எங்கும் காணப்பட்டது என்கிறது ஒரு செய்தி.

திரைப்படம் என்றால் சும்மா பொழுதுபோக்கிற்குத்தான் என்று தியேட்டருக்குப் போகிறவர்களுக்கு வேண்டுமானால் கபாலி ஏமாற்றத்தை அளித்திருக்கலாம். ஆனால் மறைக்கப்பட்டிருந்த பல உண்மைகளை (ஊழல்களை?) கபாலி வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது -- படத்தில் வரும் பாத்திரங்கள் எவரையும் குறிப்பன அல்ல என்ற முன்னுரையுடன்!

குறிப்பு: இக்கட்டுரை சில மாற்றங்களுடன் வல்லமை இதழில் வெளிவந்தது.

எழுத்தாளர்
சமூக ஆர்வலர்
மலேசியா
nirurag@gmail.com

***

20. ஒற்றுமை காண்போம் ..... அதில் வெற்றியும் காண்போம் .....

– தேமொழி

அடிமையாக வாழ்ந்த காலம் மறந்து போனதா?
அஞ்சி அஞ்சிக் கிடந்த காலம் மறந்து போனதா?
கொடுமை தீர்ந்து வாழ வந்தும் ஒருமை இல்லையே -ஒரு
குலத்தைப் போல வாழ்வதென்ற பொறுமையில்லையே!
மாநிலங்கள்தோறும் என்ன பிரிவினை?
நாம் மறந்துவிட்டோம் அண்ணல் காந்தி ஒருவனை
ஒற்றுமை காண்போம் ..... அதில் வெற்றியும் காண்போம் .....

ஒருவரது நாட்டுப்பற்று உணர்வு எழுச்சி பெறும் விதமாக அமைந்த இந்தப் பாடலின் வரிகளை 1970 ஆண்டு சுதந்திரதினத்திற்கு வெளிவந்த "ராமன் எத்தனை ராமனடி" என்ற படத்திற்காக கண்ணதாசன் எழுதியிருந்தார். இந்தியா தனது 24 ஆவது சுதந்திரதின நாளைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் பொழுது, அதுவும், தொடர்ந்து மறு ஆண்டே கால்நூற்றாண்டு என்ற பெருமைமிகு எல்லையை அடைவதைக் கொண்டாட இருக்கும்பொழுது எழுதப்பட்ட ஒரு பாடலின் கருத்து "ஒற்றுமை காண்போம் ..... அதில் வெற்றியும் காண்போம் .....".

ஏன் அந்நாளில் இந்திய நாட்டில் இந்த ஒற்றுமை குறைந்த நிலை என்பதை அக்கால இந்திய அரசியலை திரும்பிப் பார்த்தால் தெரியும், அதனை அப்பாடலின் வரிகளே விளக்கும்.

திரைப்படத்தில் பள்ளி மாணவர்கள் நடத்தும் ஒரு கலைநிகழ்ச்சியில் அவர்கள் சிறைக்கைதிகளுக்கு நடித்துக்காட்டுவதாக இப்பாடலை இடைச்செருகல் செய்து பொருத்தமாக அமைத்திருந்தார்கள். பாடலின் வரிகள் கீழே:

தமிழக மக்கள்:
சேர சோழ பாண்டிய மன்னர் ஆண்ட தமிழ்நாடு
ஆண்ட தமிழ்நாடு
திராவிடத்தை வேறு யாரும் ஆள்வதென்பதேது
ஆள்வதென்பதேது
தேனைப் போன்ற தமிழிருக்க வேறு பாஷை எதற்கு
வேறு பாஷை எதற்கு
தேசீயம் என்ற பெயரில் ஏய்ப்பதுங்கள் கணக்கு
தேசீயம் என்ற பெயரில் ஏய்ப்பதுங்கள் கணக்கு
தமிழ்நாடு தமிழருக்கே ..... தமிழ்நாடு தமிழருக்கே .....
தமிழ்நாடு தமிழருக்கே .....

ஆந்திர மக்கள்:
ஆந்திரதேசம் ஆந்திரருக்கே .....
கிருஷ்ணதேவருடன் ராமராயர் எமை
ஆண்ட தேசம் இது ராமையா
ராமையா ..... ராமையா .....
பரததேசம் எனும் பேரில் நீங்கள் அதைச் சேர்த்து வைத்தது என்ன தீமையா .....
தீமையா ..... தீமையா .....

தெலுங்கானா மக்கள்:
ஆந்திரதேசமும் நாங்களும் ஒன்றாய் வாழ்வது முறைதானா
வாழ்வது முறைதானோ
அடிப்போம் பறிப்போம் பிரிப்போம் எமக்கு வேண்டும் தெலுங்கானா
வேண்டும் தெலுங்கானா .....

ஆந்திரதேசம் ஆந்திரருக்கே ..... ஆந்திரதேசம் ஆந்திரருக்கே .....

மகாராஷ்டிரா மக்கள்:
மகாராஷ்டிரம் நமதே .....
சிவாஜி ஆண்ட இம்மராட்டி தேசத்தில் விரோதி வரலாமா?
விரோதி வரலாமா?

விடாமல் துரத்து போராட்டம் நடத்து எழுவோம் ஒரு சேனா
எழுவோம் ஒரு சேனா
கட்டுப்பட்டுச் சுமந்தது போதும்
போதும்
பட்டுப்பட்டுப் பயந்தது போதும்
போதும்
மாரைத்தட்டு வீரம் கொட்டு வாழ்க போராட்டம் .....

பஞ்சாப் மக்கள்:
பஞ்சாப் நமதே .....
பஞ்ச நதிகள் ஒன்றாக ஓடும் பாஞ்சால தேசமடி
பகைவரை எதிர்த்து பட்டாளம் சேர அஞ்சாத தேசமடி
சண்டிகர் என்னும் பொதுநகர் எங்கள் தலைநகர் ஆகுமடி
தரமாட்டோம் அதைவிடமாட்டோம் எனத் துணிந்து சபதம் செய்யடி

ஹரியானா மக்கள்:
ஹரியும் சிவனும் எனப் பிரிந்து பிரிந்து நாம் வாழ்வோம் ஹரியானா
அந்தத் தலைநகரம் எங்கள் தலைநகரம் பஞ்சாப் பெறலாமா?

பிற மாநில மக்களும் தொடர்வர் என்ற கணிப்பு:
வங்காளம் நமதே .....
கர்நாடகம் நமதே .....
கேரளம் நமதே .....
சுதந்திர காஷ்மீர் ஜிந்தாபாத் .....

காந்தி:
இந்திய தேசத்து செல்வங்களே இணையாதிருக்கும் உள்ளங்களே
சிந்திய ரத்தம் போதாதோ? தேசம் நாசம் ஆகாதோ?
அங்கே தெலுங்கானா ..... அப்பப்பா இங்கே ஹரியானா .....
நடுவில் பலசேனா ..... இங்கே நடப்பது சரிதானா .....

நேரு:
அடிமையாக வாழ்ந்த காலம் மறந்து போனதா?
அஞ்சி அஞ்சிக் கிடந்த காலம் மறந்து போனதா?
கொடுமை தீர்ந்து வாழ வந்தும் ஒருமை இல்லையே -ஒரு
குலத்தைப் போல வாழ்வதென்ற பொறுமையில்லையே!
மாநிலங்கள்தோறும் என்ன பிரிவினை?
நாம் மறந்துவிட்டோம் அண்ணல் காந்தி ஒருவனை
ஒற்றுமை காண்போம் ..... அதில் வெற்றியும் காண்போம் .....
ஒற்றுமை காண்போம் ..... அதில் வெற்றியும் காண்போம் .....

பாரதி:
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வு
வந்தே மாதரம் என்போம் .....
நாம் பாரதத்தாயை வணங்குதும் என்போம் .....
வந்தே மாதரம் என்போம் .....
நாம் பாரதத்தாயை வணங்குதும் என்போம் .....
வந்தே மாதரம் என்போம் .....
நாம் பாரதத்தாயை வணங்குதும் என்போம் .....
- **கண்ணதாசன்**
(ராமன் எத்தனை ராமனடி திரைப்படம்; 1970 சுதந்திர தின வெளியீடு)
காணொளி: https://www.youtube.com/watch?v=1kF8D5HWKPg

இந்தியா சுதந்திரம் பெற்று 20 ஆண்டுகள் கழித்தும் இருந்த நிலைமை இது. இதன் துவக்கம் இந்தியாவை மொழி அடிப்படையில் மாநிலங்களாகப் பிரித்த காரணம் என்று கருதுவோர் உளர். ஆனால், மொழி அடிப்படையில் மாநிலங்களைப் பிரிப்பது அரசு நிர்வாகத்தைத் திறம்படக் கையாளும் ஒரு முறை. ஒரு குறிப்பிட்ட அடிப்படைப் பண்புகளைக் கொண்டவர்களை குழுக்களாக பிரித்துக் கொண்டால் தகவல் தொடர்பு எளிமையாக அமையும். நிர்வாகம் சீராக அமையும், மக்களுக்குச் சிறந்த சேவையை அளிக்க இயலும். வட்டார மக்களின் மொழியில் நீதிமன்றங்கள், அரசு நடவடிக்கைகள் யாவும் அமைய வேண்டும் என்பதும் இதில் அடங்கும் என்பதை இன்றும் அரசு புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை.

தமிழகம்:
ஆங்கிலேயர் ஆட்சியில் ஒருங்கிணைந்த சென்னை மாகாணமாகத் தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய திராவிட மொழிகள் பேசிய மக்களைக் கொண்ட பகுதிகள் முறையே இக்கால தமிழகம், கேரளம், கர்நாடகம் மற்றும் (தற்பொழுது பிரிந்துவிட்ட அக்கால) ஆந்திரா ஆகிய மாநிலங்களாயின. ஒருங்கிணைந்த சென்னை மாகாணத்தை பாகிஸ்தான் போல, "திராவிடநாடு" எனத் தனிநாடாகப் பிரிக்க வேண்டும் என்ற தென்னக அரசியல் கட்சியான திராவிடக் கழகத்தின் கோரிக்கை நிறைவேறவில்லை. விடுதலை பெற்ற 15 ஆண்டுகளுக்குப் பிறகு, தேசீயம் என்ற கொள்கையாக 1965 இல் இந்தியாவின் அலுவலக மற்றும் ஆட்சி மொழியாக இந்தி அறிவிக்கப்பட்டது. இந்த நிகழ்வினால் நாட்டின் விடுதலைக்கு முன்னர் 1930 களில் தமிழகத்தில் நடந்த ஒரு இந்தி எதிர்ப்புப் போராட்டம் போலவே மீண்டும் ஓர் இந்தி எதிர்ப்புப் போராட்டமும் துவங்கியது.

முன்னிருந்த திராவிடம் என்ற பழங் கருத்து, மொழிவாரியாக 1953 இல் மாநிலங்கள் பிரிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்திற்குப் பிறகு பொருத்தமற்றுப் போயிருந்தது.

எனவே, திராவிட நாடு திராவிடர்களுக்கே என்ற கோரிக்கையை கைவிட்டு "தமிழ்நாடு தமிழர்களுக்கே" என்று தமிழகத்தின் திராவிட முன்னேற்றக் கழகம் தனது கொள்கையை மாற்றியமைத்துக் கொண்டது. தமிழ்நாடு தமிழருக்கே, தேசீயம் என்ற பெயரில் நடுவண் அரசு ஏய்க்கிறது என்று போராட்டம் துவங்கியது. இந்திய நடுவண் அரசு 16 வது திருத்தச் சட்டமாக "பிரிவினைவாத தடைச்சட்டம்" என்ற சட்டத்தை இயற்றி, இந்திய நாடாளுமன்றத்தின் முன்வைத்து, சட்டத்தை நிறைவேற்றி பிரிவினைவாத கருத்துக்களை செயலற்றுப் போகச் செய்தது. சட்டத்திற்குப் புறம்பாக நடவடிக்கை எடுக்கமுடியாமல் மொழியையும் கலாச்சாரத்தையும் காப்பது என்பதை தங்களது கொள்கையாக அறிவித்து, மாநில சுயாட்சி கொள்கை எனப் போராட்டத்தை மாற்றிக் கொண்டனர் அன்றைய தமிழக அரசியல்வாதிகள்.

இக்காலகட்டத்தில் இருந்த இந்த நிலைமையை கண்ணதாசன் தனது பாடல் வரிகளில் இவ்வாறு விளக்கினார்...

சேர சோழ பாண்டிய மன்னர் ஆண்ட தமிழ்நாடு
திராவிடத்தை வேறு யாரும் ஆள்வதென்பதேது
தேனைப் போன்ற தமிழிருக்க வேறு பாஷை எதற்கு
தேசீயம் என்ற பெயரில் ஏய்ப்பதுங்கள் கணக்கு
தமிழ்நாடு தமிழருக்கே ..... தமிழ்நாடு தமிழருக்கே .....

இது அக்கால தமிழகத்தின் நிலையாக இருந்தது. இருப்பினும், காலம் மாறினாலும் சுதந்திரம் பெற்று இப்பொழுது அரைநூற்றாண்டுக்கு மேல் கடந்துவிட்டாலும் "தமிழ்நாடு தமிழருக்கே ....." என்ற பழைய போராட்டம் இக்காலத்தில் "தமிழ்த்தேசியம்" என்ற பெயரில் மீண்டும் முன்னெடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இன்றைய போராட்டம் தமிழ்நாடு தமிழர்களால் மட்டுமே ஆளப்பட வேண்டும். வேற்று மாநிலத்தை பூர்வீகமாகக் கொண்டவர்கள், தமிழகத்தில் வாழ்ந்தாலும் வேற்று மொழியைத் தாய்மொழியாக பேசிக் கொண்டிருப்பவர்கள் அரசியலில் இருந்து வெளியேற வேண்டும் என்று புதிய திசையில் திருப்பப்பட்டுள்ளது. அன்றைய நாளில் தமிழ் மொழிக்குக் காவலர்களாக தங்களை அடையாளப்படுத்திக் கொண்டவர்களில் பெரும்பாலோரை "வந்தேறிகள்" என அடையாளப்படுத்தி அவர்கள் கையில் இருந்து ஆட்சியைக் கைப்பற்ற முயலும் ஒரு போராட்டமாக இந்நாளில் மாறிவிட்டிருக்கிறது. இரண்டு காலகட்டத்தின் போராட்டங்களும் வெவ்வேறு வகையில் அமைந்து "தமிழர் நலனுக்காக" எனக் கூறப்படும் "உரிமைப் போராட்டங்கள்" போன்ற தோற்றத்தைத் தருகின்றன. தமிழ்த்தேசியப் போராட்டத்தைப் பற்றிய பல்வேறு கருத்துகள் நிலவினாலும் திராவிடத் தமிழ் தேசியராக அடையாளம் காணப்படும் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் அவர்கள் கீழ்காணும் வகையில் "தமிழ்த்தேசியம்" என்ன என்ற அவரது கோணத்தை விளக்குவது கருத்தில் கொள்ளத் தக்கது.

“ஒரு தேசிய இனத்தின் அடிப்படையாக இரண்டு செய்திகளைப் பார்க்க முடியும். தன்னுடைய அடையாளத்திற்கான போராட்டம். இன்னொன்று சமத்துவத்திற்கான ஜனநாயகப் போராட்டம். பொதுவாக தேசிய இனப்போராட்டம் என்பது வர்க்கப் போராட்டம் அல்ல. அது ஒரு ஜனநாயகப் போராட்டம்தான். அந்த அடிப்படையில் தமிழுக்கான உரிமைகள் மறுக்கப்பட்டிருக்கின்றன. தமிழ், தமிழர்கள் அடையாள அடிப்படையிலும், ஜனநாயக அடிப்படைகளிலும் நம் நாட்டில் உருவாக வேண்டிய தேசியம் தமிழ்த் தேசியம்தான்.”

- பேராசிரியர் சுப. வீரபாண்டியன்

ஆந்திரம்:

1953இல் இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு அவர்களால் மொழிவாரி மாநிலங்கள் ஆணையம் ஏற்படுத்தப்பட்டு, இந்தியாவை மொழி அடிப்படையில் மாநிலங்களாகப் பிரிக்க திட்டமிடப்பட்ட பொழுது, ஹைதராபாத் நிஜாம் ஆட்சியின் கீழிருந்த 9 தெலுங்கு மொழி பேசப்படும் மாவட்டங்களும், ஒருங்கிணைந்த சென்னை மாகாணத்தின் கீழிருந்த 12 தெலுங்கு பேசும் மாவட்டங்களும், ஒன்றியப் பகுதியாக (அல்லது யூனியன் பிரதேசம்) பிரெஞ்சு ஆட்சியின் கீழிருந்த ஏனாம் பகுதியுடன் இணைக்கப்பட்டு 22 மாவட்டங்களில் தெலுங்கு பேசும் மக்களை உள்ளடக்கிய ஆந்திரப்பிரதேசம் என்ற மாநிலம் அமைக்கப்பட்டது. பொட்டி ஸ்ரீராமுலு அவர்கள் ஆந்திரம் என்ற மொழி அடிப்படையிலான மாநிலம் அமைவதில் பெறும் பங்கு வகித்தார். ஆயினும், 1950 களில் இருந்தே நிஜாம் ஆட்சியின் கீழிருந்த மாவட்டங்கள், தெலுங்கு மொழி உருவானது தங்கள் பகுதி என்றும், தெலுங்கானா என்ற தங்கள் பகுதி, ஒரே மொழி பேசுபவர்கள் என்ற அடிப்படையில் ஆந்திராவுடன் இணைக்கப்படக்கூடாது எனக் கருதினர். இரு பிரிவுகளுக்கும் சமமாக அதிகாரம் பகிர்ந்து கொடுக்கும் உடன்படிக்கை போடப்பட்டு தற்காலிகமாக அமைதி உருவாக்கப்பட்டது. இந்த உடன்படிக்கை 1969 இல் காலாவதியாகும் நிலையில் அதை நீட்டிக்கக் கோரி தெலுங்கானா மக்கள் இயக்கம் மீண்டும் உயிர்பெற்று போராட்டங்கள் வெடித்தது. ஒஸ்மானியா பல்கலைக்கழக மாணவர்களும் போராட்டத்தில் பங்கேற்று 360 மாணவர்கள் உட்படப் பலர் உயிரிழந்தனர்.

இதனை;

ஆந்திர மக்கள்:
ஆந்திரதேசம் ஆந்திரருக்கே .....
கிருஷ்ணதேவருடன் ராமராயர் எமை
ஆண்ட தேசம் இது ராமையா
ராமையா ..... ராமையா .....
பரததேசம் எனும் பேரில் நீங்கள் அதைச் சேர்த்து வைத்தது என்ன தீமையா .....

தீமையா ….. தீமையா …..

தெலுங்கானா மக்கள்:
ஆந்திரதேசமும் நாங்களும் ஒன்றாய் வாழ்வது முறைதானா
வாழ்வது முறைதானோ
அடிப்போம் பறிப்போம் பிரிப்போம் எமக்கு வேண்டும் தெலுங்கானா
வேண்டும் தெலுங்கானா …..

என்று கண்ணதாசன் இப்போராட்டத்தை எழுதினார்.

இதனைத் தொடர்ந்து ஆந்திர ஆட்சியைக் கைப்பற்ற விரும்புபவர்கள் தனி தெலுங்கான உருவாக்க ஆதரவு தருவாகக் கூறி மக்களைக் கவர முற்படுவது வழக்கமாகிப் போனது. இறுதியாக இரண்டாண்டுகளுக்கு முன்னர் (ஜூன் 2, 2014) ஹைதராபாத் நிஜாம் ஆட்சியின் கீழிருந்த பகுதியைக் கொண்ட தெலுங்கு மொழி பேசும் மக்கள் வாழும் பகுதி இந்தியாவின் 29-வது மாநிலமாக தெலுங்கானா என்ற மாநிலமாகப் பிரிக்கப்பட்டு தனியே செயல் படத் தொடங்கியது.

மகாராஷ்டிரம்:

பால் தாக்கரேவால் 1966 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது சிவசேனா என்ற அரசியல் கட்சி. அந்நிய ஆக்கிரமிப்பை ஒழித்துக் கட்டிய மராட்டிய மன்னன் சத்திரபதி சிவாஜியின் சேனை என்ற பொருளில் சிவசேனா என அழைக்கப்பட்டது. 'மகாராஷ்டிரா மராட்டியர்களுக்கே' என்பது 1960 களில் இப்போராட்டத்தின் முழக்கமாக இருந்தது. தென்னிந்தியர்களுக்கு எதிராக எழுந்த பல போராட்டங்களுக்கும் இது காரணமாக அமைந்தது.

மகாராஷ்டிரம் நமதே …..
சிவாஜி ஆண்ட இம்மராட்டி தேசத்தில் விரோதி வரலாமா?
விடாமல் துரத்து போராட்டம் நடத்து எழுவோம் ஒரு சேனா
கட்டுப்பட்டுச் சுமந்தது போதும்
பட்டுப்பட்டுப் பயந்தது போதும்
மாரைத்தட்டு வீரம் கொட்டு வாழ்க போராட்டம் …..

என்னும் அவர்களது முழக்கத்தை தனது பாடல்வரிகள் மூலம் காட்டினார் கண்ணதாசன்.

சிவசேனாவின் அதிகாரப்பூர்வ இதழான சாம்னாவின் 2008 ஆண்டு தலையங்கம் ஒன்று அமிதாப் பச்சன் போன்ற பாலிவுட் நடிகர்கள், பிறமாநிலங்களில் இருந்து மும்பை வந்து குடியேறி தங்கள் வாழ்வை வளமாக்கிக் கொண்டவர்கள். இவர்கள் மராத்தியர்களுக்காகவும், மகாராஷ்டிரத்தின் நலனுக்காகவும் அக்கறை செலுத்துவது இல்லை என்று குற்றம் சாட்டியது. இக்குற்றச்சாட்டு பரபரப்பை ஏற்படுத்தியதால் பலரது கவனத்தைக் கவர்ந்தது.

பஞ்சாப்:
பஞ்சாபி மொழி பேசும் மக்கள் வாழும் மாநிலம் பஞ்சாப். 1966 ஆம் ஆண்டில் ஹரியான்வி மொழியினர் அதிகமுள்ள பஞ்சாப் மாநிலத்தின் கிழக்குப் பகுதி ஹரியானா எனப் பிரிக்கப்பட்டது. இந்த இரு மாநிலங்களுக்கும் இடையே சண்டிகர் நகரம் அமைந்திருக்கிறது. இரு மாநிலங்களுமே சண்டிகர் நகரத்திற்கு உரிமை கொண்டாடி போராட்டத்தில் இறங்கின.

இதனை கண்ணதாசனின் கீழ்வரும் வரிகள் காட்சிப் படுத்துகிறது ....

பஞ்சாப் மக்கள்:
பஞ்சாப் நமதே .....
பஞ்ச நதிகள் ஒன்றாக ஓடும் பாஞ்சால தேசமடி
பகைவரை எதிர்த்து பட்டாளம் சேர அஞ்சாத தேசமடி
சண்டிகர் என்னும் பொதுநகர் எங்கள் தலைநகர் ஆகுமடி
தரமாட்டோம் அதைவிடமாட்டோம் எனத் துணிந்து சபதம் செய்யடி

ஹரியானா மக்கள்:
ஹரியும் சிவனும் எனப் பிரிந்து பிரிந்து நாம் வாழ்வோம் ஹரியானா
அந்தத் தலைநகரம் எங்கள் தலைநகரம் பஞ்சாப் பெறலாமா?

இரண்டு இந்திய மாநிலங்களுக்கும் தலைநகராக விளங்கும் சண்டிகர் நகரின் உரிமைகோரி இருமாநிலங்களும் கிளப்பிய சர்ச்சையின் காரணமாக, இந்நகரம் இந்திய அரசின் தனி ஒன்றியப்பகுதியாக அறிவிக்கப்பட்டது. இப்பொழுது இந்நகரம் எந்த மாநிலத்தையும் சேர்ந்ததல்ல.

காஷ்மீர்:
இந்தியாவின் பகுதியாக காஷ்மீரை இணைத்த துவக்கக் காலத்தில் இருந்தே பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் காஷ்மீரின் மீதான உரிமைப் போராட்டமும் துவங்கியது. 1965ஆம் ஆண்டில் நிகழ்ந்த இந்திய-பாகிஸ்தான் போர் இந்த உரிமைப் பிரச்சனையின் அடிப்படையில் நிகழ்ந்த இரண்டாவது இந்திய-பாகிஸ்தான் போர் என்பது குறிப்பிடத் தக்கது. காஷ்மீர் தனிநாடாக வேண்டும் என காஷ்மீர் மக்களில் சிலரும் தனிப்பட்ட கருத்து கொண்டிருந்தனர். "சுதந்திர காஷ்மீர் ஜிந்தாபாத்" என்ற அவர்களின் முழக்கத்தை கண்ணதாசனின் வரிகளும் காட்டுகின்றன. ஆனால் இன்றுவரை காஷ்மீரில் அமைதி நிலவவில்லை.

1965 -1969 வரை நாட்டின் ஒற்றுமையைக் கேள்விக்குறியாக்கிய நிகழ்வுகளின் தாக்கத்தில் கண்ணதாசன் இப்பாடலை எழுதினார். அப்பாடல் எழுதப்பட்டு அரை நூற்றாண்டை நெருங்கிக் கொண்டிருக்கும் வேளையிலும் இந்திய நாட்டில் உரிமைப் பிரச்சனைகள், பிரிவினைவாத முழக்கங்கள் தொடர்கின்றன.

தன்னைப்போல ஒரு இந்தியராக இருந்தாலும் வெளிமாநிலத்தின் மக்களிடம் நேசக்கரம் கொடுக்கத் தயங்கும் மனநிலை மக்களிடம் காணப்படுகிறது. சாதி, மத, மொழி சச்சரவுகளுக்கோ குறைவுமில்லை. கண்ணதாசன் பாடலில் இறந்துபோன தலைவர்களான காந்தி, நேரு, பாரதி ஆகியோருக்கு உயிர் கொடுத்து அவர்கள் நாட்டு மக்களுக்கு அறிவுரை கூறுவது போல அமைக்கப்பட்டுள்ளது.

அனைவரும் ஒரே மொழி பேசினால் ஒற்றுமை வளரும் என்று வாதம் செய்து வருபவர் இங்குக் கவனிக்க வேண்டியது ...
ஒரே தெலுங்கு மொழி பேசிய மக்களால் ஏன் ஒற்றுமையைக் கடைப்பிடிக்க முடியவில்லை.
எதனால் இறுதியில் மாநிலங்கள் ஆந்திரா தெலுங்கானா எனப் பிரிந்து போவதைத் தவிர வேறு வழியில்லாமல் போனது?

மகாராஷ்டிர மாநிலத்தின் ஆட்சி மொழியான மராட்டியுடன், அங்கு இந்தி, குஜராத்தி, பார்சி மொழி, கன்னடம், உருது மற்றும் கொங்கணி ஆகிய மொழிகளும் மக்களால் பேசப்படுகிறது. பள்ளிகளில் மராட்டிய மொழி, ஆங்கில மொழியுடன் இந்தி மொழியும் கற்பிக்கப்படுகிறது, உருதும் கற்பிக்கப்படுகிறது. பல மொழி மக்கள் வாழ்ந்தும், பலமொழிகள் பள்ளிகளில் கற்பிக்கப்பட்டும் அவர்கள் தேசிய நீரோட்டத்தில் கலந்ததாகவும் தெரியவில்லை. பிற மாநில மக்கள் குறித்த கசப்புணர்வு சிவசேனாவின் நடவடிக்கைகள் மூலம் தெரிகிறது.

எல்லோரும் இந்தி கற்பதால், அல்லது எல்லோரும் ஒரே மொழி பேசுவதால் இந்தியாவில் ஒற்றுமை வருமா?
அல்லது பிறர் உரிமையை மதித்து அனைவரும் இந்தியர் என்று அவர்கள் அடிப்படை உரிமைகளை மதிப்பதன் மூலம் ஒற்றுமை வருமா?
இவை சிந்திக்கப்பட வேண்டிய கேள்விகள்.

ஒற்றுமை காண்போம் ..... அதில் வெற்றியும் காண்போம் .....

ஜெய்ஹிந்த்

தேமொழி
themozhi@yahoo.com

***

21. ஆகஸ்டு பதினைந்தே வருக வருக!

– ருத்ரா இ.பரமசிவன்

காலண்டர் தாள் சரசரப்புகளில்
ராணுவ பூட்ஸ்களின்
மரியாதை ஒலிகள் கேட்கின்றன.
அலங்கார வண்டிகள்
மாநிலம் மாநிலமாய்
பொம்மைக்காட்சிகளில் உயிர் பூசி
மிதந்து வருகின்றன.
ஆனந்த வெள்ளம் திரள்கிறது.
வந்தேமாதர முழக்கத்தின்
புடைப்பு பரிமாணம்
நம் நெஞ்சங்களில்
விம்மிப்பெருகுகின்றது.
அது முக்காலங்களின்
வரலாற்றுக்கனத்தின் பரிமாணம்.
நேற்று இன்று நாளை
என்று
எப்படிப்பார்த்தாலும்
வேர்வை கண்ணீர் ரத்தம்
என மூன்று அதிர்வலைகளில்
கனல் மூட்டும் பரிமாணம்.
சாதி சமய வர்ணங்கள் அற்ற
சமூக நீதியின் ஜனநாயகப்பூங்கா
நோக்கி
நடை போட வந்திருக்கும்
இன்றைய "ஆகஸ்டு பதினைந்தே"
உன் பின்னே
சுரண்டல் அநியாயங்களால்
நியாயக் கபாலங்களின்
நொறுங்கும் ஒலி கேட்கிறதா?

மும்மலம் அறுக்கும்
முக்தி தத்துவம் இங்கே உண்டு.
வயிற்றுக்காக
மலம் அள்ளும் மனிதர்களும்
இங்கு தான் உண்டு.
இவர்கள் பூசிய வர்ணங்களுக்கும்
அப்பாற்பட்ட இவ்வர்ணங்களுக்கு
ஓ! மூவர்ணமே
உன்னிடம் எதேனும் வர்ணம் உண்டா?

கீழ்சாதியும் மேல்சாதியும்
கலந்து விடக்கூடாதே என்று
கௌரவக்கொலை புரியும் இந்த
கௌரவர்கள் மீது
வஜ்ராயுதம் வீசும் கிருஷ்ணர்கள்
ஏன் உங்கள்
(மகா)பாரதத்தில் இல்லாமல்
போனார்கள்?
இதை எல்லாம்
ஆடாமல் அசையாமல் நின்று
பார்த்துக்கொண்டிருக்கும்
"மரப்பாச்சி" ஜனநாயகமா
இந்த ஜனநாயகம்?

"ஆகஸ்டு பதினைந்தே!"
வழக்கமாய் கிழித்துப்போடும்
வெறும் காலண்டர் தாள் அல்ல நீ!
இன்று
புதுத்தீயில் புதுப்பித்துப் பதிப்பித்து
புடம்போட்டு வந்த
புதிய ஆகஸ்டு பதினைந்து நீ!
புதிய அர்த்தங்களோடு
காலண்டர் தாள்கள்

வரும்
அக்டோபர்களையும் நவம்பர்களையும்
ஒரு ஊமைக்காற்றின் அசைவுகளில்
அசைபோடும் உள்ளொலிகளையும்
உற்றுக்கேட்கிறாயா
மூவர்ணக்கொடியே!
தியாக உடல்களின் துணி கிழித்து
எங்கள் இதயங்கள் கொண்டு
தைத்த
எங்கள் இன்னுயிர்க்கொடியல்லவா நீ?
சமுதாய நீதியின் வெளிச்சமாய்
ஒரு "ஆகஸ்டு பதினைந்தை"
எங்களின்
இனியதோர் விடியல் ஆக்கு !
அதுவரை
எங்கள் நாளங்களும் நரம்புகளும்
புடைத்துக்கொண்டே இருக்கும்
துடித்துக்கொண்டே இருக்கும்.
"ஜெய்ஹிந்த்"

கவிஞர்
ருத்ரா இ.பரமசிவன்
ruthraasivan@gmail.com

22. பெரியவா

– ருத்ரா இ.பரமசிவன்

இது
அறிந்தவருக்கும்
புரிந்தவருக்கும்
மட்டுமே
மந்திரச் சொல்.
நானும் கூட என்மனைவியுடன்
அவருக்கு
கனகாபிஷேகம்

நடைபெற்ற ஆண்டு.
இந்து மதத்தின் பொய்மைக்கூடு
எனும் பெரிய முட்டையில்
ஊர்ந்து கொண்டிருந்த எறும்பு அவர்.
கடைசி வரை அதை
சுற்றிச் சுற்றிப்பார்த்து
சூட்சுமம் அறிய முயன்றார்.
நான் பார்க்கும் போது
அந்த பொய்மைக்குளியலில் தான்
கனத்த கண்ணாடிகளின் வழியே
விறைத்து வெறித்துக்கொண்டிருந்தார்.
கியூவில் நின்று
கண்டோம்.
தங்க மழை என்றார்கள்.
ஏன்
ஆன்மா
தங்கத்தில் தான் கரைசல் ஆகுமா?
அதனால் தான்
பிரம்மனை
ஹிரண்ய கர்ப்பன் என்கிறார்களா?
அவன் விந்தணு கூட
ஹிரண்ய ரேதஸ் தானா?
ராமகிருஷ்ணர்

ஒரு தடவை மெத்தையில்
இரண்டு மூன்று மெத்தையை
சேர்த்து வைத்த ஒரு மெத்தையில்
படுக்க வைத்தார்களாம்.
அப்போதும் அதில்
அவர் படுக்கவில்லையாம்
ஏதோ உறுத்தியதாம்.
என்ன ஏது? என்று பார்த்தார்களாம்
அடியில்
ஒரு தங்க நாணயம் இருந்ததாம்.
எனவே
தங்கத்தின் ருசியெல்லாம்
பக்தனின் ருசி.
கடவுள் ருசியும் அப்படியே.
பக்தர்களின்
பசியும் ருசியும்
கடவுள் மேல் ஏறியது.
பசியில்லாமல்
கல்லும் மண்ணும் கூட இல்லை.
எல்லாமே இங்கு பசி.
தீரும் பசியை
தீரா பசி தின்னு கொண்டே இருக்கும்.
பிணம் இஸ் ஈக்குவல் டு உயிர்
எனும்
விளக்கெண்ணெய் தத்துவமே
அத்வைதம்.
அது அதாக புரிய அல்லது தெளிய
பிறந்து பார்த்து
இறந்து பார்த்து
பிறந்து பார்த்து
இறந்து பார்த்து
....
....
அஸ்பர்ஸ யோகம்!
பிறப்பு இறப்புகளை
தொடாத உயிராக
நான் உலவுவது எப்படி?
"நான்" என்பதிலிருந்த
என் உயிர் சதை எலும்பு ரத்தம்
இன்னும் ஆத்மாவையும் உள்ளிட்ட
எல்லா மண்ணாங்கட்டியையும் தான்
உறிஞ்சிய பிறகு மறுபடியும்
உலவுவது?
உடனே ஆவி அப்படி இப்படி என்று
பேத்தக்கூடாது!

எது அந்த மெய்மை?
ஒரு பூச்சியின்
கூழ் சதை சிறகு உயிர்
எல்லாவற்றையும்
தின்றுவிட்ட எறும்புகள்
இன்னும் அந்த
எலும்பு மிச்சங்களை
இழுத்துக்கொண்டு போவது போல்
அந்தக் கேள்வி
இழுத்துக்கொள்ளப்பட்டு
நகர்ந்து கொண்டிருக்கிறது!

ஸீரோவைப் புரட்டிப்பார் இன்ஃபினிடி.
இன்ஃபினிடியை திருப்பிப்போடு ஸீரோ
என்றும்
ஒரு மொட்டைக்கணக்கு உண்டு.
இந்த இன்ஃபினிடி கணிதத்தின்
தீர்வு கண்ட
மெய்யியல் விஞ்ஞானி
எனக்குள்
பிம்பம் காட்ட
எவர்
எப்போது வருவாரோ
காத்திருக்கிறேன்
எரியும் வரட்டிகளில்
நான் காணாமல் போகும் வரை.

***

23. ஒரு தரிசனம்

– ருத்ரா இ.பரமசிவன்

அந்த சொரிநாய்
லாரியில் அடிபட்டு
செத்து விழுந்தது.

யாருக்கும் கவலை இல்லை.
அதைச்சுற்றி
போலீஸ்காரர் சாக்பீஸால்
வட்டம் போடவில்லை.
போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டு
வாகனங்கள்
சந்து பொந்துகளுக்கு
திருப்பிவிடப்படவில்லை.
அந்த நாயின் சடலம்
காலபைரவரின்
கசங்கிப்போன
வாகனம் அல்லவா?
ஆனாலும் அது
கண்டு கொள்ளப்படவில்லை.
பக்கத்துக் கோயிலில்
எண்ணெய்ப் பிசுக்கில்
பளபளப்பாய்
கால மூர்த்தியின்
உற்ற தோழனாய்
இருக்கும்
அந்த சிலை
இங்கே ரோட்டின் ஓரத்தில்
ரத்த குங்குமத்தில்
சத்தமின்றிக் கிடந்தது.
திருச்சங்குகள் முழங்காத
உடுக்கைகள் ஒலிக்காத
திருவாதிரைக்காட்சி அது.

சாவதற்கு முன் அது
எந்தக் காலை தூக்கியிருக்கும்?
இடது காலோ
வலது காலோ...
காலைத்தூக்கிய
ஊர்த்துவ தாண்டவங்களின்
ஊளைக்குரல்கள் அங்கே
மௌனத்தில்
திருப்பள்ளியெழுச்சி பாடின.
அந்த சிவன் "சிவனே" என்று
அங்கு கிடந்தது.
ஐந்து சபையில்
அது என்ன சபை ?
எலும்பும் சதையுமாய் கிடக்கும்
அந்த சபையில்
சில காக்கைகள் வந்து
பதஞ்சலிகளாயும் வியாக்கிர
பாதர்களாயும்
சூத்திரங்கள் கத்தின.

கோவிலைச்சுற்றி மக்களின்
ஈசல்கள்.
ஈசன் விளையாட்டின்
"ஈக்குவேஷன்களை" புரிந்து கொள்ளாத
ஈக்களின் கூட்டங்கள்.
இறப்பெல்லாம் பிறப்பு.
பிறப்பெல்லாம் இறப்பு.

நாய் பிடிக்கும் வண்டியோடு
சுறுக்கு கம்பிகளுடன்
சிவனின் பூதகணங்கள் போல

வந்த சிறு கும்பல்
அந்த நாய்க்குப்பையை
துப்புரவு செய்யும் முன் கொஞ்சம்
துப்பறியத் துவங்கியது.

"எந்த லாரிடா இப்டி அடிச்சு போட்டது"
"தெரியலை"
"சாதி நாயான்னு பாருடா"
"சாதியா?
இந்த சாதிகளுக்கெல்லாம்
எந்த லாரிடா வரப்போகுது?"
"அது இருக்கட்டும்டா
உடம்புலே டிசைன் டிசைனா
அந்த கலரப் பாரு"
நெத்தியிலெ பாரு
நாமம் போட்ட மாதிரியாவும் இருக்கு
விபூதிப்பட்டை மாதிரியும் இருக்கு"
அதன் வர்ணத்தைப்பற்றிய
நேரடி வர்ணனை அது.
எந்தப் பேட்டை நாயோ.
அதன் கோத்திரம் என்ன?
நைத்ரூபமா?
நசிகேதமா?
"அடேய் ஆணா பொட்டையா பாருடா."
"ஆண்தாண்டா"
"ஆனா கழுத்தில் பட்டை இருக்குடா.
வீட்டு நாய் தான்"
அடையாளம் கண்டுகொண்ட குஷியில்
இந்த கரிசனம் மட்டுமே
அங்கு இருந்தது.
அது என்ன ஆருத்ரா தரிசனமா? என்ன
ஓதுவார்கள்
முப்பது திருவெம்பாவை பாட்டுகள்
பாட.
அத்துடன்
குப்பையும் காலி.
கும்பலும் காலி.

***

24. தேடிக்கொண்டிருக்கிறேன்

– ருத்ரா இ.பரமசிவன்

அதைத்தான் இன்னமும்
தேடிக்கொண்டிருக்கிறேன்.
கால்சட்டை போட்டுக்கொண்டு
கோலி விளையாடிய போது அவன்
மொழியை உடைத்து விடவேண்டுமே
என்ற வெறியைத்தேடினேன்.
தட்டாம்பூச்சி சிறகுகளை
காதோடு காதாக
ஒட்டிவைத்துக்கொண்டு
கிர்ரென்று அது போடும்
ஓசைக்குள்
அர்த்தம் புரியாத
நியாய வைசேடிகத்தையும்
பூர்வ உத்தர மீமாம்சங்களையும்
தேடினேன் என்று
சுருக்கம் விழுந்த வயதுகளில்
நினைவுகளை சவைத்துத் துப்பும்போது
தெரிந்து கொண்டேன்.



அவளிடம் என்ன இருந்தது என்று
தெரியாமலேயே
அவளிடம் இன்று வரை
தேடிக்கொண்டிருக்கிறேன்.
வேறு வேறு கூட்டில்

இருவருக்கும்
ஆறேழு குஞ்சுகள்
சிறகடித்துக்கிடந்த போதும்
காதல் என்ற பிசின் எங்கோ
ஒட்டிக்கொண்டிருக்கிறதே
இன்னமும் அதைத்
தேடிக்கொண்டிருக்கிறேன்.

தேடல் ஒரு கவிதை.
தேடல் ஒரு காதல்.
தேடல் ஒரு காமம்
தேடல் ஒரு கடவுள்.
இன்னும் எதையெல்லாம்
தேடவேண்டும்
என்று
கன்ன நரம்புகள் புடைக்க
தேடுவதும்
ஒரு தேடல்.
தேடலே அறிவு.

இப்படித் தேடுவது என்பது
டி.என்.ஏ, ஆர்.என்.ஏக்களின்
அமுத ஊற்றுகளின் சங்கிலி.
கடவுள் என்பவனுக்கு
இந்த ஊற்றுகளை
சுவைக்க முடியாது.
இந்தப் பிரபஞ்சத்தை வெற்றிலை
மடித்து
பாக்கு புகையிலையோடு
நுண்ணிய கணிதத்தில் சுருட்டி
வாயில் போட்டு
"ப்ரேன் காஸ்மாலஜி" என்று
மூளையோடு குதப்பிக்கொள்ள
அந்தக் கடவுளுக்குள்
ஒரு "எட்வர்டு விட்டன்"
இறங்கித் தூர் எடுக்கவேண்டுமே.
"குவாண்டம் நுரை"கோட்பாடு வரை
சூன்யத்துள் சூன்யத்தையே
பாதாளக்கரண்டி போட்டு..

ஹிக்ஸ் போஸான் தான்
அந்த ரகசியம் என்று
ஆற்றல் பிழம்பை உடைத்து
அந்த கொட்டையை எடுக்க
செர்ன் எனும் அணுவுலைக்குள்
நோண்டி நொங்கு எடுக்க..
தேடிக்கொண்டிருப்பதில்
அவனையும்
எப்படிக் கட்டி
இழுத்துக்கொண்டிருப்பது?

கும்பாபிஷேக நெய்ப்பிசுக்கில்
அவன் நாக்கினால்
சப்பிக்கொண்டிருக்கட்டும்.
நான் தேடுவதில்
பிரபஞ்ச நரம்புக்கூட்டங்கள்
தாறு மாறாய் கலைந்து கிடக்கின்றன.
பேசாமல் அந்தத் தர்ப்பணங்களை
அவன் தின்று கொண்டிருக்கட்டும்.
துருப்பிடித்த ஸ்லோகங்களை
டிங்கரிங்க்கு அனுப்பி அல்லவா
நிமிர்த்திப்பார்க்க வேண்டும்.
கடவுளைக் கடவுளே
ஒரு நாள் கூட நிமிர்த்திவைத்து
பார்த்ததில்லை.
நானும் அதைத்தான் தேடுகிறேன்.
அவனுக்குப்பதில்
அவனுக்காக நான்
தேடிக்கொண்டிருக்கிறேன்...

அவன் என்னைத்தான் தேடுகிறான்
என்று
தெரியாமல்
இன்னமும் நான் அவனை
தேடிக்கொண்டிருக்கிறேன்.

***

25. மதம்

– ருத்ரா இ.பரமசிவன்

உங்கள் உடம்பில்
பச்சை குத்திக்கொள்ளுங்கள்.
உங்கள் உடம்பில்
எதில் வேண்டுமானாலும்
பச்சை குத்திக்கொள்ளுங்கள்.
உங்கள் உடம்பில்
எங்கு வேண்டுமானாலும்
பச்சை குத்திக்கொள்ளுங்கள்.
உங்கள் அழகு
எங்கள் அசிங்கம்.
அசிங்கத்தை
சமுதாயத்தின் மீது
பச்சைக்குத்திவிட
உங்களுக்குத் துளியும் உரிமை
இல்லை.
பச்சைப்பொய்களை
நிரந்தரமாகக் குத்திக்கொண்டால் அது
உண்மை ஆகாது.

***

26. என்னை உரித்துக்கொண்டு...

– ருத்ரா இ.பரமசிவன்

எனக்குள் நான் இயல்பாய் இல்லை.
யார் என்னைப் பிதுக்கிக் கொண்டு
வெளியேறுகிறார்கள்?
நாலு தலைமுறைக்கு முந்திய ஏதோ
ஒரு பிறவி
தலை விரிகோலமாய் வெளியே
வருகிறது.
வயது முடியாமல் எங்கேயோ ஒரு
புளிய மரத்துக்கிளையில்
கயிற்றில் தொங்கி விட்டு
இப்போ சர சரவென்று கீழே இறங்கி
ஓடுகிறது.
என் எதிரில் உட்கார்ந்து சாவதானமாய்
கேட்கிறது.
சமணத்துறவிகளை குடைந்து
குடைந்து கேட்கிற
சங்கராசாரியார் பாஷ்யம்போல்
வாதராயணர் போல் கேட்கிறது.
காரணம் எது? காரியம் எது?

இரண்டுமேயாகவும் இரண்டுமே
இல்லாமலும்
பரமாத்மாவுக்கு முந்திய ஜீவாத்மாவும்
ஜீவாத்மாவின் யோனிக்குள்
தங்கியிருக்கிற பரமாத்மாவும்
....
இன்னும் வாய்க்குள் நுழையா
சமஸ்கிருத கொத்து கொத்தான
சொற்றொடர் கொண்டு
அது துளைத்துக்கொண்டே இருந்தது.
காலம் பின்னோக்கிக்கொண்டே போய்
காலம் காலத்திலிருந்தே கழன்று
கொண்டது போல்
காலம் அறுந்து விழுந்தது.
யார் அது? எது அது?
திடீரென்று நாமக்கல் கோவில்
தெய்வம்
கனவில் வந்து
எலிப்டிக் ∴ பங்க்ஷனின் க்யூப்த் ரூட்
சொல்யூஷன்
சொல்லிச்சென்றதே அந்த தியரம்
சொல்லு
என்று ராமானுஜனாய் ஒரு
விஸ்வரூபக் குரல் கேட்கிறது!
அது 2105 ஆம் ஆண்டின் நுணுக்கமான
"ப்ரேன் காஸ்மாலாஜியின்"
கணித விவரம்..
என்ன இது? எதுவும் புரிய வில்லை.
நான் ஹீப்ருவில் கூட ஓல்டு
டெஸ்டாமெண்டை
அப்படியே ஒப்பிக்கிறேனாம்.
என்னை உரித்துக்கொண்டு
நிர்வாணமாய் ஓடியது யார்?
கோடி பறக்குது! கடல் துடிக்குது!ஒலி
பெருக்கி வலியைப் பெருக்கியது.
ராவெல்லாம் என் நாக்கில் கோடாங்கி
அதிர்ந்ததாம்.
அப்பா பதறி விட்டார். அம்மா அழுது
புரண்டாளாம்.
விடிந்தது.
முக்கு வீட்டுச் சாமியாடி
பூதப்பாண்டிக்கு
ஆள் போயிருக்கிறது.

***

27. உன்னோடு நானிருந்த பொழுதுகள்

– காசுமி

உன்னோடு நானிருக்கும் போதுகளில்
என்னை நான் மறக்கிறேன்
உன்னோடு நானிருக்கும் போதுகளில்
உன்னைத்தான் பார்க்கிறேன்
உன்னோடு நானிருக்கும் போதுகளில்
என்னைத்தேடி அலைகிறேன்
உன்னோடு நானிருக்கும் போதுகளில்
விண்ணைத்தான் காண்கிறேன்
உன்னோடு நானிருக்கும் போதுகளில்
உன்னுள்தான் புதைகிறேன்
உன்னோடு நானிருக்கும் பொழுதுகளில்
மட்டுமே நான் கருவுறுகிறேன்

***

தமிழ் மரபு அறக்கட்டளையின் வெளியீடுகள்

தமிழ் மரபு அறக்கட்டளையின் - மின்னூல்கள்:

THF Announcement: E-books update: 31/07/2016: தாகூரின் தமிழ்க் கீதாஞ்சலி

THF Announcement: E-books update: 04/09/2016: குருபரம்பராப்ரபாவம்

THF Announcement: E-books update: 11/09/2016: ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவம்

THF Announcement: E-books update: 09/10/2016: சிவபாத சேகரனின் தஞ்சைக் கல்வெட்டுக்கள்

தமிழ் மரபு அறக்கட்டளையின் - மரபுக் காணொளிகள்:

மண்ணின் குரல்: ஜூலை 2016: தளவானூர் குடைவரைக்கோயில் (சிவன்)

மண்ணின் குரல்: ஆகஸ்ட் 2016: முனைவர் வீ.எஸ் ராஜம் - ஒரு நேர்க்காணல்

மண்ணின் குரல்: ஆகஸ்ட் 2016: ரஞ்சன்குடி கோட்டை

மண்ணின் குரல்: அக்டோபர் 2016: ஸ்ரீ செங்கமாமுனியப்பன் திருக்கோயில்

தமிழ் மரபு அறக்கட்டளையின் - தமிழ்ப் பொழில் மின்னிதழ்கள்:

தமிழ்ப் பொழில் (1936-1937) துணர்: 12 - மலர்: 1
தமிழ்ப் பொழில் (1936-1937) துணர்: 12 - மலர்: 2
தமிழ்ப் பொழில் (1936-1937) துணர்: 12 - மலர்: 3
தமிழ்ப் பொழில் (1936-1937) துணர்: 12 - மலர்: 4
தமிழ்ப் பொழில் (1936-1937) துணர்: 12 - மலர்: 5
தமிழ்ப் பொழில் (1936-1937) துணர்: 12 - மலர்: 6
தமிழ்ப் பொழில் (1936-1937) துணர்: 12 - மலர்: 7
தமிழ்ப் பொழில் (1936-1937) துணர்: 12 - மலர்: 8

தமிழ்ப் பொழில் இதழ்கள் மின்னிதழ்களாக வெளியிடப்பட்டுள்ளன.
இவ்வெளியீடுகளையும் முந்தைய தமிழ்ப் பொழில் மின்னிதழ்கள் வெளியீடுகளையும் **தமிழ் மரபுநூலகம்** தளத்தில் - http://thfreferencelibrary.blogspot.com/ காணலாம்

(cc) BY-SA
THE TEXT IN THIS ISSUE BY Tamil Heritage Foundation IS LICENSED UNDER A CREATIVE COMMONS ATTRIBUTION-SHAREALIKE 4.0 INTERNATIONAL LICENSE.

Tamil Heritage Foundation
தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials
e-Book series
an international NGO initiative to digitize old Tamil books and palm leaf manuscripts
visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை
தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை

மின்தமிழ் மேடை

“தமிழின் தொன்மையை அறிவோம் அதன் வரலாற்றைக் காப்போம்”

தமிழ் மரபு அறக்கட்டளை (www.tamilheritage.org)

வெளியிடும் காலாண்டு மின்னிதழ்

மின்தமிழ்மேடை - காட்சி: 7

அக்டோபர் - 2016

THF
தமிழ் மரபு அறக்கட்டளை